
# இணையக் காத்திருக்கும் இருபெரும் சமூகங்கள்




## இயேசு கிறிஸ்து..

(அவர் மீது இறைசாந்தி உண்டாவதாக!)

- உலகின் இரு பெரும் மதங்களான கிறிஸ்தவத்தையும் இஸ்லாத்தையும் பின்பற்றி வரும் அனைவராலும் போற்றப்படும் மகான் அவர்!
- இம்மாபெரும் மதங்களை பின்பற்றுவோரை இணைக்கும் பாலம் அவர்! இரு சாராராலும் ஆவலோடு எதிர்பார்க்கப்படுபவர்!
- மீண்டும் இப்பூமிக்கு வரும்போது இவர்கள் அனைவரையும் ஒன்றிணைக்கப் போகிறவர் அவர்!
- அத்தகையதோர் அரிய ஆத்மாவின் வருகையில் யார்தான் மகிழ்ச்சி கொள்ளாமல் இருக்க முடியும்?


اللَّهِ مَن يَهْدِ اللَّهُ فَهُوَ الْمُهْتَدِ وَمَن يُضْلِلْ
فَلَن تَجِدَ لَهُ وَلِيًّا مُّرْشِدًا ﴿١٧﴾ وَتَحْسَبُهُمْ أَيْقَاظًا
وَهُمْ رُقُودٌ وَنُقَلِّبُهُمْ ذَاتَ الْيَمِينِ وَذَاتَ
الشِّمَالِ وَكَلْبُهُم بَاسِطٌ ذِرَاعَيْهِ بِالْوَصِيدِ
لَوِ اطَّلَعْتَ عَلَيْهِمْ لَوَلَّيْتَ مِنْهُمْ فِرَارًا وَ
لَمُلِئْتَ مِنْهُمْ رُعْبًا ﴿١٨﴾ وَكَذَٰلِكَ بَعَثْنَاهُمْ لِيَتَسَاءَ
لُوا بَيْنَهُمْ قَالَ قَائِلٌ مِّنْهُمْ كَمْ لَبِثْتُمْ قَالُوا لَبِثْنَا
يَوْمًا أَوْ بَعْضَ يَوْمٍ قَالُوا رَبُّكُمْ أَعْلَمُ بِمَا
لَبِثْتُمْ فَابْعَثُوا أَحَدَكُم بِوَرِقِكُمْ هَٰذِهِ
إِلَى الْمَدِينَةِ فَلْيَنظُرْ أَيُّهَا أَزْكَىٰ طَعَامًا
فَلْيَأْتِكُم بِرِزْقٍ مِّنْهُ وَلْيَتَلَطَّفْ وَلَا يُشْعِرَنَّ
بِكُمْ أَحَدًا ﴿١٩﴾ إِنَّهُمْ إِن يَظْهَرُوا عَلَيْكُمْ



# மனித மனங்களில் பாதுகாக்கப்படும் பெட்டகம்

கடந்த வருடம் பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் பாதுகாக்கப்பட்டு இருந்த திருக்குர்ஆன் கையெழுத்துப் பிரதிகளை ரேடியோ கார்பன் பரிசோதனைக்கு உட்படுத்திய ஆராய்ச்சியாளர்கள், இது கி.பி. 568 மற்றும் 645-க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கும் என 95.4 சதவீதம் அளவுக்கு துல்லியமாக கணித்துள்ளனர்.


(ஆதாரம்: http://www.birmingham.ac.uk/news/latest/2015/07/quran-manuscript-22-07-15.aspx)

மேலே படத்தில வலது பக்கத்தில் உள்ள அந்த கையெழுத்துப் பிரதிக்குப் பக்கத்தில் இருப்பது இன்றைய கம்ப்யூட்டர் பிரதி. இரண்டும் அட்சரம் பிசகாமல் அப்படியே இருப்பதைக் காணலாம். உலகில் எந்த நாட்டில் எந்த மூலையில் இருந்து முஸ்லிம்களின் பயன்பாட்டில் உள்ள ஒரு குர்ஆன் பிரதியை எடுத்து பரிசோதித்தாலும் இதே ஒற்றுமையை நீங்கள் காணமுடியும்.

உலகெங்கும் உள்ள இஸ்லாமியர்களைப் பொறுத்தவரை இது ஆச்சரியத்துக்குரிய ஒரு செய்தி அல்ல என்ற கூறலாம். ஏனெனில் அருளப்பட்ட காலம் முதல் இது இன்றுவரை திருக்குர்ஆனை மூல மொழியில் ஓதிவருவது அவர்களின் பழக்கமாக உள்ளது. ஒலிவடிவிலேயே முழுக் குர்ஆனும் உலகெங்கும் பிரபலமாகி இருப்பதால் அதை யாரும் சிதைக்க முடியாது என்பதை அவர்கள் உணர்ந்துள்ளார்கள்.

இனி இறுதிநாள் வரை உலகில் தோன்ற இருக்கும் அனைத்து மனிதர்களுக்கும் இதுவே நேர்வழியை அறிவதற்கான வழிகாட்டு நூலாக இருப்பதால் இதன் பாதுகாப்பை இறைவனே ஏற்றெடுத்துள்ளதாக அவன் குர்ஆனில் குறிப்பிடுகிறான்:

● **“நிச்சயமாக நாமே இந்த நினைவூட்டலை (குர்ஆனை) இறக்கியிருக்கிறோம். நிச்சயமாக நாமே இதைப் பாதுகாப்போம்”(திருக்குர்ஆன் 15:9)**


عَلَيْهِم مَّسْجِدًا ﴿٢١﴾ سَيَقُولُونَ ثَلَاثَةٌ رَّابِعُهُمْ
كَلْبُهُمْ وَيَقُولُونَ خَمْسَةٌ سَادِسُهُمْ كَلْبُهُمْ
رَجْمًا بِالْغَيْبِ وَيَقُولُونَ سَبْعَةٌ وَثَامِنُهُمْ
كَلْبُهُمْ قُل رَّبِّي أَعْلَمُ بِعِدَّتِهِم مَّا يَعْلَمُهُمْ
إِلَّا قَلِيلٌ فَلَا تُمَارِ فِيهِمْ إِلَّا مِرَاءً ظَاهِرًا وَلَا
تَسْتَفْتِ فِيهِم مِّنْهُمْ أَحَدًا ﴿٢٢﴾ وَلَا تَقُولَنَّ



அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய
ஏக இறைவனின் பெயரால்..

# இணையக் காத்திருக்கும் இருபெரும் சமூகங்கள்

(திருக்குர்ஆன் நற்செய்தி மலர் மாத இதழில்
வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு)



எல்லாம் வல்ல ஏக இறைவன் மீதும் இறைவேதங்கள் மற்றும் இறைத்துதர்கள் மீதும் இறுதித் தீர்ப்பு நாளின்மீதும் மறுமை வாழ்க்கையின் மீதும் உறுதியான நம்பிக்கை கொண்ட மாபெரும் இரு சமூகங்கள்தாம் கிறிஸ்தவரும் இஸ்லாமியரும். இவர்கள் ஒன்றாக இணைந்து விட்டால் பூமியில் அதர்மம் அழிந்து அங்கு  தர்மம் நிலைநாட்டப்பட்டு விடும் என்பதை மனிதகுல விரோதியான ஷைத்தான் நன்றாகவே அறிவான். அந்த ஒற்றுமையைத் தடுப்பதற்காக ஷைத்தான் இருசாராரிடமும் விதைத்துள்ள கசப்பான எண்ணங்களையும் தவறான புரிதல்களையும் அகற்றி அவர்களளைடையே பரஸ்பர நல்லெண்ணத்தையும் நல்லிணக்கத்தையும் சகோதரத்துவத்தையும் நிலைநாட்டுவதற்கான சிறு முயற்சியே இந்த சிறு நுல்!

islamicvector.com

# அடிப்படைச் சொற்கள் அறிமுகம்

திருக்குர்ஆனிலும் முஸ்லிம்களின் இடையேயும் புழங்கும் சில அரபு மொழிப் பதங்களை முதலில் தெளிவுபடுத்துவோம்.


## அல்லாஹ் என்றால் யார்?

இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவனைத் திருக்குர்ஆன் அரபுமொழிச் சொல்லான 'அல்லாஹ்' என்ற வார்த்தையால் குறிப்பிடுகிறது. ஆங்கிலத்தில் காட், தமிழில் கடவுள், ஹிந்தியில் பகவான் என்றெல்லாம் குறிப்பிடப்படுவது போல் அரபு மொழியில் கடவுளைக் குறிக்கும் வார்த்தைதான் அல்லாஹ்! எனினும் மற்ற மொழி வார்த்தைகளோடு ஒப்பிடும் போது இவ்வார்த்தைக்கு ஓரிரு தனிச் சிறப்புக்கள் உள்ளன:

இவ்வார்தையின் உண்மைப்பொருள் 'வணங்குவதற்குத் தகுதி வாய்ந்த ஒரே இறைவன்' என்பது. இவ்வார்த்தைக்கு ஆண்பால் பெண்பாலும் கிடையாது, பன்மையும் கிடையாது. எப்போதும் இது ஒருமையிலேயே விளங்கும். உதாரணமாக ஆங்கில வார்த்தை God - Gods , Godess அல்லது கடவுள் - கடவுளர்கள் என்றும் பகவான் - பகவதி என்றும் பன்மைக்கும் பாலுக்கும் ஏற்றவாறு மாறுவதுபோல் அல்லாஹ் என்ற வார்த்தை ஒருபோதும் சிதைவதில்லை.

இப்படிப்பட்ட சிறப்புக்களின் காரணத்தால் உலகெங்கும் முஸ்லிம்கள் இறைவனை அல்லாஹ் என்ற வார்த்தை கொண்டு அழைக்கின்றனர். மாறாக அல்லாஹ் என்றால் அரபு நாட்டுக் கடவுள் என்றோ முஸ்லிம்களின் குலதெய்வம் என்றோ நினைத்து விடாதீர்கள்.

## இஸ்லாம் என்றால் என்ன?



ஒரு தொழிற்சாலையையோ பள்ளிக் கூடத்தையோ இராணுவத்தையோ மருத்துவ மனையையோ எடுத்துக் கொள்ளுங்கள். பலமக்களும் சேர்ந்து இயங்கும் இவை உரிய பயன் தரவேண்டுமாயின் அங்கு ஒரு உறுதியான தலைமையும் வரையறுக்கப்பட்ட விதிமுறைகளும் ஒழுங்கும் இருந்து அவை எல்லோராலும் பின்பற்றப்படுதல் வேண்டும். அதைப்போலவே நாம் வாழும் இந்த உலகத்திலும் இவ்வுலகிற்கு சொந்தக்காரனான இறைவனின் தலைமையை ஏற்று அவன் கற்பிக்கும் விதிமுறைகளையும் ஒழுக்கத்தையும் பின்பற்றினால் வாழ்க்கை பயனுள்ளதாக அமையும். மனிதனைத் தவிர மற்ற படைப்பினங்கள் அனைத்தும் இந்த முறையில் பயனுள்ளவையாக அமைந்துள்ளதை இயற்கையில் காணலாம்.

இஸ்லாம் என்றால் அதன் பொருள் கீழ்படிதல் என்பது. அதன் இன்னொரு பொருள் அமைதி என்பதாகும். அதாவது இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவன் கூறும் ஏவல் விலக்கல்களுக்குக் கீழ்படிந்து வாழும்போது தனிநபர் வாழ்விலும் அதன்மூலம் சமூக வாழ்விலும் கட்டுப்பாடும்(discipline) நல்லொழுக்கமும் உண்டாகிறது.

அதன்மூலம் ஏற்படும் அமைதிக்குப் பெயரே இஸ்லாம் எனலாம். அவ்வாறு பேணுதலோடு வாழ்வோருக்கு மறுமையிலும் அமைதி தொடர்கிறது... அதாவது நிரந்தர இன்பங்கள் நிறைந்த சொர்க்கம் அவர்களுக்குப் பரிசாக வழங்கப்படுகிறது என்பது இந்த இறைமார்க்கம் முன்வைக்கும் தத்துவமாகும்.

## முஸ்லிம் என்றால் யார்?

முஸ்லிம் என்றால் கீழ்படிபவன் அல்லது கீழ்படிபவள் என்று பொருள். இறைவன் தன் வேதங்கள் மூலமாகவும் தூதர்கள் மூலமாகவும் கற்றுத் தரும் நல்லொழுக்க நெறிகளை யார் வாழ்வில் பின்பற்றி நடக்கின்றார்களோ அவர்களே முஸ்லிம்கள் எனப்படுவர்.. ஒரு தொப்பியோ தாடியோ வைப்பதனாலோ அல்லது அரபியிலோ உருது மொழியிலோ பெயர் வைப்பதனாலோ யாரும் முஸ்லிம் ஆகி விட முடியாது. ஒரு முஸ்லிம் தாய் தந்தையருக்குப் பிறந்து விட்டாலும் ஒருவர் முஸ்லிம் ஆக முடியாது. முழுக்க முழுக்க ஒழுக்கத்தை பின்பற்றுதல் மூலமே ஒருவர் முஸ்லிம் ஆக முடியும்.

ஆக, இந்த அடிப்படையில் இறைவனுக்குக் கீழ்படியும் பண்பு யாரிடம் எல்லாம் இருக்கிறதோ, அவர்கள் எந்த மதத்தில் பிறந்திருந்தாலும் சரி, எம்மொழியில் பேசினாலும் சரி, உலகின் எந்த மூலையில் பிறந்திருந்தாலும் சரி....... மட்டுமல்ல அவர்கள் எக்காலத்தில் வாழ்ந்திருந்தாலும் சரி, அனைவரும் முஸ்லிம்களே! இதுதான் எமக்கு இஸ்லாம் கற்றுத்தரும் பரந்த கண்ணோட்டமாகும்.

## பாவம் மற்றும் புண்ணியம்

இவை நமது மொழிவழக்கில் உள்ள வார்த்தைகளேயானாலும் இவற்றையும் பெரும்பாலான மக்கள் தவறாகவே புரிந்து வைத்துள்ளனர். ஒரு சிலர் பெற்றோர்கள் அல்லது முன்னோர்கள் எதை செய்யக் கூடாது என்று கற்பித்தார்களோ அதையே பாவம் என்று கருதுகின்றனர்.

சிலர் நாட்டு மக்கள் அல்லது பெரும்பான்மை எதை தீமை என்று தீர்மானிக்கிறார்களோ அதையே பாவம் என்று கருதுகின்றனர். இன்னும் சிலர் தங்களது மனோ இச்சை எதை தீமை என்று சொல்கிறதோ அதையே பாவம் என்பர். இவ்வாறே புண்ணியத்தையும் தீர்மானிக்கின்றனர்.



ஆனால் நாம் புரிந்துகொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால் இந்த உலகத்துக்கு உரிமையாளனும் பரிபாலகனும் ஆன இறைவன் அவனுக்கு மட்டுமே பாவம் எது புண்ணியம் எது என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் உள்ளது என்பதே. அவனே அனைத்துப் படைப்பினங்களின் நுணுக்கங்களையும் தேவைகளையும் முழுமையாக அறிந்தவனும் அவை ஒவ்வொன்றினதும் உரிமைகளை பங்கிடக் கூடியவனும் அவனே. எல்லாவற்றையும் விட முக்கியமாக மறுமையில் இறுதித்தீர்ப்பு நாளன்று நமது வினைகளை விசாரித்து தீர்ப்பு வழங்க உள்ளவனும் அவனே. எனவே இறைவன் எதை செய்யாதே என்று தடுக்கிறானோ அதுவே பாவம்! எதை நம்மை செய் என்று ஏவுகிறானோ அதுவே புண்ணியம்!

# இறைத்தூதர்கள் வரிசையில் முஹம்மது நபியும் இயேசு நாதரும்

ஒன்றே மனித குலம்! ஒருவனே இறைவன், அவன் மட்டுமே வணக்கத்துக்கு உரியவன்! அவன்பாலே நம் மீளுதல், அதன் பிறகே நித்திய வாழ்வு! என்ற மனித வாழ்வின் அடிப்படை உண்மைகளை மனித மனங்களில் விதைத்து மக்களை நேர்வழிப்படுத்த அந்த மனிதர்களில் இருந்தே புனிதர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைத் தன் தூதர்களாக நியமித்தான் இறைவன். அந்த இறைத்தூதர்களை உலகின் பல்வேறு பாகங்களுக்கு பல்வேறு காலகட்டங்களில் அனுப்பி வந்துள்ளான். அவர்கள் அனைவரும் தத்தமது மக்களை நோக்கி கீழ்கண்ட சத்திய போதனைகளைச் செய்தார்கள்:

- மக்களே, உங்களைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவன் ஒருவனே அவனுக்கு நன்றி உள்ளவர்களாக வாழுங்கள். அவனையே வணங்குங்கள்.அவன் மட்டுமே உங்கள் பிரார்த்தனைகளுக்கு பதில் அளிக்கக்கூடியவன். அவனை விடுத்து படைப்பினங்களை ஒரு போதும் வணங்காதீர்கள். அவ்வாறு செய்தால் பிரிந்து விடுவீர்கள்.

- இன்று நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் தற்காலிக உலகம் ஒருநாள் அழிக்கப்படும். பிறகு உங்கள் வினைகளை விசாரித்து அதற்கான கூலி வழங்குவதற்காக இறுதித்தீர்ப்பு நாள் ஏற்படுத்தப்படும். அன்று நல்லோருக்கு சொர்க்கமும் தீயோருக்கு நரகமும் விதிக்கப்படும். எனவே இறை கட்டளைகளைப் பேணி வாழுங்கள்.சொர்க்கத்தை அடையலாம். மாறாக ஷைத்தானுக்கும் மனோ இச்சைகளுக்கும் அடிபணிந்தால் நரகத்தை அடைவீர்கள். அவைதான் உங்கள் நிரந்தர வாழ்விடமாக இருக்கும்.

### முன்மாதிரி புருஷர்கள்

அவ்வாறு வந்த இறைத்தூதர்கள் தத்தமது மக்களுக்கு பாவம் எது புண்ணியம் எது என்பதை விளக்கிக் கூறுவதோடு ஒரு முன்மாதிரி புருஷர்களாகவும் அம்மக்களிடையே வாழ்ந்து காட்டுவார்கள். இவ்வாறு அவர்கள் தத்தமது நாடுகளில் அந்த மக்களோடு இணைந்து தர்மத்தை நிலை நாட்டுவார்கள். மக்களும் கலப்படமில்லாத ஏக இறைவழிபாடு மூலம் ஒன்றிணைந்த நல்லொழுக்கமுள்ள சமூக வாழ்வில் சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் அமைதியையும் அனுபவிப்பார்கள்.

### பிறகு எவ்வாறு அதர்மம் தலை தூக்கிற்று?

இதற்கான விளக்கத்தை அறிய உதாரணமாக ஒரு குறிப்பிட்ட ஊருக்கு ஒரு இறைத்தூதர் வந்து மக்களை மேற்படி போதனைகள் செய்து தர்மத்தை நிலைநாட்டுகிறார் என்று வைத்துக் கொள்வோம். இவ்வாறு தர்மம் நிலைநாட்டப்பட்ட நிலையில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் போது ஒரு நாள் அந்த இறைத்தூதர் மரணம் அடைகிறார். நிலை நாட்டப்பட்ட தர்மத்தின் தாக்கம் மேலும் தொடர்ந்து கொண்டிருக்கும். ஆனால் நாள் செல்லச் செல்ல என்ன நடக்கிறது?

### இறைத்தூதர்கள் தெய்வங்கள் ஆன வரலாறு

பிற்கால மக்களில் சிலர் இறந்து போன இறைத் தூதருக்கு அஞ்சலி

என்ற பெயரில் அவருக்கு ஒரு ஓவியத்தை வரைந்து மரியாதை செய்ய ஆரம்பிப்பார்கள். நாள் செல்லச் செல்ல ஷைத்தானுடைய தாக்கத்தால் அந்த இறைத்தூதருக்கு உருவச்சிலை வடிக்கப் படுகிறது! தொடர்ந்து மக்கள் அந்த உருவச்சிலையையே வணங்க முற்படுகிறார்கள்! என்ன விபரீதம் பாருங்கள்! 'படைத்தவனை மட்டுமே வணங்குங்கள் , மனிதர்களையோ, புனிதர்களையோ, சிலைகளையோ எதையுமே வணங்காதீர்கள்' என்று மக்களிடையே பிரச்சாரம் செய்து அவர்களை நேர்வழிப்படுத்தி தர்மத்தை நிலை நாட்டியவருக்கே உருவச்சிலை வடிக்கப்பட்டு அவரையே வணங்கும் செயல்! நாளடைவில் அதைச்சுற்றி வழிபாட்டுத்தலமும் கட்டப்படுகிறது.

(இதை உங்களால் நம்ப முடியவில்லையா? ஓர் அண்மை உதாரணத்தைப் பாருங்கள். 'கடவுளே இல்லை' என்று சிலைகளை உடைத்த பெரியாருக்கே தாங்கள் பகுத்தறிவு வாதிகள் என்று மார் தட்டிக்கொள்பவர்களே சிலை எடுத்தது மட்டுமல்ல தவறாமல் மாலை இடவும் செய்கிறார்கள்!)

இவ்வாறு இறைவன் அல்லாத ஒரு பொருளை இப்பேரண்டத்தைப் படைத்து பரிபாலித்து வரும் இறைவனுக்கு ஒப்பாக்கும் ஒரு மாபெரும் மூட நம்பிக்கைக்கு மக்கள் இடம் கொடுத்ததைத் தொடர்ந்து என்ன நடக்கிறது?

- பல மூட நம்பிக்கைகள் உடலெடுக்கின்றன.
- கடவுளுக்கு நாங்கள் தான் நெருங்கியவர்கள் , எங்கள் மூலமாகத்தான் கடவுளை நெருங்க முடியும் என்று கூறிக்கொண்டு இடைத்தரகர்களும் புரோகிதர்களும் உருவாகிறார்கள்.
- கடவுள் பெயரைச் சொல்லிக்கொண்டு மக்களை ஏய்த்துப் பிழைக்கும் ஒரு கூட்டம் புறப்படுகிறது.
- அந்நாட்டு அரசனையும் செல்வந்தர்களையும் தன கைக்குள் கொண்டு வந்து புரோகிதம் நாட்டை ஆள்கிறது.
- பாமரர்களுடையதும் சாமானியர்களுடையதும் உரிமைகள் கொள்ளை போகின்றன.
- இறைவன் அல்லாத பொருட்களைக் காட்டி கடவுள் என்று கற்பிக்கப் படுவதால் மக்களின் உள்ளத்தில் கடவுளைப்பற்றிய பயம் போய் விடுகிறது.
- தன் செயல்களுக்கு கடவுளிடம் பதில் சொல்லியாக வேண்டும் என்ற உணர்வு மழுங்கடிக்கப்படுகிறது.
- பாவங்கள் மலிந்து விடுகிறது.
- அநியாயமும் அக்கிரமங்களும் கொலைகளும் விபச்சாரமும் பெருகி வழிகின்றன.

**மீண்டும் தர்மத்தை நிலை நாட்டுதல்**

இவ்வாறு அதர்மம் பரவி நாட்டை சீர்குலைத்துக் கொண்டிருக்கும் வேளையில் மீண்டும் தர்மத்தை நிலை நாட்டுவதற்காக புதிய தூதர் ஒருவர் அனுப்பப்படுகிறார். அவர் மீண்டும் மக்களுக்கு முந்தைய

இறைத்தூதர் போதித்த அதே அடிப்படை உண்மைகளை நினைவூட்டி மக்களை மீண்டும் படைத்தவனை வணங்குமாறு அழைப்பார். அவர்கள் செய்து கொண்டிருக்கும் மூட பழக்கவழக்கங்களை எடுத்துரைப்பார். இப்போது என்ன நடக்கிறது? சிந்திக்கும் மக்கள் இவரது போதனைகளால் நல்லுணர்வு பெற்று இவரை பின் தொடர ஆரம்பிப்பார்கள். மற்றவர்களோ “இல்லை, எங்கள் மூதாதையர்கள் எதில் இருந்தார்களோ அதுவே சரி, உங்கள் போதனை எங்களுக்குத் தேவை இல்லை“ என்று மறுத்து எதிர்ப்பார்கள். அதர்மத்தையும் அக்கிரமங்களையும் மூலதனமாக கொண்டு வயிறு வளரப்போரும் அரசியல் நடத்துவோரும் இம்மக்களை முழு மூச்சாக இறைத் தூதருக்கும் சத்தியத்தை ஏற்றுக் கொண்டோருக்கும் எதிராக முடுக்கி விடுவார்கள். ஆனால் காலப்போக்கில் இறை அருள் கொண்டு தருமம் மறுபடியும் வெல்லும்! .

தொடர்ந்து புதிய இறைத்தூதரும் அவருடைய பிற்கால மக்களால் வணங்கப்படுகிறார். அவருக்கும் சிலைகளும் கோவில்களும் எழுப்பப்படுகின்றன. அந்த அதர்மமானது அவரது பெயரைச் சூட்டி ஒரு மதமாக உருவெடுக்கிறது. மீண்டும் ஒரு புதிய தூதர்.. என மீண்டும் அதே கதைத் தொடர்கிறது. இவ்வாறு வந்த தூதர்களின் வரிசையில் கடைசியாக வந்த இறைத் தூதர்தான் முஹம்மது நபி அவர்கள். அவருக்கு முன்னதாக வந்து சென்றவர்தான் இயேசு கிருஸ்து அவர்கள். (அவர்கள் அனைவர் மீதும் சாந்தி உண்டாவதாக!)

இந்த பூமியின் பல்வேறு இடங்களில் பல்வேறு காலகட்டங்களில் வந்த இறைத்தூதர்கள் அனைவருமே படைத்தவன் ஒருவனையே வணங்கி வாழுமாறு மக்களிடம் அழைப்பு விடுத்தார்கள். அவர்கள் படைப்பினங்களையோ அல்லது மனிதர்களையோ அல்லது தங்களையோ வணக்கச் சொன்னதாக எந்த ஒரு ஆதாரத்தையும் வேதங்களில் காண முடியாது.




**● (நபியே!) இவர்கள் அல்லாஹ் அல்லாதவைகளைத் கடவுள்களாக எடுத்துக் கொண்டிருக்கின்றனரா? (அவ்வாறாயின் அவர்களை நோக்கி) ”என்னுடன் இருப்பவர் களின் வேதமும், எனக்கு முன்னுள்ளவர்களின் வேதமும் இதோ இருக்கின்றன. (இவற்றிலிருந்து இதற்கு) உங்களுடைய அத்தாட்சியை நீங்கள் கொண்டு வாருங்கள்” என்று கூறுங்கள். எனினும், அவர்களில் பெரும்பாலானவர்கள் உண்மையை அறிந்து கொள்ள சக்தி அற்றவர்கள். ஆதலால் அவர்கள் (இவ்வேதத்தையும்) புறக் கணிக்கின்றனர்**

**● உங்களுக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்களுக்கெல்லாம் ”நிச்சயமாக என்னைத் தவிர வேறு இறைவனில்லை என்னையே நீங்கள் வணங்குங்கள்” என்று நாம் வஹீ (இறைச்செய்தி) அறிவிக்காமலில்லை. (திருக்குர்ஆன் 21:24,25)**

# இறைவனின் மார்க்கத்தின் அடிப்படைகள்

மனிதனின் உடலமைப்பையும் இயற்கையையும் கவனிக்கும் யாரும் அனைத்து மனித குலமும் ஒரேயொரு ஆண்பெண் ஜோடியில் இருந்து உருவாகி பூமியெங்கும் பல்கிப் பெருகியவர்களே என்பதை உணருவார்கள்.. நாம் அனைவரும் ஒரே குலத்தைச் சார்ந்தவர்கள் என்னும்போது நம் இறைவன் நமக்காக ஒரே மார்க்கத்தைத்தான் அருளியிருக்க முடியும் என்பதும் தெளிவாகிறது. அதே மார்க்கம்தான் ஒவ்வொரு காலகட்டங்களிலும் எங்கெல்லாம் நம் குடும்பங்கள் பரவியதோ அங்கெல்லாம் பற்பல தூதர்கள் மூலம் மீண்டும் மீண்டும் அறிமுகம் செய்யப் பட்டது. அதே மார்க்கமே சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் வந்த இயேசுநாதரால் போதிக்கப் பட்டது. அவரைத் தொடர்ந்து வந்த இறுதித்தூதர் முஹம்மது நபி அவர்கள் அதே மார்க்கத்தையே மறு அறிமுகம் செய்து வைத்தார்கள்.. அந்த மார்க்கத்திற்குப் பெயர்தான் “இஸ்லாம்’ என்று இன்று அரபி மொழியில் அறியப்படுகிறது.. மாறாக முஹம்மது நபி அவர்கள் புதிதாக எதையும் கொண்டுவரவும் இல்லை தோற்றுவிக்கவும் இல்லை.

## அடிப்படை உண்மைகள்

மக்கள் அடிக்கடி மறந்து போகும் கீழ்கண்ட மூன்று உண்மைகளை மனித மனங்களில் ஆழமாக விதைப்பதன் மூலம் மனிதனை பாவங்களில் ஈடுபடுவதில் இருந்து தடுத்து கட்டுப்பாடு மிக்கவனாக ஆக்குகிறது இஸ்லாம். மேலும் மூடநம்பிக்கைகளில் இருந்தும் பிரிவினை வாதங்களில் இருந்தும் விடுவித்து உலகளாவிய சகோதரத்துவத்தையும் மனித சமத்துவத்தையும் ஒற்றுமையையும் நிலைநாட்டுகிறது.

### 1. ஒன்றே குலம்:

● **மனிதர்களே! உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்த உங்கள் இறைவனை அஞ்சுங்கள்! அவரிலிருந்து அவரது துணையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும், பெண்களையும் பல்கிப் பெருகச் செய்தான். எவனை முன்னிறுத்தி ஒருவரிடம் மற்றவர்கள் கோரிக்கை வைப்பீர்களோ அந்த அல்லாஹ்வை அஞ்சுங்கள்! உறவினர்கள் விஷயத்திலும் (அஞ்சுங்கள்!) அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான். (திருக்குர்ஆன் 4:1)**



(அல்லாஹ் -வணக்கத்திற்குத் தகுதி வாய்ந்த ஒரே இறைவன்)

அதாவது நிறம், இனம், நாடு, மொழி, செல்வம், கல்வி, அந்தஸ்து, பதவி போன்றவை மூலம் உண்டாகும் வேற்றுமைகளைத் தாண்டி சக மனிதன் தன் சகோதரனே என்பதோடு அவர்கள் ஒவ்வொருவருக்கும் இந்த பூமியில் உரிமைகள் உள்ளன என்றும் அவற்றை அனைவரும் மதித்து வாழவேண்டும் என்று கற்பிக்கிறது இஸ்லாம்.

## 2. ஒருவனே இறைவன்:

● **சொல்வீராக: இறைவன் ஒருவனே, அவன் தேவைகள் அற்றவன். அவன் யாரையும் பெற்றெடுக்கவும் இல்லை. அவனையும் யாரும் பெற்றெடுக்கவும் இல்லை. அவனுக்கு நிகராக யாரும் எதுவும் இல்லை. (திருக்குர்ஆன் 112:1-4)**

இறைவனின் தன்மைகளை இவ்வாறு புரிந்து கொண்டு இடைத் தரகர்களுக்கோ மூடநம்பிக்கைகளுக்கோ வீண் சடங்கு சம்பிரதாயங்களுக்கோ இடம் கொடாமல் அவனை நேரடியாக வணங்க வேண்டும் என்று கற்பிக்கிறது இஸ்லாம்.

● **(நபியே!) என்னுடைய அடியார் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால் நிச்சயமாக நான் அவர்களுக்கு மிகச் சமீபமாக உள்ளேன். என்னை அழைத்தால் அழைப்பவரின் அழைப்பிற்கு நான் பதிலளிக்கிறேன். அவர்கள் நேர்வழி பெறுவதற்காக என்னையே அழைக்கட்டும், என்னையே விசுவாசம் கொள்ளட்டும். (திருக்குர்ஆன் 2:186)**

படைத்தவனைத்தவிர மற்றவை அனைத்தும் படைப்பினங்களே. எனவே அந்த இறைவனுக்கு பதிலாக படைப்பினங்களை வணங்குவதோ அல்லது கடவுள் என்று கற்பிப்பதோ மோசடியும் பாவமும் ஆகும் என்கிறது இஸ்லாம். இச்செயல் இறைவனைச் சிறுமைப்படுத்துவதுடன் மனித மனங்களில் இறைவனைப்பற்றி அலட்சியப் போக்கை உண்டாக்கி விடுகிறது. அதனால் மேற்கூறியவாறு நல்லொழுக்கத்தைப் பேணுவதற்கு மிகப்பெரும் தடையாகிறது. சமூகத்தில் பாவங்கள் பெருக காரணமாகிறது. மேலும் இவ்வாறு மனிதர்கள் வெவ்வேறு விதமாக கடவுளைக் கற்பனை செய்து வணங்க முற்படும்போது ஒரே மனித குலம் பிளவுபட்டு ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு மாய்வது, இடைத்தரகர்கள் இறைவனின் பெயரால் மக்களை ஏய்த்துப் பிழைப்பது என்பனவும் நிகழ்கின்றன. பல குழப்பங்களுக்கும் தீமைகளுக்கும் காரணமாகும் இப்பாவத்தை மட்டும் இறைவன் மன்னிப்பதே இல்லை என்கிறது திருக்குர்ஆன்.

## 3. இறைவனின் நீதிவிசாரணையும் மறுமை வாழ்வும்.

● **ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகித்தே ஆகவேண்டும் அன்றியும் - இறுதித் தீர்ப்பு நாளில்தான், உங்க(ள் செய்கைக)ளுக்குரிய பிரதிபலன்கள் முழுமையாகக் கொடுக்கப்படும். எனவே எவர் (நரக) நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டுச் சுவர்க்கத்தில் பிரவேசிக்குமாறு செய்யப்படுகிறாரோ அவர் நிச்சயமாக வெற்றியடைந்து விட்டார். இவ்வுலக வாழ்க்கை மயக்கத்தை அளிக்கவல்ல (அற்ப இன்பப்) பொருளேயன்றி வேறில்லை. (திருக்குர்ஆன் 3:185)**

அதாவது இவ்வுலகம் ஒருநாள் முழுமையாக அழிக்கப்பட்டு மீண்டும் இறைவனின் கட்டளை வரும்போது அனைத்து மனிதர்களும் இறுதி விசாரணைக்காக உயிர்கொடுத்து எழுப்பப்படுவார்கள். புண்ணியவான்களுக்கு அளவிலா இன்பங்கள் நிறைந்த சொர்க்கமும் பாவிகளுக்கு கடும் வேதனைகள் நிறைந்த நரகமும் நிரந்தர இருப்பிடங்களாக வழங்கப்படும். ஆக, இந்த தற்காலிக வாழ்க்கை என்பது ஒரு பரீட்சையாகவும் இவ்வுலகம் அதற்கான பரீட்சைக் கூடமாகவும் படைக்கப்பட்டுள்ளது என்பதே உண்மையாகும். இதை மறந்து வாழ்வதே மனித குலத்தின் அமைதியின்மைக்குக் காரணமாகும்.

# நல்லொழுக்கம் பேணுதலே இஸ்லாம்

அடிப்படை நம்பிக்கைகளை போதிப்பதோடு நிறுத்திவிடாமல் அவற்றில் மனிதன் வாழ்நாள் முழுக்க நிலைத்திருக்க அவனுக்கு தெளிவான ஒரு வாழ்க்கைத் திட்டத்தையும் வழிகாட்டுதலையும் தனது இறுதி வேதமாம் திருக்குர்ஆன் மூலமும் தனது இறுதித்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை முன்மாதிரி மூலமும் வழங்கியுள்ளான் இறைவன். இஸ்லாத்தை ஏற்று அதன்படி வாழ முற்படுபவர்களுக்கு ஐவேளைத் தொழுகை, ஜகாத் எனும் கட்டாய தானம், நோன்பு, ஹஜ்ஜ் போன்றவை கடமையாக்கப்பட்டுள்ளன. இவை தனிநபர்களிடமும் குடும்பங்களிலும் சமூகத்திலும் நல்லொழுக்கத்தை வலுப்படுத்துவதை நீங்கள் காணலாம்.

- ஒருவர் நல்லொழுக்கத்தில் நிலைத்திருக்க வேண்டுமானால் ஷைத்தானின் தீங்குகளில் இருந்து பாதுகாப்பு பெற வேண்டும். அதற்கு சதா இறைவனின் தொடர்பும் நினைவும் வேண்டும். உடல்தூய்மை பேணி தொழுகைகளை வேளாவேளை நிறைவேற்றுவதன் மூலம் இறை நினைவும் இறைவனுக்கு பதில் சொல்லவேண்டும் என்ற பொறுப்புணர்வும் உண்டாவதால் அது மனிதனை பாவங்களில் இருந்து விலக்கி வைக்கிறது.

- தொழுகைகளைப் பள்ளிவாசல்களில் கூட்டாக வரிசைகளில் அணிவகுத்து நிறைவேற்றும்போது சகோதரத்துவமும் சமத்துவமும் இயற்கையாகவே பேணும் பண்பு வந்துவிடுகிறது. மக்களை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு அங்கு ஏற்படுவதால் சமூக உறவு வலுப்படுவதோடு சமூகத்தின் குறைகளையும் பிரச்சினைகளையும் தீர்க்கும் குழுக்கள் அல்லது கூட்டமைப்புகள் உருவாகின்றன.

- நோன்பின் மூலம் ஆன்மீகப் பரிசுத்தமும் சுயக் கட்டுப்பாடும் சமூகத்தின் தேவைகளை உணரும் பண்பும் உருவாகின்றன.

- செல்வம் என்பது இறைவனுக்கு சொந்தமானது, அது தற்காலிகமாக தன்னிடம் தரப்பட்டுள்ளது என்ற உணர்வை தனிமனிதனிடம் உண்டாக்கி அதை ஏழைகளோடு பங்கிட்டு உண்ணச் செய்கிறது ஜகாத்.

- ஒன்றே மனிதகுலம் ஒருவனே இறைவன் என்ற கொள்கை முழக்கத்தை நடைமுறை வடிவில் உலகறியச் செய்து உலகளாவிய சகோதரத்துவத்தை பறைசாற்றுகிறது ஹஜ் என்ற கடமை!

இவ்வாறு இஸ்லாம் கூறும் நம்பிக்கைகளோடு இணைந்த நடைமுறைக்கு மக்களை - குறிப்பாக குழந்தைகளைப் - பழக்கப் படுத்தினால் அவர்கள் பாவங்களில் இருந்து விலகி இருப்பார்கள். யாரும் காணாதபோதும் இறைவனுக்கு பதில் சொல்லியாக வேண்டும் என்ற பொறுப்புணர்வு அவர்களை பாவச் செயல்களில் இருந்து தடுக்கும். உதாரணமாக அவர்கள் இணையம் செல்பேசிகள் தொலைக்காட்சிகள் இவற்றை தகுந்த முன்னெச்சரிக்கையோடு கையாள்வார்கள். இறை பொருத்தத்திற்க்காகவும் மறுமையில் வாய்க்க இருக்கும் இன்பங்களுக்காகவும் வாழ்வில் தானதர்மங்கள், தியாகங்கள், எளியோருக்கும் நலிந்தோருக்கும் உதவுதல், தீமைகளுக்கு எதிராகப் போராடுதல் என்பனவற்றை சுயமாக முன்வந்து செய்வார்கள். நல்லொழுக்கம் வாய்ந்த சமூகத்தை உலகெங்கும் கட்டியெழுப்புவார்கள்..

# வாழ்நாள் நெடுகிலும் அற்புதங்கள்! அவரே இயேசு!

நமது மனித குலம் என்பது ஒன்றே ஒன்று. நமது இறைவனும் ஒரே ஒருவனே! எக்காலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் எங்கு பிறந்தோரானாலும் நாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே! இதை நாம் ஒரு போதும் மறக்கக்கூடாது. இறைவன் தனது இறுதி மறைக் குர்ஆனில் தவறாமல் நினைவூட்டுகிறான்:

● **மனிதர்களே! உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்த உங்கள் இறைவனை அஞ்சுங்கள்! அவரிலிருந்து அவரது துணையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும், பெண்களையும் பல்கிப் பெருகச் செய்தான். எவனை முன்னிறுத்தி ஒருவரிடம் மற்றவர்கள் கோரிக்கை வைப்பீர்களோ அந்த அல்லாஹ்வை அஞ்சுங்கள்! உறவினர்கள் விஷயத்திலும் (அஞ்சுங்கள்!) அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான். (திருக்குர்ஆன் 4:1)**

நம் மானிட குடும்பத்துக்கு வழி காட்ட இறைவன் அவ்வப்போது தன் தூதர்களை அனுப்பி உள்ளான். அவர்கள் அனைவரும் நம்மவர்களே என்பதுதான் உண்மை. இந்த பரந்த மனப்பான்மையோடு அணுகினால் நாம் இன்று இழந்து விட்ட சகோதரத்துவ உணர்வை மீண்டும் நிலை நாட்ட முடியும்.

இறைவனின் தூதர்கள் இடையே வேற்றுமை பாராட்டக் கூடாது என்பது இறைக் கட்டளை (திருக்குர்ஆன் 2:285). அந்த இறைத் தூதர்கள் வரிசையில் வந்தவரே நமது இயேசு (அலைஹிஸ்ஸலாம்-அவர் மீது இறைவனின் சாந்தி உண்டாகட்டும்)

ஆம், சத்தியத்தை நிலைநாட்ட இப்பூமிக்கு வந்த மகத்தானதோர் இறைத்தூதர் ஏசு!

பிறந்த நாள் முதலே அற்புதங்கள் பல நிகழ்த்திய மகான்!

அன்னை மரியாளுக்குப் பிறந்த அந்த அற்புதக் குமாரன் அயராது சத்திய போதனை செய்தார்!

அஞ்சா நெஞ்சனாக அநீதிக்கும் அக்கிரமங்களுக்கும் எதிராகப் போராடினார்! கடவுளின் பெயரால் பொய்யுரைத்து மக்களுக்கு இடையே பிளவுகள் உண்டாக்கும் மதகுருமார்களையும் மக்கள் சுரண்டப் படுவதையும் தீவிரமாக எதிர்த்தார்.

விளைவு ?...........அநீதியாளர்களின் சூழ்ச்சிக்கு ஆளானார் ஏசு! அவரைக் கொன்று சத்தியத்தின் வளர்ச்சியை தடுக்க சதி செய்தனர் எதிரிகள் !

ஆனால் வல்ல இறைவனால் அற்புதமான முறையில் காப்பாற்றப் பட்டார்!

ஆம், இறைவன் அவரைத் தன்னளவில் உயர்த்திக் கொண்டான்!

**ஆம், அவரது வாழ்நாள் நெடுகிலும் அற்புதங்கள்....**

● தந்தையின்றிப் பிறந்தார்...

● கைக்குழந்தையாக இருந்த போதே பொதுமக்கள் முன் பேசினார்!

● பிறக்கும்போதே இறைத்தூதராகவும் வேத அறிவோடும் அவதரித்தார்!

● பிறவிக் குருடர்களையும் குஷ்டரோகிகளையும் தடவியே குணப்படுத்தினார்!

● இறந்தவர்களை உயிர்பித்தார்.

● உணவு மரவையை வானில் இருந்து இறக்கினார்!

● முன்னர் வந்த இறைத்தூதை உண்மைப் படுத்தினார், பின்னர் வர இருக்கும் தூதர் பற்றி தீர்க்கதரிசனம் உரைத்தார்!

● பகைவர்கள் தாக்கவந்தபோது அற்புதமாய் விண்ணேற்றமும் செய்தார்!

● இவையும் இன்னும் பலவும்! ஆனாலும் இவை எல்லாம் இதுவரை நிகழ்த்திய சில அற்புதங்கள்... ஆனால் இன்னும் அவர் நிகழ்த்த உள்ளவை பல!

ஆம், மீண்டும் இந்த பூமிக்கு வந்து இன்னும் பற்பல அற்புதங்களையும் புரட்சிகளையும் நிகழ்த்த உள்ளார் அந்த புனித மகான்!

**அனைத்தும் அவன் செயலே என்றார் இயேசு!**

அத்தனை அற்புதங்கள் நிகழ்த்தியபோதும் அவை அனைத்தும் தன்னை அனுப்பிய இறைவனின் செயலே அவை என்றார் இயேசு! அவன் அருளே அவை என்று தெளிவுபட மக்களுக்கு சொன்னார்!

● தந்தையின்றி பிறந்தார் என்பதற்காக தன்னை இறைமகன் என்று சொல்லிக் கொண்டதில்லை!

● யாருமே நிகழ்த்தாத அற்புதங்களை நிகழ்த்திக் காட்டியபோதும் தன்னையே கடவுள் என்றும் தன்னை வழிபடுங்கள் என்று மக்களை எவியதில்லை!

● இறைவனுக்கு நெருங்கியவர் என்று சிறப்பிக்கப் பட்டதற்காக தன்னை இடைத்தரகராக பாவிக்கச் சொல்லவில்லை! தன் மூலமே இறைவனை நெருங்க முடியும் என்று வாதிடவில்லை! நானே பாவங்களை மன்னிக்கின்றவன் என்று சொல்லிக்கொண்டதில்லை!

மாறாக அனைத்து இறைத்தூதர்களும் தத்தமது மக்களுக்கு போதித்தது போலவே தன்னையும் விண்ணையும் மண்ணையும் படைத்து பரிபாலித்து வரும் ஏக இறைவனை மட்டுமே வணங்கச் சொன்னார் அவர். அவன் கட்டளைகளுக்கு அடிபணிந்து வாழ்ந்து பரலோக இன்பமாம் சொர்க்கத்தை அடையவே மக்களுக்கு போதித்தார் இயேசு. அவரவர் பாவங்களுக்கு அவர்களே பொறுப்பு என்றார். பாவம் தவிர்த்து வாழவும் இறைவனிடமே நேரடியாக பாவமன்னிப்பு கோரவுமே கற்றுக்கொடுத்தார் இயேசு! அவர் மீது இறை சாந்தி உண்டாவதாக!

● **பரலோகத்தில் இருக்கிற என் பிதாவின் சித்தம் செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பனேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்கிறவன் அதில் பிரவேசிப்பதில்லை (மத்:7-21)**

● **நீங்கள் மனம்திரும்பி பிள்ளைகளை போல ஆகாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் (மத்:18-31)**

# தன் சகோதரர் இயேசு பற்றி நபிகளார்

● **முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

**“நான் மர்யமின் மைந்தர் ஈசா (அலை –அவர் மீது சாந்தி உண்டாகட்டும்) அவர்களுக்கு உலகிலும் மறுமையிலும் மக்களிலேயே மிகவும் நெருக்கமானவன் ஆவேன். இறைத் தூதர்கள் ஒரே தந்தையின் பிள்ளைகள் ஆவர். அவர்களின் தாய்மார்கள் பலராவர். அவர்களின் மார்க்கம் ஒன்றே.” என அபூஹுரைரா(ரலி) அறிவித்தார். (நூல்: புகாரி)**

# இறுதி வேதத்தில் இயேசு நாதர்! 100% உண்மைகள்

இயேசுவைப் பற்றி இறுதி இறைவேதம் திருக்குர்ஆன் என்ன கூறுகிறது எனபதை அறிய முற்படும் முன் இங்கு கூறப்படும் உண்மைகளின் தரம் எப்படிப்பட்டது எனபதை வாசகர்கள் உணர வேண்டும். நீங்கள் இதுவரை இயேசுநாதரைப் பற்றி பலவற்றையும் கேள்விப்பட்டிருக்கலாம்.. காலாகாலமாக மக்கள் சொல்லிக்கொண்டு வருபவை, வேதபுத்தகங்களில் சொல்லப்பட்டவை, மதபோதகர்கள் சொல்பவை என பலவும் அதில் அடங்கும். ஆனால் நமக்குத்தேவை தெளிவான உண்மை. இதுவரை நீங்கள் கேள்விப்பட்ட செய்திகளோடு ஒப்பிடும்போது நாம் திருக்குர்ஆனின் ஆதாரத்தோடு தரும் செய்திகள் கீழ்கண்ட சிறப்புக்களோடு தனித்து விளங்குகின்றன:

● நாம் இங்கே தரும் இயேசு (அலை) பற்றிய தகவல்கள் நூறு சதவீதம் உண்மையானனவை. இவற்றில் ஊகங்களோ கட்டுக் கதைகளோ இடம் பெறாது. அன்பின் மேலீட்டால் மனிதர்கள் உணர்ச்சிவசப்பட்டு புனைந்து கூறும் வர்ணனைகளோ ஆதாரமற்ற செய்திகளோ இருக்காது. மாறாக முழுக்க முழுக்க சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டதும் இறுதி வேதமுமான திருக்குர்ஆன் தரும் செய்திகளாகும்.

**12:111. (நிச்சயமாக) அவர்களின் வரலாறுகளில் அறிவுடையோருக்கு (நல்ல) படிப்பினை இருக்கிறது. இது இட்டுக்கட்டப்பட்ட செய்தியாக இருக்கவில்லை, மாறாக இதற்கு முன் உள்ள (வேதத்)தையும் இது உண்மையாக்கி வைக்கிறது. ஒவ்வொரு விஷயத்தையும் இது விவரித்துக் காட்டுவதாகவும், நம்பிக்கை கொண்ட சமூகத்தவருக்கு நேர்வழியாகவும், அருளாகவும் இருக்கிறது.**

● எந்த இறைவன் முந்தைய இறைவேதங்களை அருளினானோ அதே இறைவனால் இறுதியாக அருளப்பட்ட வேதமே திருக்குர்ஆன் எனபதை நீங்கள் அறிய முடியும். முந்தைய வேதங்கள் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட மக்களுக்காக அருளப்பட்டவை. ஆனால் திருக்குர்ஆன் உலகம் முழுமைக்கும் பொதுவானதாக இறுதிகாலம் வரை மாற்றமில்லாமல் நிலைநிற்கக் கூடியதாக அருளப்பட்டிருக்கிறது. இது உண்மையா இல்லையா என்பதைப் பரிசோதிக்க நீங்கள் திருக்குர்ஆனின் ஒரு பிரதியை எடுத்து திறந்து பாருங்கள். அதில் குர்ஆன் வசனங்கள் மூல மொழியான அரபியிலும் அவற்றின் அருகே அதன் மொழிபெயர்ப்பும் காணப்படும். அதே மூலமொழியிலேயே உலகெங்கும் குர்ஆன் ஓதப்பட்டு வருவதையும் காணலாம். ஆனால் முந்தைய ஏற்பாடுகளில் நீங்கள் மொழிபெயர்ப்புகளை மட்டும்தான் காண முடிகிறது எனபதை அறிவீர்கள். மூலத்தை நீங்கள் காண முடிவதில்லை. அவ்வேதங்கள் மூலமொழிகளில் ஓதப்படுவதையும் இன்று நீங்கள் கேட்க முடிவதில்லை.

● திருக்குர்ஆன் அது அருளப்பட்ட மொழியான அரபுமொழி இன்று பலநாடுகளில் புழக்கத்தில் உள்ள வாழும் மொழியாக இருக்கிறது. ஆனால் முந்தைய வேதங்கள் அருளப்பட்ட மொழிகள் ஏற்கெனவே வழக்கொழிந்து போயுள்ளன என்பதையும் அறிவீர்கள். ஒருவேளை அவ்வேதங்களின் மூலங்களைத் தேடிக் கண்டுபிடித்தாலும் இன்று

அவற்றை சரிபார்ப்பது மிக மிகக் கடினம்.

● திருக்குர்ஆன் என்பது முழுக்க முழுக்க இறைவனின் வார்த்தைகளை மட்டுமே கொண்டது. இதில் நபிகள் நாயகம் அவர்களுடைய வார்த்தைகளோ அல்லது மற்றெந்த மனிதர்களுடைய வாசகங்களோ கலக்கவில்லை.. திருக்குர்ஆனுக்கு முன் அருளப்பட்ட வேதங்கள் அருளப்பட்ட காலத்தில் அவை இறைவார்த்தைகளை மட்டுமே உட்கொண்டிருந்தன என்பது உண்மையே. ஆனால் இன்று அவற்றில் இறை வார்த்தைகள், இறைத்தூதர்களின் வார்த்தைகள் மற்றும் பரிசுத்த ஆவியால் உந்தப் பட்டு அப்போஸ்தலர்கள் எழுதிய தகவல்கள் ஆகியன கலந்திருப்பதை நீங்களே நன்றாக அறிவீர்கள்.

● குர்ஆன் என்பது பரிசுத்த ஆவி என்று கிறிஸ்த்துவ சகோதரர்கள் கூறும் ஜிப்ரீல் (gaberiel) என்ற வானவரால் இறைவன் புறத்திலிருந்து கொண்டுவரப்பட்ட பரிசுத்த வசனங்களின் தொகுப்பாகும்..

● அதே வேளையில் நபிகள் நாயகம் அவர்களின் கூற்றுக்களும் அவர் பற்றிய செய்திகளும் தகவல்களும் தனியாகத் தொகுக்கப்பட்டு 'ஹதீஸ்' என்ற பெயரில் பாதுகாக்கப் பட்டுவருகின்றன. இறைத்தூதர் (ஸல்) அவர்களை நேரில் கண்ட நபித்தோழர்களால் அறிவிக்கப்பட்ட இந்த செய்திகள் அவற்றின் அறிவிப்பாளர்களின் வரிசைகள் பரிசோதிக்கப்பட்டு மிக நேர்த்தியாக பதிவு செய்யப்பட்டுள்ளதை ஆராய்வோர் அறிவார்கள். அந்த ஹதீஸ் நூல்கள் அவற்றைத் தொகுத்த அறிஞர்களின் பெயரால் அறியப்படுகின்றன. உதாரணமாக புஹாரி, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி என்பவை பிரபலமான ஹதீஸ் தொகுப்புகளில் உள்ள சிலவாகும்.

## உங்களுக்குத் தெரியுமா?

இன்று உலகில் காணும் குர்ஆன், பைபிள், பகவத்கீதை, உள்ளிட்ட எல்லா வேதபுத்தகங்களையும் மற்ற புத்தகங்களையும் குறுந்தகடுகளையும் இன்னபிற பதிவுகளையும் எல்லாம் திரட்டி ஒரு மூலையில் இட்டு தீக்கிரையாக்கினாலும், மறுபடியும் திரும்ப எழுதப் படக்கூடிய ஒரே புத்தகம் திருக்குர்ஆன் மட்டுமே! காரணம் உலகெங்கும் உள்ள இலட்சக் கணக்கான மக்கள் மனங்களில் அது ஒரே போல பதிவாகி இருப்பதேயாகும்!

இன்னும் ஒரு உதாரணம் மூலமாகவும் இதைப் புரிந்து கொள்ளலாம். ஏதேனும் ஒரு பழைய பாடலை எடுத்துக் கொள்ளுங்கள். உதாரணமாக "பாலும் பழமும் கைகளிலேந்தி ..... அல்லது "நான் ஆணையிட்டால்..... அது நடந்துவிட்டால் ......" என்னும் இப்பாடல்கள் உருவாகி சுமார் 40 வருடங்கள் ஆனாலும் அவை இன்றும் அதேபோலவே பாடப்படுகின்றன அல்லவா? காரணம் அவை ஒலி வடிவிலேயே மக்களிடையே பிரபலமாகி காலாகாலமாக எந்த மாற்றங்களுமின்றி அவ்வாறே பாடப்பட்டு வருகின்றன. அதேபோல தலைசிறந்த இலக்கிய நயத்தையும் ஒலிநயத்தையும் கொண்ட திருக்குர்ஆன் எவ்வித மாற்றங்களுமின்றி ஒலிவடிவிலும் புத்தகவடிவிலும் கண்ணினிகளும் குறுந்தகடுகளிலும் இன்னும் மனித மனங்களிலும் தொடர்கிறது.

**இறுதி வேதத்தில் இயேசு நாதர்!**

# திருக்குர்ஆன் அருளப்பட்ட விதமும் பாதுகாக்கப்படும் முறையும்

திருக்குர்ஆன் என்பது நபிகள் நாயகத்தால் எழுதப்பட்ட நூல் என்ற ஒரு தவறான தகவல் இன்றும் பல சகோதர சமுதாய மக்களிடையே நிலவி வருகிறது. உண்மை என்னவெனில் இந்தக் குர்ஆனில் நபிகள் நாயகத்தின் வார்த்தைகளோ வேறு எந்த மனிதர்களின் வார்த்தைகளோ துளியளவும் கிடையாது. முழுக்க முழுக்க இறைவார்த்தைகளை மட்டுமே கொண்ட நூல் திருக்குர்ஆன்! நபிகள் நாயகம் தனது நபித்துவ வாழ்வின் போது அதாவது 40-வது வயதிலிருந்து 63-வது வயது வரை சந்தித்த பல்வேறு சூழ்நிலைகளின்போது அவருக்கு இறைவன் புறத்திலிருந்து அறிவுரைகளாகவும் கட்டளைகளாகவும் சிறிது சிறிதாக இறக்கியருளப்பட்ட திருவசனங்களின் தொகுப்பே திருக்குர்ஆன் என்பது.

**இவ்வசனங்கள் எவ்வாறு நபிகளாருக்கு கிடைத்தன?**

இறைவன் புறத்திலிருந்து வானவர் ஜிப்ரீல் இவ்வசனங்களை கொண்டு வந்து நபிகளாருக்கு ஓதிக் காட்டுவார்கள். நபிகளார் எழுதவோ படிக்கவோ அறியாதவர். தனக்கு முன் ஓதப்படும் வசனங்களை அவர் மனப்பாடம் செய்து கொள்வார் நபிகளார். அது இறைவனுடைய ஏற்பாடு. அதைத் தொடர்ந்து ஜிப்ரீலிடம் இருந்து தான் செவியுற்ற வசனங்களை தனது தோழர்கள் முன் ஓதிக் காட்டுவார்கள். நபித்தோழர்கள் அவற்றை தோல்களிலும் எலும்புகளிலும் எழுதி வைத்துக் கொண்டனர். அது மட்டுமல்ல அவ்வசனங்களின் கவர்ச்சியில் தங்களைப் பறிகொடுத்த தோழர்கள் அவற்றை தொழுகையிலும் தொழுகைக்கு வெளியேயும் அடிக்கடி ஓதும் பழக்கமுடையோரானார்கள். அதாவது ஒலி வடிவிலேயே திருக்குர்ஆன் வசனங்கள் பிரபலமாகின. புண்ணியம் கருதியும் தொடர்ந்த ஓதலின் காரணமாகவும் பலரும் குர்ஆன் வசனங்களை மனப்பாடம் செய்தனர். குர்ஆன் என்ற வார்த்தையின் பொருளே 'ஓதப்படுவது' என்பதே! ஆம், அருளப்பட்ட நாள் முதல் இன்று வரை திருக்குர்ஆனை மூலமொழியிலேயே அதிகமதிகமாக ஓதிவருவது உலகெங்கும் முஸ்லிம்களின் பழக்கமாக உள்ளது.

**அடிக்கடி ஓதப்படும் நூல்**

உலகிலேயே மிக மிக அதிகமாக மூல மொழியில் ஓதப்பட்ட மற்றும் ஓதப்படும் நூல் திருக்குர்ஆன் மட்டுமே! குறிப்பாக ரமலான் மாதம் பகலில் விரதமிருந்து இரவில் நின்று தொழுவது இஸ்லாமிய கடமை என்பதை கேட்டிருப்பீர்கள். இரவில் நீண்ட நேர தொழுகைகளில் இமாமாக நிற்பவர் 30 நாட்களில் முழு குர்ஆனையும் ஓதி முடிப்பது வழக்கம். அந்த அளவுக்கு இமாம்கள் முழு குர்ஆனையும் மனப்பாடம் செய்திருப்பார்கள். அவ்வாறு முழு குர்ஆனையும் மனப்பாடம் செய்தவர்கள் இலட்சக் கணக்கில் இன்றும் இருக்கிறார்கள். இவ்வாறு முழு குர்ஆனும் ஒலி வடிவில் உலகெங்கும் உலா வருகிறது. மனித மனங்களிலேயே பாதுகாக்கவும் படுகிறது. இதைப் பற்றி இறைவனும் குர்ஆனில் குறிப்பிடுகிறான்:

● **"நிச்சயமாக நாமே இந்த நினைவூட்டலை (குர்ஆனை) இறக்கியிருக்கிறோம். நிச்சயமாக நாமே இதைப் பாதுகாப்போம்" (திருக்குர்ஆன் 15:9)**

**இறுதி வேதத்தில் இயேசுநாதர்!**

# சந்தேகங்களுக்கு அப்பாற்பட்ட வேதம்

**● 2:2. இது திருவேதமாகும். இதில் எத்தகைய சந்தேகமும் இல்லை. பயபக்தி உடையோருக்கு நேர்வழிகாட்டியாகும்..**

இப்படியொரு வாசகத்தை நீங்கள் எந்த மனித ஆக்கங்களிலாவது காண முடியுமா? அதாவது 'நான் சொல்லப் போவது நூறு சதவிகிதமும உண்மை, இதில் எந்தவித சந்தேகமும் இல்லை. என்று எந்த மனிதராவது தனது ஆக்கத்தில் சொல்லத் துணிவாரா? இதுவே திருக்குர்ஆன் இவ்வுலகைப் படைத்தவனின் - சர்வஞானம் கொண்டவனின் - ஆக்கம் என்பதை நிரூபிக்கிறது.

தொடர்ந்து இவ்வேதத்தைப் பற்றி சந்தேகம் கொள்வோரைப் பார்த்து இறைவன் விடுக்கும் அறைகூவலையும் எச்சரிக்கையையும் பாருங்கள்:

**● 2:23. நமது அடியாருக்கு (முஹம்மதுக்கு) நாம் அருளியதில் நீங்கள் சந்தேகம் கொண்டு (அதில்) நீங்கள் உண்மையாளர்களாகவும் இருந்தால் இது போன்ற ஓர் அத்தியாயத்தைக் கொண்டு வாருங்கள்! அல்லாஹ்வைத் தவிர ஏனைய உங்கள் உதவியாளர்களையும் அழைத்துக் கொள்ளுங்கள்!**

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வானவர் ஜிப்ரீல் (காப்ரியேல்) மூலம் அருளப்பட்ட இந்த வேதவசனங்களில் உங்களில் யாருக்கேனும் சந்தேகம் இருந்தால் இது போன்றதொரு அத்தியாயத்தையேனும் கொண்டுவருமாறு மனிதகுலத்தை நோக்கி சவால் விடுக்கிறான் இவ்வுலகின் அதிபதி! அவ்வாறு இந்த சவாலை எதிர்கொள்ள முடியாத சத்திய மறுப்பாளர்களுக்கு தொடர்ந்து அவர்களுக்குக் காத்திருக்கும் தண்டனையைக் குறித்து எச்சரிக்கையும் விடுக்கிறான்.

**●2:24. உங்களால் (இதைச்) செய்யவே முடியாது. நீங்கள் செய்யாவிட்டால் (நரக) நெருப்புக்கு அஞ்சுங்கள்! மனிதர்களும் கற்களுமே அதன் எரி பொருட்கள். (இவ்வேதத்தை) மறுப்போருக்காகவே அது தயாரிக்கப்பட்டுள்ளது.**

இந்த வசனங்கள் மூலம் இறைவன் அகில உலக மக்கள் அனைவரையும் நோக்கி விடுக்கும் செய்தி இதுதான்:

இதோ இந்தத் திருக்குர்ஆன் என்பது எனது கட்டளைகளைக் கொண்ட இறுதிவேதம். அகில உலகிலும் இனி இறுதிநாள் வரை வரப்போகும் அனைத்து மக்களுக்காகவும் வழிகாட்ட இது அருளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையிலேயே நீங்கள் வாழக் கடமைப்பட்டுள்ளீர்கள். இதைப் பின்பற்றி வாழ்ந்தால் உங்களுக்கு மோட்சம் உண்டு. மாறாக யார் இதை மறுத்து இதில் சந்தேகம் கொள்கிறார்களோ அவர்கள் தங்கள் கூற்றை நிரூபிப்பதற்காக இது போன்ற ஒரு அத்தியாயமேனும் இயற்றிக் காட்டட்டும். அதற்காக அகில உலக மக்களையும் அனைத்து சக்திகளையும் வேண்டுமானால் உதவிக்கு அழைத்துக் கொள்ளட்டும். அந்த முயற்சியில் நீங்கள் தோல்விகண்டால் - நிச்சயமாக அது நீங்கள் தோல்வி காண்பீர்கள் என்பது திண்ணம் - உங்கள் இயலாமையைஒப்புக்கொண்டு இறைவனிடம் திரும்புங்கள். அவ்வாறு திரும்ப மனம் இல்லையானால் இறைவனையும் அவன் வேதத்தையும்

மறுப்போருக்காக தயார் செய்யப்பட்டுள்ள நரக நெருப்பை பயந்து கொள்ளுங்கள். அது எப்படிப்பட்ட கடுமையான நெருப்பு என்றால் தீய மனிதர்களும் கற்களுமே அதன் விறகுகளாக எரிந்துகொண்டிருக்கும்.

அதாவது இவ்வுலகின் அதிபதி தன் அடிமைகளை நோக்கி திருக்குர்ஆனைக் காட்டி இதை ஏற்றுக் கொள்ளுங்கள்! இல்லையேல் உங்களுக்கு நரகம் காத்திருக்கிறது என்று கூறும் பாணியில் அமைந்துள்ளன இவ்வசனங்கள்!

## முரண்பாடுகளுக்கு அப்பாற்பட்ட வேதம்

ஒன்றை இறைவேதம் என்று சொல்வதாக இருந்தால் அதில் எவ்வித முரண்பாடும் இல்லாமல் இருக்க வேண்டும். ஏனெனில் மனிதனின் வார்த்தையில் தான் முரண்பாடுகள் வரும். ஏக இறைவனின் வார்த்தையில் முரண்பாடுகள் வருவதற்கு அறவே வாய்ப்பிருக்காது. அப்படி இருந்தால் அது மனிதனின் வார்த்தையாகத் தான் இருக்குமே தவிர இறைவேதமாக இருக்க முடியாது. இவ்வுலகில் காணப்படும் நூல்களில் இரண்டு வகையான முரண்பாடுகளில் ஒன்றையோ அல்லது இரண்டையும் சேர்ந்தோ நீங்கள் காண முடியும்.

**1. முன்னுக்குப் பின் முரண்படுதல்**: அதாவது அந்நூலின் பக்கங்களுக்குள் காணப்படும் முரண்பாடு.

**2. காலத்தால் ஏற்படும் முரண்பாடு:** உதாரணமாக, ஐம்பது வருடம் முன்பு எழுதப்பட்ட ஒரு நூலை எடுத்து இன்று வாசித்துப் பாருங்கள். அது அறிவியல் நூலேயானாலும் சரி, ஆன்மீக அல்லது சட்ட நூல்களானாலும் சரி. இன்றைய மனிதனின் அறிவு வளர்ச்சி மற்றும் அறிவியல் வளர்ச்சியின் பின்னணியில் ஏராளமான முரண்பாடுகளை நீங்கள் காண முடியும்.

ஆனால் திருக்குர்ஆனின் அற்புதம் என்னவென்றால் மேற்படி இரண்டு முரண்பாடுகளும் எள்ளளவும் இல்லை. இறைவன் கூறுகிறான்

● **4:82 அவர்கள் இந்த குர்ஆனை (கவனமாக) சிந்திக்க வேண்டாமா (இது) அல்லாஹ் அல்லாத பிறரிடமிருந்து வந்திருந்தால் இதில் ஏராளமான முரண்பாடுகளை அவர்கள் கண்டிருப்பார்கள்.**

அருளப்பட்ட காலம் தொட்டு சுமார் 1430 வருடங்கள் கடந்தாலும் இன்று வரை எந்த விதமான முரண்பாடுகளும் இல்லாமல் வெற்றிநடை போடுகிறது திருக்குர்ஆன்! திருக்குர்ஆனில் முதல்வகை முரண்பாடுகளும் இல்லை. கால வளர்ச்சியின் மூலம் உண்டாகும் மனித ஆக்கங்களில் காணப்படும் முரண்பாடுகளும் அறவே இல்லை. காரணம் இது முக்காலத்தையும் அறிந்தவனும் நுண்ணறிவாளனும் ஆகிய இறைவனிடமிருந்து இறக்கியருளப்பட்டது!

● **39:1 (யாவரையும்) மிகைத்தவனும் ஞானம் மிக்கவனுமாகிய அல்லாஹ்விடமிருந்தே இவ்வேதம் இறக்கியருளப் பெற்றுள்ளது.**

விஞ்ஞானமும் மனித அறிவும் வளர வளர புதுப் புது ஞானங்கள் மனிதனுக்குப் புலப்படும்போது எந்த மனித ஆக்கங்களும் காலமாற்றத்தால் ஏற்படும் முரண்பாடுகளுக்கு ஆளாகாமல் இருக்க முடியாது. ஆனால் திருக்குர்ஆன் இன்றுவரை 1437 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் எந்த நிரூபிக்கப்பட்ட விஞ்ஞான உண்மைகளோடும் சரித்திர உண்மைகளோடும் சிறிதும் முரண்படாமல் தொடர்கிறது

<u>இறுதி ஏற்பாட்டில் இயேசு நாதர்!</u>

# திருக்குர்ஆனை உறுதிப்படுத்தும் அறிவியல் உண்மைகள்

இயற்கையில் நாம் காணும் படைப்பினங்கள் ஒவ்வொன்றும் இறைவனது உள்ளமையையும் வல்லமையையும் எடுத்துரைக்கும் சான்றுகளாகத் திகழ்கின்றன. அவற்றைத் திருக்குர்ஆன் “ஆயத்“ (சான்றுகள்) என்ற வார்த்தையால் குறிப்பிடுகிறது. அதேபோலவே திருக்குர்ஆனின் வசனங்களுக்கும் ஆயத் என்றே குறிப்பிடுகிறது. அதாவது இயற்கைச் சான்றுகளை எவ்வாறு ஆராய ஆராய அவற்றில் புதைந்துள்ள உண்மைகள் வெளிப்பட்டு அறிவியல் வளர்கிறதோ அவ்வாறே திருக்குர்ஆனின் வசனங்களும் ஆராய ஆராய தன்னுள் அடங்கியுள்ள பிரபஞ்ச இரகசியங்களை வெளிப்படுத்தும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

உண்மையில் நவீன விஞ்ஞானம் கண்டுபிடிக்கும் இறைவனின் படைப்பினங்கள் பற்றிய உண்மைகள் ஒவ்வொன்றாக வெளிவரும்போதுதான் திருக்குர்ஆன் உள்ளடக்கி வைத்திருக்கும் அறிவின் புதையல்களும் பிரபஞ்ச இரகசியங்களும் நமக்குப் புலப்படுகின்றன. ஒரு உதாரணத்தைப் பாருங்கள்:

**தேனின் உற்பத்தி:**

தேனைப் பற்றி அது எவ்வாறு உற்பத்தியாகிறது என்று யாரிடமாவது கேட்டுப் பாருங்கள். அது பற்றிய போதிய ஞானம் இல்லாதவர்கள் கூறுவார்கள்: தேனீக்கள் பூக்களில் இருந்து ரசத்தை தங்கள் கூடுகளில் சேர்க்கின்றன. அதுதான் தேன் என்பார்கள். ஆனால் நவீன விஞ்ஞானம் பல புதிய உண்மைகளைக் கண்டுபிடித்துக் கூறுகிறது.



தேனீக்கள் பூக்களில் இருந்தும் கனிகளிலிருந்தும் ரசத்தை உறிஞ்சிய பின் அது அவற்றின் வயிற்றில் ஜீரணிக்கப் பட்டு அதன் வயிற்றில் இருந்து வெளிவருவதே தேன் என்பதும் பெண் தேனீக்கள்தான் இந்தக் கிரியையைச் செய்கின்றன என்பதும் இந்த நூற்றாண்டில் கண்டுபிடிக்கப் பட்ட உண்மைகள். கீழ்கண்ட வசனங்கள் இவற்றைத் தாங்கி நிற்பதைப் பாருங்கள்:

**“““மலைகளிலும் மரங்களிலும் மனிதர்கள் கட்டுபவற்றிலும் கூடுகளை நீ அமைத்துக் கொள்! பின்னர் ஒவ்வொரு கனிகளிலிருந்தும் சாப்பிடு! உனது இறைவனின் பாதைகளில் எளிதாகச் செல்!“““ என்று உமது இறைவன் தேனீக்களுக்கு அறிவித்தான். அதன் வயிறுகளிலிருந்து மாறுபட்ட நிறங்களையுடைய பானம் வெளிப்படுகிறது. அதில் மனிதர்களுக்கு நோய் நிவாரணம் உள்ளது. சிந்திக்கின்ற சமுதாயத்திற்கு இதில் சான்று உள்ளது. (திருக்குர்ஆன் 16: 68, 69.)**

*1437* வருடங்களுக்கு முன் எந்த விதமான விஞ்ஞான ஆராய்ச்சியோ நுண்னோக்கிகளோ (microscopes) தொலைநோக்கிகளோ (telescopes)

இல்லாத ஒரு காலகட்டத்தில் எந்த மனிதராவது இப்படி ஆழமான விஞ்ஞான உண்மைகள் அடங்கிய வசனத்தைக் கூறியிருக்க முடியுமா? அதுவும் குறிப்பாக எழுத்தறிவோ படிப்பறிவோ இல்லாதிருந்த பாலைவனத்து மனிதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இதைக் கூறியிருக்க சற்றும் வாய்ப்பே இல்லை. தெளிவாக இது இறைவனின் வசனமே என்பதையல்லவா பறைசாற்றுகிறது?

இந்த வசனங்களின் அரபு மூலத்தில் 'அவளுடைய வயிறு' என்று பொருள்படும் 'புதூனிஹா' என்ற வார்த்தை பயன்படுத்தப் படுகிறது. இது பெண் தேனீக்கள்தான் தேன் சேகரிப்பை நடத்துகின்றன என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது. இவ்வசனங்களின் நடையும் இவ்வளவு துல்லியமான வார்த்தைப் பிரயோகமும் இப்பிரபஞ்சத்தின் படைப்பாளன் சில படைப்பின் இரகசியங்களை நம்மோடு பகிர்ந்து கொள்கிறான் என்பதைத்தானே காட்டுகிறது?



இதே போல இன்னும் பல படைப்பின் இரகசியங்கள்..... கீழே ஒருசில நவீன அறிவியல் கண்டு பிடிப்புகளும் அவற்றை உள்ளடக்கிய திருக்குர்ஆன் வசனங்களும் தரப்பட்டுள்ளன.

- **பெருவெடிப்புக் கொள்கை மற்றும் நீரே உயிரினங்களின் மூலம் என்ற உண்மை :**

**21:30. நிச்சயமாக வானங்களும் பூமியும் (முதலில்) இணைந்திருந்தன என்பதையும் இவற்றை நாமே பிரித்(தமைத்)தோம் என்பதையும் உயிருள்ள ஒவ்வொன்றையும் நாம் தண்ணீரிலிருந்து படைத்தோம் என்பதையும் சத்திய மறுப்பாளர்கள் பார்க்கவில்லையா? (இவற்றைப் பார்த்தும்) அவர்கள் நம்பிக்கை கொள்ள வில்லையா?**

- **மனித உடலில் வேதனைகளை உணரக் கூடிய நரம்புகள் தோல்களில்தான் உள்ளன என்ற உண்மை:**

**4:56 யார் நம் வேதவசனங்களை நிராகரிக்கிறார்களோ, அவர்களை நாம் நிச்சயமாக நரகத்தில் புகுத்தி விடுவோம். அவர்கள் தோல்கள் கருகிவிடும் போதெல்லாம் அவையல்லா (வேறு) தோல்களை அவர்கள் வேதனையைப் (பூரணமாக) அனுபவிப்பதற்கென அவர்களுக்கு நாம் மாற்றிக் கொண்டே இருப்போம் - நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனாகவும் ஞானமுள்ளவனாகவும் இருக்கின்றான்.**


- **இரு கடல்களுக்கிடையே தடுப்பு :** கடல்களுக்கு இடையே ஒன்றோடு ஒன்று கலவாத முறையில் தடுப்பு உள்ளது என்ற உண்மை:

**25:53 அவன்தான் இரு கடல்களையும் ஒன்று சேர்த்தான் ஒன்று மிக்க இனிமையும் சுவையுமுள்ளது மற்றொன்று உப்பும் கசப்புமானது - இவ்விரண்டிற்குமிடையே வரம்பையும் மீற முடியாத ஒரு தடையையும் ஏற்படுத்தியிருக்கிறான்.**

**27:61 இந்தப் பூமியை வசிக்கத் தக்க இடமாக ஆக்கியவனும் அதனிடையே ஆறுகளை உண்டாக்கியவனும் அதற்காக (அதன் மீது அசையா) மலைகளை உண்டாக்கியவனும் இரு கடல்களுககிடையே தடுப்பை உண்டாக்கியவனும் யார்?**


**● கோள்களை தடுத்துக் கொண்டிருக்கும் புவிஈர்ப்பு விசை:**

35:41 நிச்சயமாக வானங்களும் பூமியும் அவை இரண்டும் விலகிவிடாதவாறு நிச்சயமாக அல்லாஹ்வே தடுத்துக் கொண்டிருக்கின்றான் அவை இரண்டும் விலகுமாயின், அதற்குப் பிறகு வேறெவரும் அவ்விரண்டையும் தடுத்து நிறுத்த முடியாது. நிச்சயமாக அவன் பொறுமையுடையவன் மிக மன்னிப்பவன்.




**● விண்வெளிப் பயணம் சாத்தியமே என்ற உண்மை:**

55:33 மனித மற்றும் ஜின் கூட்டத்தார்களே! வானங்கள் பூமி ஆகியவற்றின் எல்லைகளைக் கடந்து செல்ல நீங்கள் சக்தி பெறுவீர்களாயின் (அவ்வாறே) செல்லுங்கள். ஆனால் (வல்லமையும் நம்) அதிகாரமும் இல்லாமல் நீங்கள் கடக்க முடியாது.




● விண்வெளிப் பயணத்தின் போது இதயம் சுருங்குகின்றது என்ற உண்மை (6:125)

● ஓரங்களில் குறையும் பூமி (13:41), (21:44)

● சூரியனும் சந்திரனும் கோள்களும் வட்ட வரைக்குள் கட்டுப்பாட்டோடு இயங்குகின்றன எனும் உண்மை: (35:13),(36:40)

● முளைகளாக மலைகள் : பூமிக்கடியில் பல்வேறு நில அடுக்குகள் ஒன்றோடு ஒன்று பிடிப்போடு இருக்கச் செய்ய பெரும் முளைகளைப் போல் மலைகள் ஆழமாக இறக்கப் பட்டுள்ளன என்ற உண்மை (16:15), (31:10)



● கருவளர்ச்சியின் நிலைகள்: (22:5), (23:13-14)

● விந்தின் பிறப்பிடம் (86 : 5-7)

*இன்னும் பல வசனங்கள் இதுபோல இருந்தாலும் விரிவஞ்சி இத்துடன் நிறுத்திக் கொள்வோம். ஆக, மேற்கூறப்பட்ட உண்மைகள் எதைப் பறைசாற்றி நிற்கின்றன? இறைவனே கூறுவது போல்* **“அகிலங்களின் இறைவனிடம் இருந்து அருளப்பட்டுள்ளது - இவ்வேதம் என்பதில் சந்தேகமில்லை.” (திருக்குர்ஆன் 32:2)** *என்ற உண்மையைத்தானே?*

*இவை அனைத்தும் திருக்குர்ஆன் என்பது முழுக்கமுழுக்க இவ்வுலகைப் படைத்தவனின் வார்த்தைகளே என்பதைப் பறைசாற்றி நிற்கின்றன.*

# இயேசுநாதரை களங்கங்களில் இருந்து காத்த தேற்றரவாளர்

*உலக மக்கள் தொகையில் கால்வாசிக்கும் அதிகமானோர் இன்று முஹம்மது நபி அவர்கள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றி வருவதை அறிவீர்கள். இயேசுநாதர் அவர்கள் பற்றி யூதர்கள் சுமத்திய களங்கங்களில் இருந்து இத்தனை பேரையும் காப்பாற்றிய பெருமை தேற்றறவாளர் என்று இயேசுவால் முன்னறிவிப்பு கூறப்பட்ட முஹம்மது நபி அவர்களையே சாரும்.*

**● மேலும், மர்யமின் குமாரர் ஈஸா: "இஸ்ராயீல் மக்களே! எனக்கு முன்னுள்ள தவ்ராத்தை மெய்ப்பிப்பவனாகவும், எனக்குப் பின்னர் வரவிருக்கும் "அஹமது" என்னும் பெயருடைய தூதரைப் பற்றி நன்மாராயம் கூறுபவனாகவும் இருக்கும் நிலையில் அல்லாஹ்வின் தூதனாக உங்களிடம் வந்துள்ளேன்" என்று கூறிய வேளையை (நபியே! நீர் நினைவு கூர்வீராக!)..... (திருக்குர்ஆன் 61:6)**

**● நான் உங்களுக்கு உண்மையைச் சொல்கிறேன். நான் போகிறது உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். நான் போகாதிருந்தால் தேற்றறவாளன் உங்களிடத்திலே வாரார். (யோவான் : 16:7)**

**● சத்திய ஆவியாகிய அவர் வரும் போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாகப் பேசாமல் தாம் கேள்விப்பட்டவைகளை யாவையும் சொல்லி வரப் போகிறவைகளையும் அறிவிப்பார். அவர் என்னுடையதை எடுத்து உங்களுக்கு அறிவிப்பதால் என்னை மகிமைப்படுத்துவார், (யோவான்: 16:13-14)**

*யூதர்கள் இயேசுவின் அற்புதப் பிறப்பை சந்தேகித்தார்கள். அவரது தாயார் தூய மரியாளை விபச்சாரி என்றும் - இயேசு நாதரை விபச்சாரியின் மகன் என்றும் கள்ளத் தீர்க்கதரிசி என்றும் அவதூறு கூறிப் பரப்பினர். திருக்குர்ஆனும் முஹம்மது நபியவர்களின் கூற்றுக்களும் இந்த தவறான பரப்புரையை உலகெங்கும் முறியடித்தன.*

**● 4:156.இன்னும் அவர்களின் நிராகரிப்பின் காரணமாகவும், மர்யமின் மீது மாபெரும் அவதூறு கூறியதின் காரணமாகவும் (யூதர்கள் சபிக்கப்பட்டனர்).**

**● 4:157. இன்னும், "நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்வின் தூதராகிய - மர்யமின் குமாரராகிய-ஈஸா மஸீஹை கொன்றுவிட்டோம்" என்று அவர்கள் கூறுவதாலும் (அவர்கள் சபிக்கப்பட்டனர்). அவர்கள் அவரைக் கொல்லவுமில்லை, அவரை அவர்கள் சிலுவையில் அறையவுமில்லை. ஆனால் அவர்களுக்கு (அவரைப் போன்ற) ஒருவன் ஒப்பாக்கப்பட்டான். மேலும் இ(வ் விஷயத்)தில் அபிப்பிராய பேதம் கொண்டவர்கள், அதில் சந்தேகத்திலேயே இருக்கின்றார்கள் - வெறும் யூகத்தைப் பின்பற்றுவதேயன்றி அவர்களுக்கு இதில் எத்தகைய அறிவும் கிடையாது. நிச்சயமாக அவர்கள், அவரைக் கொல்லவே இல்லை.**

**● 4:158.ஆனால் அல்லாஹ் அவரைத் தன் அளவில் உயர்த்திக் கொண்டான் - இன்னும் அல்லாஹ் வல்லமை மிக்கோனாகவும் ஞானமுடையோனாகவும் இருக்கின்றான்.**

*இயேசுவின் அற்புதப் பிறப்பையும் நபித்துவத்தையும் அன்னை மரியாளின் புனிதத் தன்மையையும் நம்பாமல் எவரும் முஸ்லிம் ஆக முடியாது என்ற அளவுக்கு இது இஸ்லாத்தில் கட்டாயமான ஒன்று.*

# முஹம்மது நபியவர்களின் முக்கியத்துவம்

இங்கு இயேசு நாதரை கண்ணியமான முறையில் உலகுக்கு அறிமுகப்படுத்தி இயேசுவின் மீது சுமத்தப்பட்ட களங்கங்களை துடைத்தெறிந்த முஹம்மது நபி அவர்களைப் பற்றிய சில உண்மைகளையும் நினைவு கூர்வது இங்கு பொருத்தமாக இருக்கும். (அவர்கள் இருவர் மீதும் இறைசாந்தி உண்டாவதாக!)

- திருக்குர்ஆன் இயேசு அவர்கள் பற்றி கடந்த காலத்தில் நடந்ததாகக் கூறும் சம்பவங்களும் நூறு சதவீதம் உண்மை. இனி எதிர்காலத்தில் நடக்கப்போவதாகக் கூறும் சம்பவங்களும் நூறு சதவீதம் நடந்தே தீரும் என்பதும் உண்மை என்பது முன்னர் கூறப்பட்ட ஆதாரங்களில் இருந்து தெளிவாகிறது.
- திருக்குர்ஆனுக்கு அடுத்த தரத்தில் உள்ளவை முஹம்மது நபி (ஸல்) அவர்களின் கூற்றுக்கள். அவையும் அவர் மூலமாக இறைவன் அறிவித்துக் கொடுத்த செய்திகளே. நபிகளாரின் சொற்கள், அவர்களின் செயல்கள், அங்கீகரித்தவை ஆகியவற்றின் தொகுப்புக்கு ஹதீஸ் என்று கூறப்படும். இவை தனித் தொகுப்பாக விளங்குகின்றன. நபிகளாரின் தோழர்களால் இவை அறிவிக்கப் பட்டு பிற்காலத் தலைமுறையினரால் அறிவிப்பாளர்களின் தரம் பரிசோதிக்கப்பட்டு மிகக் கவனமாக இவை பதிவுசெய்யப் பட்டுள்ளன.
- இறைத்தூதர்கள் வரிசையில் இறுதியாக அனுப்பப்பட்டவர் முஹம்மது நபி(ஸல்) அவர்கள். இயேசு(அலை) அவர்கள் இறைவனால் வானிற்கு உயர்த்தப்பட்ட பின் சுமார் 560 வருடங்களுக்குப்பின் இறைத்தூதராக நியமிக்கப்பட்டார்.
- நம் ஆதிபிதா ஆதம் நபி(அலை) முதல் இயேசு (அலை) வரை எந்த ஓரிறைக் கொள்கையை வாழையடி வாழையாக போதித்தனரோ அதே கொள்கையை சற்றும் மாறுபடாமல். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் போதித்தார்கள்.
- இயேசு(அலை) எக்கொள்கையை போதித்தாரோ அதையே முஹம்மது நபி(ஸல்) போதித்தார்கள். முஹம்மது நபி(ஸல் ) எக்கொள்கையை போதித்தாரோ அதையே இயேசு(அலை) போதித்தார்கள் எனபதை இங்கு தெளிவாக விளங்கிக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.
- கண்டிப்பாக இறைவன் எந்த முரண்பாடுகளையும் கற்பிக்க மாட்டான் என்பதையும் இறைத்தூதர்களும் ஒருவருக்கு ஒருவர் முரண்பட மாட்டார்கள் என்பதையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். இன்று முரண்பாடுகளாக ஏதாவது தென்பட்டால் அவை பிற்காலங்களில் ஒருசில குழப்பவாதிகளும் இடைத்தரகர்களும் அரசியல் சக்திகளும் மதத்தின் பெயரால் மக்களைச் சுரண்ட நுழைத்தவை என்பதும் தெளிவு.
- **(இறைவிசுவாசிகளே!) “நாங்கள் அல்லாஹ்வையும், எங்களுக்கு இறக்கப்பட்ட (வேதத்)தையும் இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப் இன்னும் அவர் சந்ததியினருக்கு இறக்கப்பட்டதையும் மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் கொடுக்கப் பட்டதையும் இன்னும் மற்ற நபிமார்களுக்கும் அவர்களின் இறைவனிடமிருந்து கொடுக்கப்பட்டதையும் நம்புகிறோம் அவர்களில் நின்றும் ஒருவருக்கிடையேயும் நாங்கள் வேறுபாடு காட்ட மாட்டோம் இன்னும் நாங்கள் அவனுக்கே முற்றிலும் வழிபடுகிறோம்” என்று கூறுவீர்களாக. (திருக்குர்ஆன் 2:136)**

# இறைவனை மட்டுமே வணங்குக என்பதே இருவரும் போதித்தது

*இறைவன் ஒருவனே என்பது பற்றியும் அவனது தன்மைகள் பற்றியும் திருக்குர்ஆன் கூறுவதை அறிவீர்கள்:*

- **நபியே நீர் கூறுவீராக! “அல்லாஹ் அவன் ஒருவனே. அவன் தேவைகள் ஏதும் இல்லாதவன். அவன் எவரையும் பெற்றெடுக்கவில்லை அவனையும் யாரும் பெற்றெடுக்கவில்லை. அன்றியும் அவனைப்போல் எவரும் எதுவும் இல்லை.” (திருக்குர்ஆன் 112: 1-4)**

*அதேபோல் இறைவன் அல்லாதவற்றை வணங்குவதை - அதாவது இறைவனுக்கு இணைவைத்தலை - திருக்குர்ஆனும் நபிமொழிகளும் பெரும்பாவம் என்று கண்டிப்பதையும் நீங்கள் அறிவீர்கள்:*



- **“...நிச்சயமாக இறைவனுக்கு இணைவைத்தல் மாபெரும் பாவமாகும்... (திருக்குர்ஆன் 31:13)**
- **“நிச்சயமாக இறைவன் தனக்கு இணை வைப்பதை மன்னிக்கமாட்டான் இதைத்தவிர, (மற்ற) எதையும் தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான். யார் இறைவனுக்கு இணைவைக்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக மிகவும் பெரிய பாவத்தையே கற்பனை செய்கின்றார்கள்.“ (திருக்குர்ஆன் 4:48)**

## பைபிளில் இறை ஏகத்துவம்:

*ஆண்டவர் ஒருவரே என்று கூறும் பைபிளின் பழைய ஏற்பாடு: -*

- **கர்த்தரே மெய்யான தெய்வம். அவர் ஜீவனுள்ள தேவன். நித்திய ராஜா. அவருடைய கோபத்தினால் பூமி அதிரும். அவருடைய உக்கிரத்தை ஜாதிகள் சகிக்க மாட்டார்கள். (பழைய ஏற்பாடு - எரேமியா 10:10)**
- **“இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்” (உபாகமம் 6:4)**
- **“நான் முந்தினவரும், நான் பிந்தினவருந்தானே என்னைத்தவிர தேவன் இல்லையென்று, இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தரும், சேனைகளின் கர்த்தராகிய அவனுடைய மீட்பரும் சொல்லுகிறார்” (ஏசாயா 44:6)**



*ஆண்டவர் ஒருவரே என்று கூறும் பைபிளின் புதிய ஏற்பாடு: -*

- **“அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி: நல்ல போதகரே நித்திய ஜீவனை அடையும்படி நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும் என்று கேட்டான் அதற்கு அவர்: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவரைத்தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே” (மத்தேயு 19:16-17)**
- **“ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்” (யோவான் 17:3)**
- **“இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால்: இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்” (மாற்கு 12:29)**

# இறைவனுக்கு இணைவைத்தலை கண்டிக்கும் பைபிள்

**● எகிப்து தேசம்! அடிமைத்தள வீடாகிய எகிப்து தேசத்தில் இருந்து உங்களை பிறப்படப் பண்ணிய கர்த்தராகிய நானே தேவன். என்னையல்லாது வேறு ரட்சகனில்லை. மேலே வானத்திலேயும், கீழே பூமியிலேயும், பூமியின் கீழ் தண்ணீரிலேயும் கர்த்தருக்கு இணையாக யாதொரு சொரூபத்தையும், யாதொரு விக்ரகத்தையும் நீர் எடுத்துக் கொள்ள வேண்டாம். கர்த்தர் அதை வெறுக்கிறார் என்று கூறுகிறது.** (யாஸ்ராகாமம் 1-5)

**●"ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுக்ஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாத வருமாயிருக்கிறவர் அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென்"** (தீமோத்தேயு 6:16)

ஏசு சொல்கின்றபடி ஒரே இறைவனாகிய கர்த்தரை மட்டுமே வணங்க வேண்டும். அதை விடுத்து ஏசுவையே வணங்கச் சொல்வது, ஏசு சொன்னதற்கு மாற்றமாகும். ஏசவின் பெயரைச் சொல்லி இல்லாத காரியம் பண்ணுகிறவர்களை ஏசு மிகவும் எச்சரிக்கிறார். இதோ,



**● அந்நாளில் (நீதி விசாரணை நாளில்) அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலேயே தீர்க்க தரிசனம் உரைத்தோம் அல்லவா....? உமது நாமத்தினாலேயே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா....? என்பார்கள். அப்போது நான் (ஏசு) ஒருக்காலும் உங்களை அறியவில்லை... அக்கிரமச் செய்கையாரே! என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்வேன்.** (மத்தேயு 7:21)

இவை எல்லாம் எதை நமக்கு எடுத்துரைக்கின்றன?....

தொன்று தொட்டு இப்பூமிக்கு வந்த இறைத்தூதர்கள் ஏக இறைவன் ஒருவனையே வழிபட வேண்டும், அவனை விடுத்து மற்றவற்றை வணங்குவது மாபெரும் பாவம் என்பதை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தி வந்துள்ளார்கள் என்பதைத்தானே?

**● (நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும் "நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) நாயன் என்னைத் தவிர வேறு எவருமில்லை எனவே, என்னையே நீங்கள் வணங்குங்கள்" என்று நாம் வஹீ (இறை வெளிப்பாடு) அறிவிக்காமலில்லை.** (திருக்குர்ஆன் 21:25)

கண்டிப்பாக இறைவன் எந்த முரண்பாடுகளையும் கற்பிக்க மாட்டான் என்பதையும் இறைத்தூதர்களும் ஒருவருக்கு ஒருவர் முரண்பட மாட்டார்கள் என்பதையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். இன்று முரண்பாடுகளாக ஏதாவது தென்பட்டால் அவை பிற்காலங்களில் ஒருசில குழப்பவாதிகளும் இடைத்தரகர்களும் அரசியல் சக்திகளும் மதத்தின் பெயரால் மக்களைச் சுரண்ட நுழைத்தவை என்பதும் தெளிவு.

# தேற்றரவாளரின் சிறப்புக்கள்

● **'பிதாவிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்' (யோவான் 15:26)**

இயேசு முன்னறிவித்தபடி அவரைத் தொடர்ந்து வந்துள்ளதாலும் இயேசுவை மகிமைப்படுத்தி உலக சரித்திரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாலும் முஹம்மது நபி(ஸல்) அவர்களே அந்த தேற்றரவாளர் என்பதை அறிகிறோம். அதை உறுதிப்படுத்தும் விதமாக அமையும் கீழ்காணும் சிறப்புகள் அமைகின்றன.

## ● அகில உலகுக்கும் பொதுவான இறைத்தூதர்

முந்தைய இறைத்தூதர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மற்றும் ஒரு குறிப்பிட்ட நாடுகளுக்காகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட சமுதாயங்களுக்காகவோ அனுப்பட்டிருந்தார்கள். உதாரணமாக,

● **7:65. இன்னும், ஆது கூட்டத்தாரிடம் அவர்களுடைய சகோதாரர் ஹூதை (நபியாக அனுப்பி வைத்தோம்) ...**

● **7:85. மத்யன் நகரவாசிகளிடம் அவர்களுடைய சகோதரராகிய ஷுஐபை (நம் தூதராக அனுப்பிவைத்தோம்).....**

தூதர்கள் வரிசையில் முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு முன் வந்து சென்றவர் இயேசு(அலை) அவர்களும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தை நோக்கித்தான் அனுப்பப் பட்டு இருந்தார்.

● **43:59. அவர் (ஈஸா நம்முடைய) அடியாரே அன்றி வேறில்லை. அவருக்கு நாம் அருட்கொடையைச் சொரிந்து இஸ்ராயீலின் சந்ததியாருக்கு அவரை நல்லுதாரணமாக ஆக்கினோம்.**

மேற்கூறப்பட்ட உண்மை இன்று நம்மிடையே காணக்கிடைக்கும் பைபிளிலும் இடம்பெறுவதைக் காணலாம்.

● **அப்பொழுது அந்த திசைகளில் குடியிருக்கிற கானானிய ஸ்திரி ஒருத்தி அவரிடத்தில் வந்து ஆண்டவரே தாவீதின் குமாரனே எனக்கு இரங்குப் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என்று சொல்லக் கூப்பிட்டாள் அவளுக்கு பிரதியுத்தமாக அவர் ஒரு வார்தையும் சொல்லவில்லை அவர்களுடைய சீஷர்கள் வந்து இவள் நம்மைப் பின் தொடர்ந்து கூப்பிடுகிறாளே இவளை அனுப்பிவிடும் என்று அவரை வேண்டிக்கொண்டார்கள். அதற்கு அவர் காணாமல்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனே யன்றி மற்றபடியல்ல என்றார். அவள் வந்து ஆண்டவரே எனக்கு உதவி செய்யும் என்று அவரைப் பணிந்து கொண்டாள் அவர் அவளை நோக்கி "பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல" என்றார். (மத்தேயு 15:22 26 )**

அன்றும் இன்றும் உள்ள தகவல் தொடர்பு வசதிகளை ஒப்பிட்டுப் பார்த்தாலே இந்த உண்மையை நாம் விளங்கிக் கொள்ள முடியும். அன்று ஊர்களுக்கும் நாடுகளுக்கும் இடையே தகவல் தொடர்பு இல்லாத நிலையில் வெவ்வேறு நாடுகளுக்கு வெவ்வேறு தூதர்கள் அனுப்பப் பட்டிருந்தனர். இன்றைய காலகட்டம் தகவல் தொடர்பு மிக விரிவடைந்த

கால கட்டம். இங்கு பேசினால் உடனுக்குடன் உலகின் மறு மூலையில் கேட்கக் கூடிய அளவுக்கு முன்னேறியிருக்கிறோம். இப்படிப்பட்ட சூழலில் இறுதி இறைத்தூதர் உலகம் முழுமைக்கும் பொதுவானவராக அனுப்பப் பட்டார்கள். இவருக்குப் பிறகு எந்த இறைத்தூதரும் வரப்போவதில்லை. இனி உலகம் அழியும் நாள் வரையும் இவர்தான் இறைவனின் தூதர்.

## ● வேதம் சிதையாமல் பாதுகாக்கப்படுதல்:

முந்தைய இறைத்தூதர்களைப் போல் அல்லாமல் இவர்மூலமாக அருளப்பட்ட வேதம் (திருக்குர்ஆன்) மூலமொழியிலேயே அழியாமல் பாதுகாக்கப் படுகிறது. முந்தைய வேதங்களைப் போல் அல்லாமல் மனித வார்த்தைகள் கலப்படமில்லாமல் முழுக்க முழுக்க இறைவார்த்தைகளை மட்டுமே தன்னுள் கொண்டுள்ளது திருக்குர்ஆன். உலகெங்கும் மூலமொழியிலேயே ஓதப்பட்டும் ஆயிரக்கணக்கான மக்களால் மனப்பாடம் செய்யப்பட்டும் உள்ளது. (மேலே இதுபற்றி விவாதிக்கப்பட்டு உள்ளது)

## ● சிலையில்லா மாமனிதர்:

முந்தைய இறைத்தூதர்களை மக்கள் கடவுள்களாக ஆக்கி வழிபடுவதைப் போல் இவரை யாரும் வழிபடுவதில்லை. இறுதித் தூதருக்கு முன்னர் வந்த இறைத்தூதர்களை அவர்களது மறைவுக்குப் பின்னர் அவர்களுக்காக நினைவுச் சின்னங்கள் என்ற பெயரில் உருவப்படங்களையும் சிலைகளையும் உருவாக்கி பின்னர் அவற்றையே கடவுளாக பாவித்து மக்கள் வழிபாடு செய்யத் துவங்கினர். இதற்கு இறுதித் தூதருக்கு முன் வந்த ஏசு நாதரும் விலக்கல்ல. அவருக்கும் இன்று மக்கள் படம் வைத்து சிலை வைத்து வழிபடுவதை நாம் காண்கிறோம். ஆனால் இறுதித் தூதர் முஹம்மது நபி அவர்கள் வந்து சென்ற பின் 14 நூற்றாண்டுகள் ஆகியும் இப்பூமியின் மேற்பரப்பின் மீது எங்காவது அவருடைய உருவப் படத்தையோ சிலையையோ பார்த்திருக்கிறீர்களா?

இன்று அவரை உயிருக்குயிராக நேசித்து அவரை முன்மாதிரியாக பின்பற்றுவோர் கோடிக்கணக்கில் உலகெங்கும் இருந்தும் எங்குமே அவரது உருவப்படத்தைக் காணமுடியவில்லை என்றால் என்ன பொருள்.? அவர் போதித்த ஓரிறைக் கொள்கை மக்களால் பின்பற்றப்பட்டு வருகிறது என்பதைத்தானே அது காட்டுகிறது? படைத்தவன் மட்டுமே வணக்கத்துக்கு உரியவன் என்ற அவரது கொள்கை முழக்கம் இன்றும் ஓங்கி ஒலிக்கிறது என்பதைத் தானே காட்டுகிறது!

அவர் தனது மரணப் படுக்கையில் இருக்கும் போதும் மக்களை நோக்கி "மக்களே ! எனது மரணத்துக்குப் பின் எனது சமாதியை விழா நடக்கும் இடமாக மாற்றி விடாதீர்கள். ஏனெனில் முந்தைய இறைத்தூதர்கள் விஷயத்தில் மக்கள் அவ்வாறு செய்து அவர்களை கடவுள்களாக்கி விட்டது போல் என்னைக் கடவுளாக்கி விடாதீர்கள்" என்று எச்சரித்தார். இன்றும் அவரது சமாதி சவுதி அராபியாவில் மதீனா நகரில் உள்ளதை அறிவீர்கள். ஆனால் யாரும் அங்கு சென்று பிரார்த்திப்பதை நீங்கள் பார்க்க முடியாது.

## ● மனித வாழ்க்கைக்கு முன்மாதிரி

இவரது வாழ்க்கை முன்மாதிரி இன்று நமக்குக் கிடைப்பதுபோல் முந்தைய இறைத்தூதர்களின் வாழ்க்கை முன்மாதிரி இன்று நமக்கு கிடைப்பதில்லை. இறைத்தூதர்கள் அனைவரும் எந்த மக்களுக்காக

அனுப்பப்பட்டார்களோ அந்த மக்களுக்கு வாழ்க்கை முன்மாதிரிகளாகத் திகழ்ந்தார்கள். முந்தைய இறைத்தூதர்களின் வாழ்க்கை வரலாறுகள் அல்லது வாழ்க்கை முன்மாதிரிகள் முறைப்படி பதிவு செய்யப்படாத நிலையை நாம் இன்று காண்கிறோம். இறுதித்தூதர் முஹம்மது நபியவர்கள் இறுதி நாள் வரை இப்பூமியில் வாழப் போகும் அனைத்து மனிதர்களுக்கும் முன்மாதிரியாக அனுப்பப்பட்டவர்கள். அதற்கேற்றவாறு அவருடைய நபித்துவ வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டங்களும் அவரது தோழர்களாலும் அன்னாரது துணைவியர்களாலும் அறிவிக்கப்பட்டு அவை பரிசோதிக்கப்பட்டு மிக நேர்த்தியாக பதிவு செய்யப் பட்டிருப்பதைக் காண்கிறோம்.

# நுணுக்கமாக பதிவு செய்யப்பட்ட முன்மாதிரி வரலாறு

இவ்வுலகில் வாழ்ந்த எந்த தலைவருடையதும் அல்லது எந்த மதகுருமார்களுடையதும் அல்லது வரலாற்று நாயகர்களுடையதும் வரலாறு இவ்வளவு நுணுக்கமாக மற்றும் ஆதார பூர்வமாக பதிவுசெய்யப் பட்டதில்லை.

மனித வாழ்வோடு சம்பந்தப்பட்ட எல்லா துறைகளுக்கும் அவருடைய வாழ்விலிருந்து அழகிய முன்மாதிரியைக் காணமுடிகிறது. உதாரணமாக அவரை பணியாளாக, எஜமானனாக, வியாபாரியாக, சாதாரண குடிமகனாக, போர் வீரராக, படைத்தளபதியாக, ஜனாதிபதியாக, ஆன்மீகத் தலைவராக, கணவராக, தந்தையாக...... அவரது வாழ்நாளில் கண்டவர்கள் எடுத்துக் கூறும் செய்திகளின் தொகுப்புதான் ஹதீஸ்கள். அவரது வீட்டுக்கு உள்ளே வாழ்ந்த வாழ்க்கையும் வெளியே வாழ்ந்த வாழ்க்கையும் என அனைத்துமே அங்கு பதிவாகின்றன. அவர் கூறிய வார்த்தைகள், அவர் செய்த செயல்கள், பிறர் செய்யக் கண்டு அவர் அங்கீகரித்த செயல்கள் என அனைத்தும் இன்று இஸ்லாமிய சட்டங்களுக்கு அடிப்படையாகின்றன.

### பிரதிபலிக்கும் வாழ்க்கை முன்மாதிரி

அன்னாரது வரலாற்றின் இன்னொரு அற்புதம் அவரது வாழ்க்கை வரலாறு ஏடுகளில் மட்டுமல்ல, எண்ணங்களில் மட்டுமல்ல, அவரைப் பின்பற்றி வாழ்ந்த மற்றும் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்ற கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் பிரதிபலிப்பதைக் காண முடிகிறது என்பது! அன்று அவரிட்ட கட்டளைகள் இன்றும் மீறப்படாமல் பின்பற்றப் படுகின்றன என்பது மட்டுமல்ல. அவரது அன்றாடப் பழக்க வழக்கங்களை அறிந்து அதைப் போலவே தம் வாழ்வை அமைக்கத் துடிக்கும் மக்கள் கோடி கோடி! உதாரணமாக அவர் தொழுகையில் எவ்வாறு நின்றார்? எவ்வாறு உணவு உண்டார்? உண்ணும்போது எவ்வாறு அமர்ந்தார்? என்பதை அறிந்து அதைப் போலவே வாழையடி வாழையாக கடைப் பிடிப்பவர்கள் முஸ்லிம்கள். அன்று அவர் தாடி வைத்திருந்தார் என்ற ஒரே காரணத்துக்காக இன்று கோடிக்கணக்கான மக்கள் முகத்தில் அதைக் காணமுடிகிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! இறைவனே அவரைப் பற்றி இவ்வாறு கூறுகிறான்:

● **33:21 அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின் மீதும் ஆதரவு வைத்து அல்லாஹ்வை அதிகம் தியானிப்போருக்கு நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி உங்களுக்கு இருக்கிறது.**

ஆக, இன்றைய காலகட்டத்தில் வாழும் நமக்காக இறைவனால் அனுப்பப்பட்ட முன்மாதிரித் தலைவர்தான் முஹம்மது நபியவர்கள் என்பது தெளிவாகிறது. அவர் மூலமாக இறைவன் அறிவித்துள்ள செய்திகள்தான் திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸ் என்ற இரு உறுதியான அடிப்படைகள்.

இயேசு நாதர் விடயத்தில் மட்டுமல்ல வேறு எந்த விவகாரங்களானாலும் சரித்திரம், அறிவியல், ஆன்மிகம் மனித வாழ்வியல் ஒழுக்கவியல் என எந்த துறைகளானாலும் சரி, அவை உண்மையா பொய்யா ஊகங்களா கற்பனையா நடக்குமா நடக்காதா என்பதை உரசிப்பார்த்து பிரித்தறிய இந்த இரண்டு ஆதாரங்களோடு பொருத்திப் பாருங்கள். பொருந்தினால் அது உண்மை இல்லையேல் அது கற்பனை அல்லது பொய் என்று நாம் புரிந்து கொள்ளலாம். இவை இவ்வுலகின் படைப்பாளனிடம் இருந்து வந்தவை.

# திருக்குர்ஆன் முதல் அத்தியாயம்

திருக்குர்ஆனின் ஆரம்ப அத்தியாயத்தின் பெயர் ஃபாத்திஹா என்பது. இது ஏழு வசனங்களைக் கொண்டது. இதை பொருளுணர்ந்து ஓதி இதில் உள்ளபடியே இறைவனிடம் நாம் மனமார பிரார்த்தித்தால் அவனது நேர்வழி கிடைக்கும். மறுமையில் சொர்க்கமும் கிடைக்கும். மட்டுமல்ல இதை நாம் நோய்வாய்ப்பட்டவர் மேல் ஓதி ஊதலாம். இறைவன் நாடினால் நோயும் குணமாகும். அதன் வசனங்களின் அரபுமொழி உச்சரிப்பும் பொருளும்:

**.1. (B)பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் 2. அல்ஹம்து லில்லாஹி ர(B)ப்பில் ஆலமீன். 3. அர்ரஹ்மானிர் ரஹீம். 4. மாலிகி யவ்மித் தீன் .5. இய்யாக்க நஉ(B)புது வஇய்யாக்க நஸ்தஈன். 6. இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்த்தகீம் 7. ஸிராத்தல்லதீன அன் அம்த அலைஹீம் அய்ரில் மக்லூ(B)பி அலைஹீம் வலழ்ழால்லீன் - ஆமீன்**

பொருள்:

**.1. அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனும் ஆகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் (இதை ஓதுகிறேன்) 2. அனைத்துப் புகழும் அனைத்து உலகையும் படைத்து பரிபாலித்து வரும் அல்லாஹ்வுக்கே உரியது. 3. அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன். 4. இறுதித் தீர்ப்பு நாளின் அதிபதி. 5. உன்னையே நாங்கள் வணங்குகிறோம் உன்னிடமே நாங்கள் உதவியும் தேடுகிறோம். 6. எங்களை நேரான வழியில் நடத்துவாயாக 7. நீ யாருக்கு அருள் புரிந்தாயோ அவர்களின் வழியில் நடத்துவாயாக,. அது உன் கோபத்துக்கு ஆளானோர் வழியுமல்ல நெறி தவறியோர் வழியும் அல்ல. (ஆமீன்- எங்கள் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்வாயாக)**

முக்கிய குறிப்பு: இந்த அத்தியாயத்தின் இறுதி வசனங்கள் இறைவனே நமக்கு கற்றுத்தரும் பிரார்த்தனைகள். இங்கு நான்காவது வசனத்தை மிக ஆத்மார்த்தமாக கூற வேண்டும் “இறைவா படைத்தவனாகிய உன்னை மட்டுமே வணங்குவோம். உன்னையல்லாது வேறு யாரையும் தெய்வமாக பாவிக்க மாட்டோம். அவைகளிடம் பிரார்த்திக்கவோ உதவி கோரவோ மாட்டோம்” என்ற உறுதி மொழியை இதன் மூலம் நாம் இறைவனுக்கு கொடுக்கிறோம் என்பதை உணர்க! நம் பிராத்தனை ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இது ஒரு நிபந்தனை என்பதை அறிக!

# பலதெய்வ வழிபாடு விளைவிக்கும் பேராபத்துகள்

பகுத்தறிவு கொண்டு ஆராயும் எவரும் தனக்கு மீறிய சக்தி ஒன்று தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள இவ்வுலகையும் படைத்து பரிபாலித்து வருவதை உணருவார்கள். அந்த சக்தியைத்தான் ஆத்திகர்கள் கடவுள் அல்லது இறைவன் என்று போற்றி வணங்குகிறார்கள். அந்த கடவுளை சரிவர ஆராய்ந்து ஏற்றுக் கொள்பவர்களும் உள்ளனர். ஆராயாமல் முன்னோர்கள் கற்பித்த மூடநம்பிக்கைகளின் அடிப்படையில் நம்புவோரும் உள்ளனர். இரண்டாம் வகை நம்பிக்கை மிகவும் ஆபத்தானது. நாத்திகத்தைவிட மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது.

**பாவங்களும் ஒழுக்கமின்மையும் வளர மூலகாரணம்:**

மனிதன் நல்லவனாக, நல்லொழுக்கம் உடையவனாக வாழவேண்டுமானால் அவனுள் இறையச்சம் என்பது இருக்கவேண்டும். அதாவது என்னைப் படைத்த இறைவன் என்னைப் பார்த்துக்கொண்டு இருக்கிறான், இவ்வாழ்க்கைக்குப் பிறகு அவனிடமே திரும்பவேண்டியது உள்ளது, அவன் என் நற்செயல்களுக்கு பரிசும் பாவங்களுக்கு தண்டனையும் வழங்க உள்ளான் - அதாவது அவனிடம் நான் எனது ஒவ்வொரு செயல்களுக்கும் பதில் சொல்லியாக வேண்டும் - என்ற பொறுப்புணர்வுக்கே இறையச்சம் என்று கூறப்படும். இது இல்லாதபட்சம் எந்தப் பாவத்தையும் செய்வதற்கு மனிதன் சற்றும் தயங்க மாட்டான். இந்த இறையச்சம் மனிதர்களிடம் இல்லாமல் போவதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் காணப்படுகின்றன.

● அறவே நிரூபிக்கப்படாத மனித ஊகங்களைக் கோர்வையாக்கி பரிணாமக் கொள்கை என்ற பெயரில் தவறான அறிவியலை மக்களுக்குக் கற்பித்து இறைவனை மறுக்கும் நாத்திகம் போதிக்கப்படுவது.

● இறைவனின் தூதர்கள் போதித்தபடி 'படைத்த இறைவன்தான் வணங்குவதற்குத் தகுதியானவன்' என்று மக்களுக்குக் கற்றுக் கொடுப்பதை விட்டுவிட்டு, குழந்தைப் பருவம் முதல் படைப்பினங்களின் உருவங்களையும் சமாதிகளையும் எல்லாம் காட்டி 'இவையே உன் கடவுள்' என்று போதிக்கப்படுவது.

இவ்வாறு இறையச்சம் இல்லாத தலைமுறைகள் உருவாகும்போது பாவம் செய்ய அஞ்சாத சமூகம் உருவெடுத்து அங்கு அமைதியின்மையும் கலவரங்களும் மேலோங்குகின்றன. இவை ஒருபுறம் நாட்டின் ஒழுக்க வீழ்ச்சிக்கு காரணமாகும்போது மறுபுறம் தவறான கடவுள் கொள்கை நாட்டில் மிகப்பெரும் இழப்புகளையும் விபரீதங்களையும் ஏற்படுத்துகிறது.

இறைவனின் இறுதிவேதம் திருக்குர்ஆன் கீழ்கண்டவாறு கடவுளின் முக்கிய இலக்கணங்களை கூறுகிறது:

● **112: 1-4. நபியே நீர் சொல்வீராக: அல்லாஹ் ஒரே ஒருவனே. அல்லாஹ் தேவைகள் ஏதும் இல்லாதவன். அவன் யாரையும் பெற்றெடுக்கவில்லை. அவனையும் யாரும் பெற்றெடுக்கவில்லை. அவனுக்கு நிகராக யாரும் எதுவும் இல்லை**

● **2:186. (நபியே!) என் அடியார்கள் என்னைப்பற்றி உம்மிடம் கேட்டால்**

**“நிச்சயமாக நான் சமீபமாகவே இருக்கிறேன், பிரார்த்தனை செய்பவரின் பிரார்த்தனைக்கு அவர் பிரார்த்தித்தால் விடையளிக்கிறேன், அவர்கள் என்னிடமே (பிரார்த்தித்துக்) கேட்கட்டும், என்னை நம்பட்டும். அப்பொழுது அவர்கள் நேர்வழியை அடைவார்கள்” என்று கூறுவீராக.**

அதாவது ஏகனாகிய இறைவன் தேவைகள் ஏதும் இல்லாதவன். ஒப்பில்லாதவன். அவனது படைப்பினங்களைப் போல் மற்றவர்களை சார்ந்து இராதவன். தாய் தந்தை, மனைவி, மக்கள் என எந்த உறவுகளும் இல்லாத தனித்தவன். தன்னிகரற்றவன். அவனை எந்த இடைத்தரகர்களும் இன்றி நேரடியாக வணங்கலாம். அவனிடம் நேரடியாக நம் தேவைகளைக் கேட்டு பிரார்த்திக்கலாம் என்ற கருத்துக்களைத் தாங்கி நிற்கின்றன மேற்படி வசனங்கள். இவையே நாம் வணங்குவதற்குத் தகுதி வாய்ந்த இறைவனின் உண்மை இலக்கணங்கள் என்பதை சிந்திப்போர் அறியலாம். ஆனால் இவ்விலக்கணங்களை ஆராயாமல் இறைவன் அல்லாதவற்றை யெல்லாம் கடவுள் என்று நம்பி வழிபடும்போது ஏற்படும் மற்ற விபரீதங்களில் சிலவற்றை கீழே காண்போம்...

## எளிமையான வழிபாடு வியாபாரமாக்கப் படுதல்

படைத்த இறைவனை வழிபடுவதற்கு எந்தப் பொருட்செலவும் தேவை இல்லை. எந்த தரகர்களும் தேவை இல்லை. எந்த வித வீண் சடங்குகளுக்கும் அங்கு இடமில்லை. ஆனால் படைத்தவனை விட்டு விட்டு போலி தெய்வங்களை வணங்க முற்படும்போது இறைவழிபாடு என்பது கடினமாக்கபடுகிறது. வீண் சடங்குகளும் மூட நம்பிக்கைகளும் இடைத்தரகர்களும் இடையே நுழைந்து இது மாபெரும் வியாபாரமாக்கப் படுகிறது.

## இடைத்தரகர்கள் ஆதிக்கம்

கண்டதெல்லாம் கடவுள் என்று மக்கள் நம்பத் தலைப்படும் போது அதைச்சுற்றி இடைத்தரகர்கள் உருவாகிறார்கள். பின்னர் அவர்கள் சொல்வதுதான் சட்டம் என்றாகிறது. அவர்கள் தம் மனம் போனபடி மக்களை ஏய்த்து தம் வயிற்றை நிரப்பிக் கொள்ள பாவ பரிகாரம், தோஷ பரிகாரம் என்றெல்லாம் பெயர் சொல்லி பாமரர்களின் சம்பாத்தியங்களையும் செல்வங்களையும் கொள்ளை அடிக்கிறார்கள்.

## பெரும் மோசடி

கடவுளின் பெயரால் மக்களை ஏய்த்துப் பிழைப்பதற்கான எளிமையான மார்க்கமாக இது மாறிவிடுகிறது. நாட்டில் எந்த வித உற்பத்தியோ சேவையோ மக்களுக்கு தராமல் - எந்த வித முதலீடும் மூலதனமும் இல்லாமல் - மக்களின் பணத்தை மட்டும் கறந்து கொண்டிருக்கும் வியாபாரம் இது.

## மனிதகுலத்துக்குள் பிரிவினைகளும் ஜாதிகளும் உருவாகுதல்

ஒரே இறைவனுக்கு பதிலாக பல போலிக் கடவுள்கள் வணங்கப்படும் நிலையில் ஒரே மனித குலம் பல ஜாதிகளாகவும் பிரிவுகளாகவும் கூறுபோடப்பட்டு மக்கள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளும் நிலை ஏற்படுகிறது. இந்நிலை மாற ஒரே வழி ஒன்றே குலம் ஒருவன் மட்டுமே இறைவன் என்ற கொள்கையை மக்கள் மனதில் வேரூன்றச் செய்வது

மூலமே சாத்தியம். இதைத்தான் இறைவனின் இறுதித் தூதர் மூலமாக மறு அறிமுகம் செய்யப்பட்ட இஸ்லாம் என்ற மார்க்கம் உலகெங்கும் செய்து வருகிறது.

இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வரும் உண்மை இறைவனை விட்டுவிட்டு அவன் அல்லாதவற்றை வணங்கும் போது ஏற்படும் விபரீதங்கள் சிலவற்றை மேலே கண்டோம். பாவங்கள் கட்டுக்கடங்காமல் பெருகுதல், ஒழுக்க வீழ்ச்சி, மூடநம்பிக்கைகள் பெருகுதல், கடவுளின் பெயரால் நாடு சுரண்டப்படுதல், மனிதகுலத்தில் பிளவுகள், கலகங்கள் என பலவற்றுக்கும் அது காரணமாகிறது. எனவேதான் இப்பாவம் இறைவனால் எல்லாக்காலங்களிலும் வன்மையாகக் கண்டிக்கப்பட்டு வந்துள்ளது என்பதை ஒவ்வொருகாலத்திலும் அனுப்பபட்ட இறைவேதங்களில் இடம்பெறும் ஆதாரங்களில் இருந்து காணலாம்:

**இந்து வேதங்களில்....**

- **யாருடைய அறிவு உலகாசையால் களவாடப்படுகிறதோ அவர்களே போலிதெய்வங்களை வணங்குகிறார்கள். (பகவத் கீதை )**
- **அந்தம் தமஹ பிரவிசந்தி யா அசம்பூதி முபாசதே - (பொருள்: யார் இயற்கை வஸ்த்துக்களை (காற்று நீர், நெருப்பு போன்றவை) வணங்குகிறார்களோ அவர்கள் அறியப்படாத இருளில் மூழ்குகின்றனர்.) - யஜுர்வேதம்** Yajurveda, Chapter 40, Verse 9 –
- **“யார் மனிதர்களால் படைக்கப்பட்ட பொருட்களை (மேஜை, நாற்காலி, சிலைகள் போன்றவற்றை) வணங்குகிறார்களோ அவர்கள் இன்னும் ஆழமான இருளில் மூழ்குகின்றனர்” என்று தொடர்ந்து கூறுகிறது யஜூர் வேதம்.**

**பழைய ஏற்பாட்டில்....**

- **எகிப்து தேசம்! அடிமைத்தள வீடாகிய எகிப்து தேசத்தில் இருந்து உங்களை பிறப்படப் பண்ணிய கர்த்தராகிய நானே தேவன். என்னையல்லாது வேறு ரட்சகனில்லை. மேலே வானத்திலேயும், கீழே பூமியிலேயும், பூமியின் கீழ் தண்ணீரிலேயும் கர்த்தருக்கு இணையாக யாதொரு சொரூபத்தையும், யாதொரு விக்ரகத்தையும் நீர் எடுத்துக் கொள்ள வேண்டாம். கர்த்தர் அதை வெறுக்கிறார் என்று கூறுகிறது.**

**புதிய ஏற்பாட்டில்...**

- **அந்நாளில் (நீதி விசாரணை நாளில்) அநேகர் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலேயே தீர்க்க தரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலேயே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்போது நான் (ஏசு) ஒருக்காலும் உங்களை அறியவில்லை.. அக்கிரமச் செய்கையாரே! என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்வேன். (மத்தேயு 7:21)**

**இஸ்லாத்தில்.....**

- **அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்போருக்கு சொர்க்கத்தை அல்லாஹ் விலக்கப்பட்டதாக ஆக்கி விட்டான். அவர்கள் சென்றடையும் இடம் நரகம். அநீதி இழைத்தோருக்கு எந்த உதவியாளர்களும் இல்லை. (திருக்குர்ஆன் 5:72)**
- *நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் :*

*யார் அல்லாஹ்வுக்கு எதையும் இணைகற்பிக்காமல் அவனை சந்திக்கிறாரோ அவர் சுவர்க்கம் புகுவார். யார் இணை கற்பித்தவராக சந்திக்கிறாரோ அவர் நரகம் புகவார்.*

*அறிவிப்பு : ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி)*

# அழகிய வாதம்

ஆண்துணையின்றி குழந்தை பிறப்பது அசாத்தியமானது என்று சொல்லி ஏசுவின் பிறப்பைப் பற்றி நம்பாதவர்களுக்கு உறைக்கும் வண்ணம் திருக்குர்ஆன் ஒரு அழகிய வாதத்தை முன்வைக்கிறது:

● **அல்லாஹ்விடம் ஈஸாவுக்கு உதாரணம் ஆதம் ஆவார். அவரை மண்ணால் படைத்து "ஆகு" என்று அவரிடம் கூறினான். உடனே அவர் ஆகி விட்டார். (திருக்குர்ஆன் 3:59)**

அதாவது முதல் மனிதர் ஆதம் தாயும் தந்தையும் இன்றி மண்ணிலிருந்து படைக்கப் பட்ட ஓர் அற்புதம். அதை நீங்கள் நம்புகிறீர்கள். அதை நிகழ்த்திய அதே இறைவனுக்கு தந்தையில்லாமல் ஒரு மனிதரை உருவாக்க முடியாதா? ஆதாமின் தோற்றத்தை நம்பும் உங்களுக்கு இயேசுவின் தோற்றத்தை நம்ப முடிவதில்லையா? என்று அறிவுப்பூர்வமாக சிந்தித்துணர வைக்கிறான் இறைவன்!

# இயேசு பேசிய முதல் வார்த்தைகள்

அன்னை மரியாளின் புனிதத்தன்மையை சந்தேகித்து அவர்மீது விபச்சாரக் குற்றம் சாட்டிய யூதர்களை வாயடைத்துப் போகும்படி செய்த அற்புத நிகழ்வு பற்றி முன்னர் கண்டோம். அன்னை மடியில் கைக்குழந்தையாக இருந்த இயேசு வாய்திறந்து பேசிய நிகழ்வே அந்த அற்புதம். அப்போது அவர் உதிர்த்த வார்த்தைகள் யாவை? இதோ திருக்குர்ஆன்:

● **"நிச்சயமாக நான் அல்லாஹ்வுடைய அடியானாக இருக்கின்றேன் அவன் எனக்கு வேதத்தைக் கொடுத்திருக்கின்றான் இன்னும் என்னை நபியாக ஆக்கியிருக்கின்றான். இன்னும் நான் எங்கிருந்தாலும், அவன் என்னை நற்பாக்கியமுடையவனாக ஆக்கியிருக்கின்றான் மேலும், நான் உயிருடன் இருக்கும் காலமெல்லாம் தொழுகையையும், ஜகாத்தையும் (ஏழைவரி கொடுத்தலையும்) எனக்கு கட்டளையிட்டு இருக்கின்றான்.**

**"என் தாயாருக்கு நன்றி செய்பவனாக (என்னை ஏவியிருக்கின்றான்) நற்பேறு கெட்ட பெருமைக்காரனாக என்னை அவன் ஆக்கவில்லை.**

**"இன்னும், நான் பிறந்த நாளிலும், நான் இறக்கும் நாளிலும் (மறுமையில்) நான் உயிர் பெற்று எழும் நாளிலும் என் மீது சாந்தி நிலைத்திருக்கும்" என்று (அக்குழந்தை) கூறியது.**

**இ(த்தகைய)வர் தாம் மர்யமுடைய புதல்வர் ஈஸா (ஆவார்) எதைக் குறித்து அவர்கள் சந்தேகம் கொண்டிருக்கிறார்களோ அதுபற்றிய உண்மையான சொல் (இதுவே ஆகும்).** *திருக்குர்ஆன் 3:30-34)*


**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற விரும்பும் மாற்றுமத அன்பர்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்:**

**சென்னை: 9941227866, 9894442844, 8122264467(மயிலாப்பூர்), 9840572018 (நுங்கம்பாக்கம்), 9840527687 (பல்லாவரம்), 9087836393(தாம்பரம்), ஓசூர்:9994713191 கிருஷ்ணகிரி: 9952862321 தர்மபுரி:9842627171 கோவை: 9600800050 திருப்பூர்:9150068919 குன்னூர்:9843622246 ஊட்டி:9543963412 ஈரோடு:7373947869, 9942958888 உடுமலை:9865051914 சேலம்:9994091364 திருச்சி:9865446344, 9442709087 மதுரை:9789341714 கும்பகோணம்:9597285160 விழுப்புரம்:9790290002 திருநெல்வேலி:9786230030 தென்காசி :9443695979 வேலூர்:9944656942 மயிலாடுதுறை:9942941190 திருவண்ணாமலை:9994564650, 9944905212 தூத்துக்குடி:8148059038 இளையான்குடி: 9842081210 ராஜபாளையம்:7845033616 ராமநாதபுரம்:7418140634 பாம்பன்:9043758656 கே.ஜி.எ.ஃ.ப்:9845217262**

# திருக்குர்ஆனில் இயேசு பற்றிய உண்மைகள்

திருக்குர்ஆன் மற்றும் நபிமொழிகளின் நம்பகத்தன்மையை நீங்கள் உணர்ந்துகொள்ளும் முகமாக இதுவரை அவைபற்றிய உண்மைகளை மேலே கண்டோம். இந்த உறுதி வாய்ந்த ஆதாரங்கள் இயேசுநாதர் தொடர்பாக என்ன சொல்கின்றன என்பதை தொடர்ந்து அறிய இருக்கிறோம்... அவற்றில் முதன்மையாக நம் அனைவரின் அன்புக்குப் பாத்திரமான இயேசுவின் பிறப்பு பற்றி..

# இயேசு நாதரின் அற்புதப் பிறப்பு

திருக்குர்ஆனில் ஒரு அத்தியாயம் உண்டு. அந்த அத்தியாயத்தின் பெயரே மரியம் என்பது. அதில்தான் இந்த அரிய செய்திகள் காணக் கிடைக்கின்றன:

- இறைவன் வானவர் ஜிப்ரீலை (காப்ரியல்) அன்னை மரியாளிடம் அனுப்பி அவரை அற்புதமாகக் கருத்தரிக்கச் செய்ததைப் பற்றி இவ்வாறு கூறுகிறான்:

**19: 16. இவ்வேதத்தில் மர்யமைப் பற்றியும் நினைவூட்டுவீராக! தமது குடும்பத்தினரை விட்டு கிழக்குத் திசையில் உள்ள இடத்தில் அவர் தனித்திருந்தார்.**

**17. அவர்களை விட்டும் ஒரு திரையை அவர் போட்டுக் கொண்டார். அவரிடம் நமது ரூஹை (பரிசுத்த ஆவியை) அனுப்பினோம். அவர் முழுமையான மனிதராக அவருக்குத் தோற்றமளித்தார்.**

**18. “நீர் இறையச்சமுடையவராக இருந்தால் உம்மை விட்டும் அளவற்ற அருளாளனிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்“ என்று (மர்யம்) கூறினார்.**

**19. “நான், உமக்குப் பரிசுத்தமான புதல்வனை அன்பளிப்புத் தருவதற்காக (வந்த) உமது இறைவனின் தூதன்“ என்று அவர் கூறினார்.**

**20. “எந்த ஆணும் என்னைத் தீண்டாமலும், நான் நடத்தை கெட்டவளாக இல்லாமலும் இருக்க எனக்கு எப்படிப் புதல்வன் உருவாக முடியும்?“ என்று (மர்யம்) கேட்டார்.**

**21. “அப்படித்தான் என்று (இறைவன்) கூறினான். “இது எனக்கு எளிதானது. அவரை மக்களுக்குச் சான்றாகவும், நம் அருளாகவும் ஆக்குவோம். இது நிறைவேற்றப்பட வேண்டிய கட்டளை“ எனவும் உமது இறைவன் கூறினான்“ (என்று ஜிப்ரீல் கூறினார்.)**

திருமணம் ஆகாமலே கருவுற்றதைத் தொடர்ந்து அன்னையவர்கள் கடுமையான மனவேதனைக்கும் சமூகத்தில் சோதனைகளுக்கும் ஆளாகிறார்கள். திருமணமாகாத ஒரு கன்னிப்பெண் திடீரென கர்ப்பிணியானால் மக்கள் வெறுமனே விட்டுவிடுவார்களா? அவரது தர்மசங்கடமான அனுபவத்தை திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

**22. பின்னர் கருவுற்று அக்கருவுடன் தூரமான இடத்தில் ஒதுங்கினார்.**

**23. பிரசவ வலி அவரை ஒரு பேரீச்சை மரத்தின் அடிப்பாகத்திற்குக் கொண்டு சென்றது. “நான் இதற்கு முன்பே இறந்து, அடியோடு மறக்கடிக்கப்பட்டவளாக இருந் திருக்கக் கூடாதா?“ என்று அவர் கூறினார்.**

**24. “கவலைப்படாதீர்! உமது இறைவன் உமக்குக் கீழே ஊற்றை ஏற்படுத்தி யுள்ளான்“ என்று அவரது கீழ்ப்புறத்திலிருந்து வானவர் அழைத்தார்.**

**25. “பேரீச்சை மரத்தின் அடிப்பாகத்தை உலுக்குவீராக! அது உம் மீது**

**பசுமையான பழங்களைச் சொரியும்“ (என்றார்)**
**26. நீர், உண்டு பருகி மன நிறைவடைவீராக! மனிதர்களில் எவரையேனும் நீர் கண்டால் “நான் அளவற்ற அருளாளனுக்கு நோன்பு நோற்பதாக நேர்ச்சை செய்து விட்டேன். எந்த மனிதனுடனும் பேச மாட்டேன்“ என்று கூறுவாயாக!**

இவ்வாறு அற்புதமான முறையில் எந்த ஆணின் துணையுமின்றி ஏசு என்ற அற்புத மகனைக் கர்ப்பம் தரித்துப் பெற்றெடுக்கிறார்கள் அன்னை மரியாள் அவர்கள்!

இனி அந்த மகவைத் தாங்கிக்கொண்டு மக்களுக்கு முன்னால் சென்றாக வேண்டுமே! அவரது மனோ நிலையைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்! ‘எப்படி நான் மக்களின் ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் தாங்கிக் கொள்வேன்? எந்த முகத்தோடு நான் அவர்களை எதிர்கொள்வேன்? குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஓடி ஒளியவா முடியும்?’ .... ஆம் அவர் எதிர்பார்த்தபடியே மக்கள் கடுமையாக அவரை ஏசினார்கள்.

**27. (பிள்ளையைப் பெற்று) அப்பிள்ளையைத் தமது சமுதாயத்திடம் கொண்டு வந்தார். “மர்யமே! பயங்கரமான காரியத்தைச் செய்து விட்டாயே?“ என்று அவர்கள் கேட்டனர்.**
**28. “ஹாரூனின் சகோதரியே! உனது தந்தை கெட்டவராக இருந்ததில்லை. உனது தாயும் நடத்தை கெட்டவராக இருந்ததில்லை“ (என்றனர்)**

## கல்லெறி தண்டனையில் இருந்து அன்னையைக் காப்பாற்றியது எது?

இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் அன்னை மரியாள் அவர்கள் என்ன செய்தார்கள்? அன்னை மரியாளின் மீது விபச்சாரக் குற்றச்சாட்டை முன்வைத்த மக்கள் திடீரென எவ்வாறு மாறினார்கள்? அன்றைய காலகட்டத்தில் யூதர்களின் வழக்கப்படி விபச்சாரத்திற்குரிய தண்டனை குற்றவாளியை கல்லால் எரிந்து கொல்வதுதான் என்பதை அறிவோம். இதில் இருந்து அன்னை மரியாள் எப்படி தப்பித்தார்கள்? பிறகு எப்படி அவர்களைப் புனித மங்கையாக ஏற்றுக் கொண்டார்கள்? குழந்தை ஏசுவை எப்படி புண்ணிய புத்திரனாக ஏற்றுக்கொள்ள காரணமாக அமைந்த நிகழ்வு எது? ஒரு முக்கியமான ஏதோ ஒன்று நிகழ்ந்திருக்க வேண்டும் அல்லவா? இந்தப் புதிருக்கு விடை காண வேண்டுமா? தொடர்ந்து படியுங்கள்....
(படிக்கும் முன் இதற்கான விடை இறுதி ஏற்பாடாம் திருக்குர்ஆனில் மட்டுமே உண்டு என்பதையும் கவனியுங்கள்)

**29. அவர் குழந்தையைச் சுட்டிக் காட்டினார்! “தொட்டிலில் உள்ள குழந்தையிடம் எவ்வாறு பேசுவோம்?“ என்று அவர்கள் கேட்டார்கள்.**
**30. உடனே அவர் (அக்குழந்தை), “நிச்சயமாக நான் அல்லாஹ்வின் அடியான். எனக்கு அவன் வேதத்தை அளித்தான். என்னை நபியாக்கினான்.**
**31, 32. நான் எங்கே இருந்த போதும் பாக்கியம் பொருந்தியவனாகவும் ஆக்கினான். நான் உயிருடன் இருந்து, என் தாயாருக்கு நன்மை செய்பவனாகவும், இருக்கும் காலமெல்லாம் தொழுமாறும், ஸகாத் கொடுக்குமாறும் எனக்குக் கட்டளையிட்டான். என்னை துர்பாக்கிய சாலியாகவும், அடக்குமுறை செய்பவனாகவும் அவன் ஆக்கவில்லை.**
**33. நான் பிறந்த நாளிலும், நான் மரணிக்கும் நாளிலும், நான் உயிருடன் எழுப்பப்படும் நாளிலும் என் மீது ஸலாம் (இறை சாந்தி) இருக்கிறது“**

(என்றார்)

ஆம் அன்பர்களே, இதைத்தான் நாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம். மரியாளைத் தூற்றிக் கொண்டிருந்த மக்கள் கூட்டம் அந்த அற்புதத்தைக் கண்கூடாகக் கண்டது. குழந்தை ஏசு வாய்திறந்து பேசிய அற்புதத்தை! இந்த அற்புதம்தான் கற்புக்கரசியான மரியாளை மக்களின் அவதூறுகளில் இருந்து காப்பாற்றியது. அந்த நிமிடம் வரை மரியாளைத் தூற்றிய மக்கள் தங்கள் தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்டு அன்னையவர்களின் தூய்மையைப் போற்ற ஆரம்பித்தார்கள். இறைவன் மிகப் பெரியவன்! இந்த மாபெரும் அற்புதம்தான் அங்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது. கைக்குழந்தை ஏசு பேசிய வார்த்தைகளும் இங்கு நாம் கவனிக்க வேண்டியவை.

- இதுதான் ஏசு செய்த முதல் அற்புதம்!
- இவைதான் ஏசுவின் முதல் வார்த்தைகள்!

இவ்வாறு இறைவனின் முந்தைய வேதம் பைபிள் விட்டுச் சென்ற புதிரை தொடர்ந்து வந்த இறுதி வேதம் குர்ஆன் அவிழ்க்கிறது.

**34. இவரே மர்யமின் மகன் ஈஸா. அவர்கள் சந்தேகம் கொண்டிருந்த உண்மைச் செய்தி இதுவெ. (அத்தியாயம் 19 - 'மரியம்' வசனங்கள் 16 முதல் 34 வரை )**

# இயேசுவிடமிருந்து முஸ்லிம்கள் கற்கும் பாடங்கள்

**(அவர் மீது இறைசாந்தி உண்டாவதாக)**

இனி வரும் பக்கங்களில் இயேசு என்ற அற்புத இறைதூதர் மூலமாக முஸ்லிம்கள் கற்கும் பாடங்களை காணவிருக்கிறோம்.

## முஸ்லிம் என்றால் யார்?

நம்மைப் படைத்து பரிபாலித்துவரும் ஏகனாகிய இறைவன் நமக்குக் கற்பிக்கும் ஏவல்கள் விலக்கல்களை ஏற்று அதன்படி வாழும்போது நமது வாழ்வில் ஒழுக்கமும் அமைதியும் உண்டாகிறது. அவ்வாறு இறைவனுக்குக் கீழ்படிந்து வாழ்வதன் மூலம் பெறப்படும் அமைதிக்குப் பெயரே இஸ்லாம் என்பதை அறிவீர்கள்.

அவ்வாறு இறைவன் எதை செய்யுமாறு ஏவுகிறானோ அவையே புண்ணியங்கள். எவற்றை செய்யாதே என்று தடுக்கிறானோ அவையே பாவங்கள் எனப்படும். இவ்வாறு பேணுதலோடு வாழ்வோருக்கு பெயரே முஸ்லிம் (இறைவனுக்குக் கீழ்படிபவர்) என்பது. ஒரு தொப்பியோ தாடியோ வைப்பதனாலோ அல்லது அரபியிலோ உருது மொழியிலோ பெயர் வைப்பதனாலோ யாரும் முஸ்லிம் ஆகி விட முடியாது. முழுக்க முழுக்க பின்பற்றுதல் மூலமே ஒருவர் முஸ்லிம் ஆக முடியும்.

இறைவன் அனுப்பிய அனைத்து தூதர்களையும் பாகுபாடின்றி ஏற்றுக்கொள்வது முஸ்லிமின் பண்புகளில் ஒன்றாகும். அந்த அடிப்படையில் இயேசுநாதர் மூலம் நாம் பெறும் பாடங்கள் என்ன என்பதை தொடர்ந்து காண உள்ளோம்... இன்ஷாஅல்லாஹ்

இயேசுவிடமிருந்து முஸ்லிம்கள் கற்கும் பாடங்கள்

# இயேசுவின் தோற்றமும் விண்ணேற்றமும்

யாகோப் (யஃகூப்) என்ற தீர்க்கதரிசியே "இஸ்ராயீல்" என்றும் அழைக்கப்பட்டார்கள். இவர்களின் சந்ததியில் வந்தவர்கள்கள்தான் யூதர்கள் என்று அழைக்கப்படக்கூடிய இஸ்ரவேலர்கள்.

● **யாகோபிற்கு மரணம் நெருங்கியதும் அவர் தம் மக்களிடம் கேட்கிறார் "எனக்கு பின் நீங்கள் யாரை வணங்குவீர்கள்?" மக்கள் பதில் சொல்கிறார்கள் "நீங்கள் வணங்கிய அந்த வணக்கத்திற்குரியவனும் உங்கள் (குடும்ப) முன்னோர்களான அப்ரஹாம்(இப்ராஹீம்) இஸ்மவேல்(இஸ்மாயீல்) ஈசாக்(இஸ்ஹாக்) ஆகியோர் வணக்கத்திற் குரியவனாக ஏற்று வணங்கிய அந்த ஒரே இறைவனையே வணங்குவோம்" (அல் குர்ஆன் 2:133)**

யாகோபின் சந்ததிகள் (யூதர்கள்) ஏக இறை வழிபாட்டிலேயே நிலைத்திருந்தார்கள். பல இறைத்தூதர்களும் அந்த சந்ததிகளில் வந்தார்கள். பல இறைத்தூதர்களிடமிருந்து அறிவுரைகளைப் பெற்றபோதிலும் யூதர்கள் பின்னாளில் கடின சித்தம் உள்ளவர்களாகவும் எத்தகைய கொடுமையை செய்வதற்கும் அஞ்சாதவர்களாகவும் மாறிப்போனார்கள். மோஸே அவர்களுக்குப் பிறகு இறைவன் தொடர்ச்சியாக யூதர்களுக்காக தீர்கதரிசிகளை அனுப்பிக் கொண்டிருந்தான். அப்படி அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகள் அவர்களது அநியாயமான செயல்பாடுகளுக்கு எதிராக இருந்ததால் அவர்களில் பலரும் அந்த யூதர்களால் பொய்பிக்கப்பட்டார்கள் அல்லது கொலை செய்யப்பட்டார்கள்.

இந்த சூழலில்தான் அந்த சமூகத்திற்கு வழிகாட்ட இயேசு(ஈஸா) தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். எவ்வளவுதான் கெட்ட சமுதாயமாக இருந்தாலும் அதிலும் அபூர்வமாக இறைவனுக்கு அஞ்சி தம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளக் கூடிய சில நல்ல மனிதர்கள் இருந்து விடுவது இயல்புதான். அந்த நல்லவர்கள் மூலமாகவும், தாம் நல்லவர்களாக உருவாக்கும் தம்முடைய சந்ததிகள் மூலமாகவும் - வரும் தலைமுறைக்கு - நல்ல விஷயங்கள் போய் சேர இது வழிவகுக்கிறது. இறைவன்தான் இந்த ஏற்பாட்டை செய்கிறான். இறைவனின் இந்த ஏற்பாட்டின் அடிப்படையில்தான் யூத வம்சத்தில் பிறந்த இயேசு(ஈஸா) அவர்களின் பாட்டி - அதாவது மரியாள்(மர்யம்) உடைய தாயார் - நல்லவர்களாக இருந்திருக்கிறார்கள். இறைவனுக்கு அஞ்சி அவனுக்கு மட்டும் வழிபட்டு நடந்த அந்த அம்மையாரின் பிரார்த்தனைக்காகவும், இயல்பாக அனுப்பப்பட்ட இறைத்தூதர்கள் பொய்பிக்கப்பட்டு பலர் கொலையும் செய்யப்பட்டதால் கடின சித்தம் படைத்த யூதர்களை நல்வழி படுத்த இயல்புக்கு மாற்றமாக ஒரு அத்தாட்சி மிக்க இறைத்தூதரை அனுப்புவோம் என்ற இறைவனின் ஏற்பாட்டின் படியுமே இயேசு(ஈஸா) அவர்களின் பிறப்பு நிகழ்கிறது.

● **(இயேசுவாகிய) அவர் (நம்முடைய) அடியாரேயன்றி வேறில்லை. அவர்மீது நாம் அருள்புரிந்து இஸ்ராயீலின் மக்களுக்கு அவரை ஓர் உதாரணமாக்கினோம் (அல் குர்ஆன் 43:59)**

## இறைத்தூதர்களின் தியாகம்

இந்த குறுகிய வாழ்வை மனிதர்களுக்கு ஒரு பரீட்சையாகவும் இவ்வுலகை அதற்கான பரீட்சைக் கூடமாகவும் படைத்துள்ள இறைவன் மக்கள் அதர்மத்தின்பால் எவ்வளவுதான் வரம்புமீறிச் சென்றாலும் அங்கு மீண்டும் தர்மத்தை நிலைநாட்டுவதற்காக அவ்வப்போது தன் தூதர்களை நியமிக்கிறான். அவ்வாறு அதர்மம் அவ்வப்போது கட்டுப்படுத்தப் படாமல் விடப்பட்டிருந்தால் என்ன ஆகியிருக்கும் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

இறைவன் நினைத்திருந்தால் அப்படியே நம்மை கலவரங்களுக்கும் குழப்பங்களுக்கும் இடையே விட்டிருக்கலாம். அவனை கேட்பதற்கு யாரும் இல்லை. ஆனால் அவன் தன் கருணையினால் மீண்டும் மீண்டும் தர்மத்தை நிலைநாட்டுவதற்காக மனிதர்களுள் புனிதர்களை தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் தனது தர்மத்தை நிலைநாட்டுகிறான். அதற்காக நாம் நம் இறைவனுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். தர்மத்தை நிலைநாட்டும் பணியில் தங்கள் உயிரைத் துச்சமாகக் கருதி தியாகங்கள் பல மேற்கொண்டு இறைவனின் மார்க்கம் பூமியில் நிலைபெற வேண்டும் என்பதற்காக இரவுபகலாக உழைத்த அந்த உத்தமர்களுக்கும் நாம் நன்றிக்கடன் பட்டுள்ளோம். பூமியில் இத்தனை கலகங்களுக்கும் குழப்பங்களுக்கும் மத்தியிலும் ஆங்காங்கே ஓரளவாவது தர்மமும் நன்மைகளும் எஞ்சியிருப்பதாகக் காண்பீர்கள் ஆனால் அதற்கு அந்த புனிதர்கள் மேற்கொண்ட தியாகங்களும் முக்கிய காரணமே. பூமியின் எந்த மூலைக்கு அவர்கள் வந்திருந்தாலும் சரியே. நாம் அவர்கள் அனைவரையும் நன்றி உணர்வோடு நினைத்து நாம் அந்த சான்றோர்களுக்காக பிரார்த்திக்கவேண்டும். எல்லாம்வல்ல இறைவன் அவர்கள் அனைவர் மீதும் அருளும் சாந்தியும் நல்குவானாக. மறுமையில் அந்த சான்றோருடன் வாழும் பாக்கியத்தை நம் அனைவருக்கும் தருவானாக.

## இறைத்தூதர்களின் வரிசையில் இயேசுநாதரின் சிறப்பு

அவ்வாறு இறைவனின் கருணையை பூமியின்மேல் பரப்ப வந்த நல்லோர்களில் ஒருவரே இயேசு. அவ்வாறு பூமியில் நன்மையை ஏவ வந்த புனிதர்களை கொடியோர்கள் கொன்று தீர்க்கத் துணிந்தவேளை அவர்களுக்கு இறைவன் புதியதோர் பாடம் கற்பிக்க நினைத்தான் போலும்! பிறக்கும்போதே இறைவனின் தூதராகவே பிறந்தார் இயேசு! வேத அறிவுடன் பிறந்தார் அவர்! அவர் இறைதூதராக ஆற்றவேண்டிய பணிகளை அயராது ஆற்றினார்! இறுதியில் கயவர்கள் அவரைக் கொல்ல முற்பட்டபோது அந்த சதியில் சிக்கவிடாமல் அவரை அற்புதமான முறையில் விண்ணேற்றம் செய்தான் எல்லாம் வல்ல இறைவன்!

● **வாசகர் எண்ணம்:** நபிகளாரைப் பற்றி இஸ்லாமியர்களும் ஏசுவைப் பற்றி கிருஸ்தவர்களும் அறிந்து கொள்ளாத தகவல்களை திருக்குர்ஆன் நற்செய்தி மலர் அருமையாக விளக்குகிறது. மக்கள் இவ்விரு மகான்களை (இறைத்தூதர்களை)ப் பற்றி தெரிந்து கொள்ளாமல் மதத்தின் பெயரால் முரண்பட்டுக் கிடப்பது அறியாமையே ஆகும். - என். காசிநாதன், KGF

● டிசம்பர் இதழ்... அருமையான கட்டுரைகள், நமக்குள் கண்டிப்பாக ஒற்றுமையை வளர்க்கும். - ஏசுபாதம், பெங்களூர்.

இயேசுவிடமிருந்து முஸ்லிம்கள் கற்கும் பாடங்கள்

# இயேசுவின் பாட்டியிடமிருந்து மனிதகுலம் பெறும் பாடங்கள்

திருக்குர்ஆன் இயேசுவைப் பற்றி விரிவான வாழ்க்கை வரலாற்றைக் கூறவில்லை. எனினும் அவர் பிறப்பு மேன்மை, அவரது இறைச் செய்தி, அவரது விண்ணேற்றம், அவரைப் பற்றிய கிறிஸ்தவ நம்பிக்கைகள் மீதான தீர்ப்புகள் ஆகியவை பற்றிய முக்கிய விபரங்களை எடுத்துக் கூறுகிறது. வரலாற்றைக் கற்றுத்தருவது திருக்குர்ஆனின் நோக்கமல்ல. மாறாக இயேசுவின் வாழ்விலிருந்தும் அவரோடு தொடர்புடையவர்களின் வாழ்விலிருந்தும் மனிதகுலம் பெறவேண்டிய பாடங்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறான் இறைவன். இறைவேதத்தின் நோக்கமே அதுவல்லவா?

இயேசுவின் பாட்டி

இயேசு பற்றிய குறிப்பு திருக்குர்ஆனில் அவரது பாட்டியின் பிரார்த்தனையில் இருந்து தொடங்குகிறது. அன்னை மரியாளை அவர் கர்ப்பம் தரித்தபோது இறைவனுக்கு அவரை நேர்ச்சை அவர் செய்த விதத்தை மனித குலத்துக்குப் பாடமாக போதிக்கிறான் கருணையுள்ள இறைவன்.

● **3:35 இம்ரானின் மனைவி ‘‘என் இறைவனே! என் கர்ப்பத்திலுள்ளதை உனக்கு முற்றிலும் அர்ப்பணிக்க நான் நிச்சயமாக நேர்ந்து கொள்கிறேன். எனவே (இதை) என்னிடமிருந்து நீ ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக நீ யாவற்றையும் செவியுறுவோனாகவும், நன்கறிபவனாகவும் இருக்கின்றாய்‘‘ என்று கூறியதையும்-**

● **3:36 (பின், தான் எதிர்பார்த்ததற்கு மாறாக) அவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்றதும். ‘‘‘என் இறைவனே! நான் ஒரு பெண்ணையே பெற்றிருக்கிறேன்‘‘‘ எனக் கூறியதையும் நினைவு கூறுங்கள். அவள் பெற்றெடுத்ததை அல்லாஹ் நன்கறிவான். ஆண், பெண்ணைப் போலல்ல (மேலும் அந்தத்தாய் சொன்னாள்.) ‘‘‘அவளுக்கு மர்யம் என்று பெயரிட்டுள்ளேன். இன்னும் அவளையும், அவள் சந்ததியையும் விரட்டப்பட்ட ஷைத்தானி(ன் தீங்குகளி)லிருந்து காப்பாற்றத் திடமாக உன்னிடம் காவல் தேடுகின்றேன்.**

எவ்வளவு அழகிய பாடம்! குழந்தைப்பேறு என்பது இறைவனின் அருட்கொடை. அக்குழந்தை நல்லவனாக அல்லது நல்லவளாக வளர ஒரு தாய் இடும் நல்ல உரமே அவளது பிரார்த்தனை! கர்ப்பத்தில் குழந்தை உருவாகும்போதே குழந்தையை இறைப்பணிக்காக நேர்ந்து அதன் வளர்ப்பையும் அவ்விறைவனிடமே ஒப்படைக்கும் ஒரு முன்மாதிரித் தாயை நாம் இயேசுவின் பாட்டியிடம் காண்கிறோம். அவ்வாறு யாராவது ஆத்மார்த்தமாகப் பிரார்த்தித்து இறைவனிடம் ஒப்படைத்தால் அதை ஏற்றுக்கொள்ளவும் செய்கிறான் என்பதை அடுத்த வசனங்கள் மூலம் கற்றுதருகிறான் இறைவன்:

● **3:37 அவளுடைய இறைவன் அவள் பிரார்த்தனையை அழகிய முறையில் ஏற்றுக் கொண்டான். அக்குழந்தையை அழகாக வளர்த்திடச் செய்தான். அதனை வளர்க்கும் பொறுப்பை ஜகரிய்யா ஏற்றுக்கொள்ளும்படி செய்தான். ஜகரிய்யா அவள் இருந்த மிஹ்ராபுக்குள் (தொழும் அறைக்குப்) போகும் போதெல்லாம், அவளிடம் உணவு**

**இருப்பதைக் கண்டார், ‘‘மர்யமே! இ(வ்வுணவான)து உனக்கு எங்கிருந்து வந்தது?‘‘ என்று அவர் கேட்டார். ‘‘இது அல்லாஹ்விடமிருந்து கிடைத்தது - நிச்சயமாக அல்லாஹ் தான் நாடியவர்களுக்குக் கணக்கின்றி உணவளிக்கின்றான்‘‘ என்று அவள்(பதில்) கூறினாள்.**

● நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“பிறக்கக்கூடிய ஒவ்வொரு குழந்தையையும் அது பிறக்கும்போதே ஷைத்தான் தீண்டி விடுகிறான். ஷைத்தான் தீண்டுவதாலேயே அது சப்தமிட்டு அழுதுக்கொண்டு பிறக்கிறது. (ஆனால்) மரியமையும் அவரது புதல்வரை(இயேசுவை)யும் தவிர” அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) நூல்:புகாரி

பாருங்கள், ஒரு தாயின் பிரார்த்தனை அவளது மக்களுக்கு எப்படிப் பயனுள்ளதாக அமைகிறது! அவளது மகள் மட்டுமல்ல தொடர்ந்துவரும் சந்ததிகளுக்கும் ஷைத்தானின் தீங்குகளிலிருந்து பாதுகாப்பு! இறைவனிடம் ஒப்படைத்ததால் அந்த மகளின் வளர்ப்பு, உணவு என முழு பொறுப்பையும் இறைவனே ஏற்றுக்கொள்ளவும் செய்கிறான்.

நாமும் இதிலிருந்து பாடம் பெறுவோமா?

இயேசுவிடமிருந்து முஸ்லிம்கள் கற்கும் பாடங்கள்

# அன்னை மரியாளிடமிருந்து மனிதகுலம் பெறும் பாடங்கள்

உள்ளத் தூய்மையோடும் உயர்ந்த நோக்கத்திற்காகவும் இறைவனிடம் செய்யும் முறையீடுகள் (பிரார்த்தனைகள்) எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை இயேசுவின் பாட்டியின் மூலம் நாம் கற்றுக்கொண்டோம்.

● **3:37 அவளுடைய இறைவன் அவள் பிரார்த்தனையை அழகிய முறையில் ஏற்றுக் கொண்டான். அக்குழந்தையை அழகாக வளர்த்திடச் செய்தான். அதனை வளர்க்கும் பொறுப்பை ஜகரிய்யா ஏற்றுக் கொள்ளும்படி செய்தான். ஜகரிய்யா அவள் இருந்த மிஹ்ராபுக்குள் (தொழும் அறைக்குப்) போகும் போதெல்லாம், அவளிடம் உணவு இருப்பதைக் கண்டார், ‘‘மர்யமே! இ(வ்வுணவான)து உனக்கு எங்கிருந்து வந்தது?‘‘ என்று அவர் கேட்டார். ‘‘இது அல்லாஹ்விடமிருந்து கிடைத்தது - நிச்சயமாக அல்லாஹ் தான் நாடியவர்களுக்குக் கணக்கின்றி உணவளிக்கின்றான்‘‘ என்று அவள்(பதில்) கூறினாள்.**

மேற்படி வசனத்தில் இருந்து குழந்தையை -அதாவது மரியாளை - வளர்க்கும் பொறுப்பை ஒரு இறைத்தூதரே ஏற்றுக் கொள்ளும்படி செய்கிறான் கருணையாளன் இறைவன் என்பதையும் அறிகிறோம். அது மட்டுமா ஒரு பிரார்த்தனையின் விளைவாக மேலும் என்ன நடக்கிறது பாருங்கள். வளர்க்கும் பொறுப்பை ஜகரிய்யா அவர்கள் ஏற்றாலும் மரியாளுக்கு உணவளிக்கும் பொறுப்பை வல்ல இறைவனே முன்வந்து ஏற்றுக் கொள்கிறான்.

ஜகரிய்யா பொறுப்புதாரியாக்கப்பட்டார் என்பதிலிருந்து மரியாளின் தாயார் மரியாளை பெற்றவுடன் மரணித்து இருக்கக் கூடும் என்பதை யூகிக்கலாம். தாயாரின் மறைவுக்கு பிறகு அவரை வளர்ப்பது யார் என்ற பிரச்சனையும் அவர் குறித்த சர்ச்சையும் கிளம்பியதாக இறைவன் 3:44 வசனத்தில் குறிப்பிடுகிறான். இதிலிருந்து அவர் தனித்துவம் வாய்ந்த பெண்ணாக வளர்ந்துள்ளார் என்பதை விளங்கலாம்.

பிற்காலத்தில் இறைவனால் ஏற்படப்போகும் ஒரு மகத்தான சோதனைக்கு அவரை மனோவியல் ரீதியில் தயார் படுத்துவதற்காக அவரை வளர்க்கும் பொறுப்பை இறைவன் இறைத்தூதர் ஜகரிய்யா அவர்களிடம் ஒப்படைக்கிறான். மரியாளை பொறுப்பேற்று வளர்க்கும் போது ஜகரிய்யா அவர்களுக்கு குழந்தை இல்லை. வயதானாலும் குழந்தைக்காக ஏங்கும் இதயம் மட்டும் அவர்களுக்கு ஓயவில்லை. மரியாளை குழந்தைக்கு குழந்தையாக வளர்த்து வணக்க வழிபாட்டின் மூலம் அவர்களை பக்குவப்படுத்திக் கொண்டிக்கும் வேளையில்தான் மரியாளுக்கு இறைவன் புறத்திலிருந்து உணவுகள் வழங்கப்படுவதை ஜகரிய்யா அவர்கள் பார்க்கிறார்கள்.

இது எப்படி உனக்கு கிடைத்தது? என்ற கேள்விக்கு கணக்கின்றி கொடுக்கும் ஆற்றல் உள்ள இறைவன்தான் இதை எனக்கு கொடுக்கிறான் என்று மரியாளிடமிருந்து பதில் வருகிறது. இதுதான் மனிதகுலம் மரியாளிடமிருந்து பெரும் மிகப்பெரிய பாடமாகும். எல்லாப் படைப்பினங்களுக்கும் உணவளிப்பவன் இறைவனே என்ற நம்பிக்கையும் இயற்கை விதிகளைக் கடந்து தான் நாடுவதை நிறைவேற்றக் கூடியவனே இறைவன் என்ற நம்பிகையும் பொதுவாக சாதாரண மனிதர்களால் உள்வாங்கிக்கொள்ள முடியாதவை. இதை மரியாள் (அலை) மூலம் மனித குலத்துக்கு போதிக்கிறான் வல்ல இறைவன். ஏன், ஒரு பெரும் இறைத்தூதர் கூட இதிலிருந்தல்லவா பாடம் பெறுகிறார்கள்!

எதற்கும் ஆற்றல் உள்ள இறைவன் தனக்கு ஏன் ஒரு வாரிசை - மகனை கொடுக்க மாட்டான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில், “இறைவா உன்னிடமிருந்து எனக்கொரு தூய குழந்தையை கொடுத்தருள்“ என்று ஜகரிய்யா அவர்கள் பிரார்த்திக்கிறார்கள்.

இறைவன் அதை ஒப்புக் கொள்கிறான். இறைவன் ஒப்புக் கொண்டாலும் தள்ளாத முதுமையை அடைந்து விட்ட ஜகரிய்யா அவர்களால் இதை நம்ப முடியவில்லை. அவர்களின் மனைவியும் குழந்தைப்பேறைப் பெறும் மாதவிடாய் தகுதிகளையெல்லாம் இழந்து மலடு தட்டி விடுகிறார்கள். குழந்தை உருவாவதற்கான இயற்கை விதிகள் கடந்து போயிருந்தாலும் அவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கின்றது. யஹ்யா என்ற மகனை - “இறைத்தூதரைப்“ பெற்று எடுக்கிறார்கள்.

**● 3:38 அந்த இடத்திலேயே ஜகரிய்யா தம் இறைவனிடம் பிரார்த்தனை செய்தவராகக் கூறினார் ‘‘இறைவனே! உன்னிடமிருந்து எனக்காக ஒரு பரிசுத்தமான சந்ததியைக் கொடுத்தருள்வாயாக! நிச்சயமாக நீ பிரார்த்தனையைச் செவிமடுத்தருள்வோனாக இருக்கின்றாய்.’’**

**● 3:39 அவர் தம் அறையில் நின்று தொழுது கொண்டிருந்தபோது, மலக்குகள் அவரை சப்தமாக அழைத்து ‘‘நிச்சயமாக அல்லாஹ் யஹ்யா (எனும் பெயருள்ள மகவு குறித்து) நன்மாராயங் கூறுகின்றான். அவர் அல்லாஹ்விடமிருந்து ஒரு வார்த்தையை மெய்ப்பிப்பவராகவும், கண்ணியமுடையவராகவும், ஒழுக்க நெறி பேணிய (தூய)வராகவும், நல்லோர்களிலிருந்தே நபியாகவும் இருப்பார்’’ எனக் கூறினர்.**

**● 3:40 அவர் கூறினார் ‘‘என் இறைவனே! எனக்கு எப்படி மகன் ஒருவன் உண்டாக முடியும்? எனக்கு வயது அதிகமாகி (முதுமை வந்து) விட்டது. என் மனைவியும் மலடாக இருக்கின்றாள்’’ அதற்கு (இறைவன்), ‘‘அவ்வாறே நடக்கும், அல்லாஹ் தான் நாடியதைச் செய்து முடிக்கின்றான்’’ என்று கூறினான்.**

இயேசுவிடமிருந்து முஸ்லிம்கள் கற்கும் பாடங்கள்

# இயேசுவின் பிறப்பில் நாம் பெறும் பாடங்கள்

இயேசுவின் பாட்டியிடம் இருந்தும் தாயான மரியாளிடம் இருந்தும் மனித குலம் பெறும் பாடங்களை முன்னர் கண்டோம். எல்லாப் படைப்பினங்களுக்கும் உணவளிப்பவன் இறைவனே என்ற நம்பிக்கையும் இயற்கை விதிகளைக் கடந்து தான் நாடுவதை நிறைவேற்றக் கூடியவனே இறைவன் என்ற நம்பிகையும் நம்மில் வரவேண்டும் என்பதை இறைவன் மரியாளின் உதாரணம் மூலம் நமக்கு போதிக்கிறான்.

தொடர்ந்து இயேசுவின் அற்புதமான பிறப்பு தொடர்பான பாடங்களை பற்றி திருக்குர்ஆன் கூறுவதைப் பார்ப்போம்.

மரியாள் ஜகரிய்யா என்ற இறைத்தூதரிடம் வளர்கிறார். மிகுந்த ஒழுக்க மாண்புகளுடன் வளரும் மரியாளுக்கு திருமணத்திற்கு முன்பே - எந்த ஆணும் அவரை தீண்டாத நிலையில் - குழந்தை உருவாக வேண்டும் என்பது இறைவனின் ஏற்பாடு. மிகவும் கட்டுப்பாட்டுடன் வளர்ந்த ஒருவருக்கு இந்த சோதனையை எதிர்கொள்ள முடியுமா... மனம் இடங்கொடுக்குமா...என்பதை நாம் இங்கு சிந்திக்கக் கடமைப் பட்டுள்ளோம்.

கணவன் - மனைவி இணைவதன் வழியாகவே குழந்தை உருவாக முடியும் என்று அறிந்து வைத்திருந்த ஒரு பெண்ணுக்கு எந்த ஒரு ஆணும் தீண்டாமலேயே குழந்தை உருவாகும் என்பதை எப்படி ஒப்புக் கொள்ள முடியும்?

இந்த கேள்விக்கான விடையை ஜகரிய்யா என்ற இறைத்தூதரின் வாழ்விலிருந்து மரியாள் பெறுகிறார். இயற்கையைக் கடந்த ஒரு அற்புதம் தான் வளரும் வீட்டில் நிகழ்வதை மரியாள் பார்க்கிறார். முதுமையின் எல்லைக்கு சென்ற நிலையில் ஜகரிய்யா அவர்கள் குழந்தைப் பெற்று எடுக்கிறார்கள். இதில் நிறைய பாடங்கள் மரியாளுக்கும் அடங்கி இருந்தன.

## மரியாளின் மேன்மை

மரியாளின் மேன்மை பற்றி திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

- **3:42-43. 'மர்யமே! அல்லாஹ் உம்மைத் தேர்வு செய்து தூய்மையாக்கி அகிலத்துப் பெண்களை விட உம்மைச் சிறப்பித்தான். மர்யமே! உமது இறைவனுக்குப் பணிவாயாக! ஸஜ்தாச் செய்வாயாக! ருகூவு செய்வோருடன் ருகூவு செய்வாயாக!" என்று வானவர்கள் கூறியதை நினைவூட்டுவீராக!**



(ஸஜ்தா- சிரம் பணிதல், ருகூவு - குனிந்து வணங்குதல்)

தொடர்ந்து இயேசுவைக் கருத்தரிப்பதற்கு முன் நடந்த சம்பவங்களை

வல்ல இறைவன் தனது இறுதிமறையில் கூறுவதைப் பாருங்கள்:

● **19:16. இவ்வேதத்தில் மர்யமைப் பற்றியும் நினைவூட்டுவீராக! தமது குடும்பத்தினரை விட்டு கிழக்குத் திசையில் உள்ள இடத்தில் அவர் தனித்திருந்தார்.**

● **19:17. அவர்களை விட்டும் ஒரு திரையை அவர் போட்டுக் கொண்டார். அவரிடம் நமது ரூஹை அனுப்பினோம். அவர் முழுமையான மனிதராக அவருக்குத் தோற்றமளித்தார்.**

(ரூஹ் - பரிசுத்த ஆவி - ஜிப்ரீல் அல்லது காப்ரியல் என்ற வானவர்)

## தற்காப்புக்காக மரியாள் கையாளும் உத்தி

வந்தவர் வானவர் என்று அறியாததால் கற்புக்கரசியாகத் திகழ்ந்த மரியாளுக்கு அது ஓர் அதிர்ச்சி தரும் சம்பவமாக இருந்தது. அந்த அதிர்ச்சியில் இறைவனிடமே புகலிடம் தேடுகிறார்.

● **19:18. "நீர் இறையச்சமுடையவராக இருந்தால் உம்மை விட்டும் அளவற்ற அருளாளனிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்""" என்று (மர்யம்) கூறினார்.**

இப்படிப்பட்ட எதிர்பாராத ஆபத்துகள் அல்லது பயமூட்டும் நிகழ்வுகள் நம் வாழ்விலும் வரலாம். தற்காப்புக்காக மரியாள் கையாளும் உத்தி இங்கு நாம் கவனிக்க வேண்டிய விடயமாகும். தன்னந்தனிமையில் தன் எதிரே நிற்கும் ஆடவனுக்கு இறைவனைப் பற்றி நினைவூட்டி இறைவனிடமே தனக்குப் பாதுகாப்பும் தேடுகிறார். அந்த வல்லோனை மீறி என்னதான் சம்பவித்து விடமுடியும்?

இதே உத்தியை சரித்திரத்தில் இன்னொரு பெண் கையாண்டு தன்னைக் கற்பழிக்கவிருந்த ஆடவனிடம் இருந்து தற்காத்துக் கொள்வதை ஒரு நபிமொழி மூலம் அறிகிறோம்

ஒரு குகைக்குள் சிக்கிக் கொண்ட மூன்றுபேர் தங்கள் இறைவனுக்கு பயந்து செய்த நற்காரியங்களை முன்னிறுத்தி இறைவனிடம் பாதுகாவல் தேடினார்கள். அவர்களில் ஒருவர் கூறியதைப் பாருங்கள்:

"இறைவா! என்னுடைய தந்தையின் உடன் பிறந்தாரின் மகளை எந்த ஆணும் எந்தப் பெண்ணையும் விரும்புவதைவிட அதிகமாக விரும்பினேன் என்பதை நீ அறிவாய். அவள் தனக்கு நூறு தீனார் தரும்வரை தன்னை அடையமுடியாது என்றாள். நான் உழைத்து நூறு தீனாரைத் திரட்டினேன். அவளுடைய இரண்டு கால்களுக்கிடையே நான் அமர்ந்தபோது அல்லாஹ்வை அஞ்சிக்கொள்! உரிய முறையின்றி முத்திரையை உடைக்காதே! என்று அவள் கூறினாள். உடனே அவளைவிட்டு நான் எழுந்து விட்டேன். இதை உன்னுடைய திருப்தியை நாடி நான் செய்திருப்பதாக நீ அறிந்தால் இந்தச் சிரமத்தைவிட்டு நீக்கு" எனக் கூறினார். அல்லாஹ் அவர்களை விட்டும் மூன்றில் இரண்டு மடங்கு (சிரமத்தை) நீக்கினான். (புகாரி)

வந்தவர் வானவர்களின் தலைவரான ஜிப்ரீல் என்பதை உணர்ந்து மரியாளின் அதிர்ச்சி நீங்கியது.

● **19:19. "நான், உமக்குப் பரிசுத்தமான புதல்வனை அன்பளிப்புத் தருவதற்காக (வந்த) உமது இறைவனின் தூதன்" என்று அவர் கூறினார்.**

ஒரு அதிர்ச்சியில் இருந்து நீங்கியதும் அதைவிடப் பெரிய அதிர்ச்சி

மரியாளைத் தாக்கியது! “கன்னிப்பெண்ணான எனக்கு குழந்தையா?”

**●19:20. “எந்த ஆணும் என்னைத் தீண்டாமலும், நான் நடத்தை கெட்டவளாக இல்லாமலும் இருக்க எனக்கு எப்படிப் புதல்வன் உருவாக முடியும்?“ என்று (மர்யம்) கேட்டார்.**

**●19:21. ‘அப்படித் தான். இது எனக்கு எளிதானது. அவரை மக்களுக்கு சான்றாகவும், நம் அருளாகவும் ஆக்குவோம். “இது நிறைவேற்றப்பட வேண்டிய கட்டளையாகும்“ என உமது இறைவன் கூறுகிறான்“ என்று அவர் கூறினார்.**

## இறைவன் வகுத்ததே இயற்கை விதிகள்

ஆம், இவ்வுலகைப் படைத்து பரிபாலிப்பவன் இறைவன். அவன் வகுத்ததே இயற்கை விதிகள்.

**● 87:2,3. அவனே படைத்தான். ஒழுங்குற அமைத்தான். அவனே விதிகளை நிர்ணயித்தான். வழி காட்டினான்.**

அவன் அவ்விதிகளுக்குக் கட்டுப் பட்டவன் அல்ல. அவன் தான் நினைப்பதை எந்த விதிகளுக்கும் உட்படாமல் மிகமிகக் கச்சிதமாக நடத்தி முடிப்பவன். அப்படிப்பட்டவனே நமது இறைவன். அந்த இறைவனிடமே நாம் நமது பிரார்த்தனைகளை முன்வைக்கிறோம் என்பதை நாம் பெரும்பாலும் யோசிப்பதில்லை. பொதுவாக நாம் நமக்கோ அல்லது மற்ற மனிதர்களுக்கோ சாத்தியமான ஒன்றைத்தான் இறைவனிடம் பிரார்த்தித்துக் கேட்போம். நமக்கு அசாத்தியமாகப்படும் ஒன்றைக் கேட்பதற்கு நமது மனம் இடம் கொடுப்பதில்லை.

● நமக்கு வேண்டியவர்கள் நோயினால் பாதிக்கப் பட்டு சிகிச்சை பெறும்போது டாக்டர் “நாங்கள் எங்களால் முடிந்ததெல்லாம் பார்த்துவிட்டோம், இனி இவர் பிழைக்க வழியில்லை!” என்று கூறுவதைச் செவியுற்றிருப்போம்.

● நீண்ட காலமாக குழந்தைப் பேறு இல்லாமல் கஷ்டப்படும் தம்பதியினரிடம் டாக்டர், “நாங்கள் எல்லாப் பரிசோதனைகளும் சிகிச்சையும் நடத்திவிட்டோம், உங்களுக்குக் குழந்தை பிறக்க வழியேதும் இல்லை” என்று சொல்வதையும் கேட்டிருப்போம்.

● நினைத்தவுடன் சென்றடைய முடியாத தூரத்தில் உள்ள நமது உறவினர் ஒருவருக்கு அவசர உதவி ஒன்றை உடனடியாகச் செய்ய வேண்டிய சூழ்நிலையைச் சந்தித்திருப்போம்.

இப்படிப்பட்ட பல சூழ்நிலைகளில் மனம் உடைந்து இறைவனிடம் பிரார்த்திப்பதையே விட்டு விடுவது மனித வழக்கம். ஆனால் ஒரு உண்மை இறைவிசுவாசி அப்படி இருக்கக் கூடாது. இறைவனின் வல்லமையைக் குறைத்து மதிப்பிடக்கூடாது. நமக்கு அசாத்தியமானதையும் இறைவனிடம் கேட்க வேண்டும்.

வயதான காலத்தில் ஜகரிய்யா அவர்கள் பிள்ளைப் பேறு பெற்றதும், தனிமையில் இருந்த மரியாளுக்கு கோடைக்காலப் பழவகைகள் குளிர்காலத்தில் கிடைத்ததும், கன்னிப்பெண் மரியாள் குழந்தைப் பேறு பெறுவதும் எல்லாம் இறைவனின் அசாதாரண வல்லமையை நமக்கு நினைவூட்டும் பாடங்களாகும். பயபக்தியோடு அவனை அணுகினால் அதிலிருந்து நாமும் பயன் பெறலாம்!

# இயேசுவின் அன்னையும் நபிகளாரின் மகளும்

இயேசுவின் அன்னை மரியாள் அவர்தம் தாயாரின் பிரார்த்தனையின் பலனாக இறைவனின் நேரடி கண்காணிப்பில் வளர்கிறார்கள். அவரைப் பற்றி இறைவன் கூறுகையில்,

**● ஆகவே, அவரை (குழந்தை மரியமை) அவருடைய இறைவன் அழகியமுறையில் ஏற்றுக்கொண்டான். அதை நல்ல பயிராக வளரச் செய்தான். அதற்கு ஐக்கரியாவைப் பொறுப்பாக்கினான். மர்யம் இருந்த மாடத்திறகுள் ஐக்கரிய்யா நுழைந்த போதெல்லாம் அவருக்கருகில் ஏதேனும் உணவுப் பொருள் இருப்பதைக் கண்டு, ''மர்யமே! இது உனக்கு எங்கிருந்து கிடைத்தது?'' என்று கேட்டார். அதற்கு அவர், ''இது அல்லாஹ்விடமிருந்து கிடைத்தது. அல்லாஹ், தான் நாடுவோருக்கு கணக்கின்றி வழங்குவான்'' என்று கூறினார். (அல்-குர்ஆன் 3: 37)**

(படைத்து பரிபாலித்து வரும் இறைவனுக்கே அல்லாஹ் என்று அரபு மொழியில் கூறப்படும்)

மேற்கண்ட வசனத்தில் அன்னை மரியம் அவர்களுக்கு உணவு கிடைத்த விதம் பற்றி நபி ஐக்கரிய்யா(அலை) அவர்கள் விசாரிக்கும் போதெல்லாம், "இது அல்லாஹ்விடமிருந்து கிடைத்தது, அல்லாஹ் தான் நாடுவோருக்கு கணக்கின்றி வழங்குவான்" என்று அல்லாஹ்வை கண்ணியப்படுத்தும் வார்த்தையை அன்னை மர்யம் (அலை) பயன்படுத்தினார்கள் என்பதை இறைவன் அருள்மறையில் சொல்லிக் காட்டுகின்றான்.

## மர்யம்(அலை) அவர்களைப் போன்றவர்

அன்னை மர்யம்(அலை) அவர்களைப் போன்றவர் என்று நபி(ஸல்) அவர்களால் பாராட்டப்பட்டவர் யார் தெரியுமா? அறிந்து கொள்ள கீழே உள்ள பொன்மொழியை படியுங்கள்

ஜாபிர்(ரலி) அவர்கள் கூறியதாவது:

ஒரு தடவை நபி(ஸல்) அவர்கள் பல நாட்கள் சாப்பிடாமல் இருந்ததால் மிகுந்த சிரமத்திற்கு ஆளானார்கள். எனவே, தம்முடைய துணைவியாரின் வீடுகளுக்குச் சென்று பார்த்தார்கள். அவர்களிடமும் எதுவும் கிடைக்கவில்லை. உடனே (தம்முடைய மகள் ஃபாத்திமா(ரலி) அவர்களிடம் வந்து, மகளே! நான் பசியோடு இருக்கின்றேன் சாப்பிடுவதற்கு உன்னிடம் ஏதேனும் இருக்கிறதா?" என்று கேட்டார்கள்.

அதற்கு பாத்திமா(ரலி), "என் தந்தையும் தாயும் தங்களுக்கே அர்ப்பணம்! அல்லாஹ்வின் மீது ஆணையாக! (என்னிடம்) எதுவுமில்லை" என்று கூறினார்கள். அதனால் நபி(ஸல்)அவர்கள் அங்கிருந்து போய்விட்டார்கள். சிறிது நேரத்திற்கு பிறகு ஃபாத்திமா(ரலி) அவர்களுக்கு பக்கத்து வீட்டுப் பெண்மணி இரு ரொட்டிகளையும் சில இறைச்சி துண்டுகளையும் கொடுத்தனுப்பினார்.

அவற்றை வாங்கிக்கொண்ட ஃபாத்திமா(ரலி) அவர்கள் ஒரு பாத்திரத்தில் வைத்து, "இந்த உணவு விசயத்தில் என்னைவிடவும், என்னைச் சேர்ந்தோரை விடவும் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்போகிறேன்" என்று கூறினார்கள். முன்னதாக அவர்கள் அனைவரும் வயிறார உண்ணவேண்டிய தேவையுடைய

வர்களாகவே இருந்தனர்.

பின்னர் ஹசன்(ரலி) அல்லது ஹுஸைன்(ரலி) அவர்களை அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களிடம் அனுப்பி அவர்களை அழைத்து வரச் செய்தார்கள். நபி(ஸல்) அவர்கள் ∴பாத்திமா(ரலி) அவர்களிடம் திரும்ப வந்தார்கள். அப்போது ∴பாத்திமா(ரலி) "அல்லாஹ்வின் தூதரே! என் தந்தையும் தாயும் தங்களுக்கே அர்ப்பணம்! இறைவன் சிறிதளவு உணவுப் பொருளை கொடுத்துள்ளான். அதைத் தங்களுக்காக பத்திரப்படுத்தி வைத்துள்ளேன்" என்று கூறினார்கள். மகளே! அதைக் கொண்டுவா" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

தொடர்ந்து பாத்திமா(ரலி) அவர்கள் கூறினார்கள் அந்த உணவுத்தட்டை எடுத்து வந்து திறந்து பார்த்தேன். அப்போது தட்டு நிரம்ப ரொட்டியும், இறைச்சியும் இருந்தன. அதைப் பார்த்து ஆச்சர்யப்பட்ட நான், அது அல்லாஹ்விடமிருந்து கிடைத்த அருள்தான் என்பதைப் புரிந்து கொண்டேன். அதனால் அல்லாஹ்வை புகழ்ந்தேன். அல்லாஹ்வின் தூதர் மீது ஸலவாத் கூறினேன்.

பின்னர் நபி(ஸல்) அவர்களுக்கு முன்னால் அந்த தட்டை கொண்டு வந்து வைத்தேன். அதைப் பார்த்த நபி(ஸல்) அவர்கள், அல்லாஹ்வை போற்றிப் புகழ்ந்துவிட்டு, "மகளே! இது உனக்கு எங்கிருந்து கிடைத்தது?" என்று கேட்டார்கள். அதற்கு நான், "என் தந்தையே! இது அல்லாஹ்விடமிருந்து கிடைத்தது. அல்லாஹ், தான் நாடுவோருக்கு கணக்கின்றி வழங்குவான்" என்று கூறினேன்."

உடனே அல்லாஹ்வை புகழ்ந்த நபி(ஸல்) அவர்கள், "மகளே! இஸ்ரவேல பெண்களுக்குத் தலைவி(யான மர்யமைப்) போன்று உன்னை ஆக்கிய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்! அவருக்கு (மர்யம்) இறைவன் ஏதேனும் உணவளித்து, அது குறித்து யாரேனும் அவரிடம் வினவினால், "இது அல்லாஹ்விடமிருந்து கிடைத்தது் அல்லாஹ், தான் நாடுவோருக்கு கணக்கின்றி வழங்குவான்" என்று கூறுவார்." என்று கூறினார்கள். (ஹதீஸ் சுருக்கம் நூல் முஸ்னது அபீயஅலா.)

நபிகள் நாயகம் அவர்கள் தன் மகளின் ஒரு நற்பண்பை பாராட்ட இயேசு(அலை) அவர்களின் அன்னையான மரியம்(அலை) அவர்களோடு சிலாகித்துக் கூறுவதை கிருஸ்துவ அன்பர்கள் கவனிக்க வேண்டும்.

அதோடு இந்த சம்பவத்தில் நாம் பெறவேண்டிய முக்கியமான படிப்பினை என்னவெனில், நமக்கு ஒரு நலம் விளையுமானால் இது அவரால் விளைந்தது் இவரால் விளைந்தது என்று பெருமையடிக்காமல், இது இறைவன் வழங்கியது அவன் நாடியவர்களுக்கு கணக்கின்றி வழங்குவான் என்ற வார்த்தை நம்மிடம் வெளிப்படவேண்டும். அவ்வாறு அனைத்திலும் இறைவனை முன்னிலைப் படுத்தினாலே ஆணவம்-பெருமை அடிபட்டுப் போகும்.

● **வாசகர் எண்ணம் : இறைவனுக்கு கீழ்படியும் பண்பு யாரிடம் உள்ளதோ அவர்கள் எல்லோரும் முஸ்லிம்களே என்பதை டிசம்பர் இதழில் படித்து மகிழ்ச்சி அடைந்தேன். இதழ் முழுவதையும் இரண்டுமுறை படித்தேன். அருமையாக இருந்தது. சந்தோச மிகுதியால் என்னால் பொறுத்திருக்க முடியவில்லை. அதனால்தான் உங்களுக்கு ∴போன் போட்டு பேசுகிறேன். மிக்க நன்றி அய்யா. - டாக்டர் சாந்தகுமார், ஓமலூர்**

# இயேசுவைப் பற்றி முஸ்லிம்கள் அறிந்திருக்க வேண்டியவை

● "அல்லாஹ்வையும், எங்கள் மீது அருளப்பட்ட (வேதத்)தையும், இன்னும் இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், ய.்.கூப், அவர்களின் சந்ததியர் ஆகியோர் மீது அருள் செய்யப்பட்டவற்றையும், இன்னும் மூஸா, ஈஸா இன்னும் மற்ற நபிமார்களுக்கு அவர்களுடைய இறைவ னிடமிருந்து அருளப்பட்டவற்றையும் நாங்கள் விசவாசங் கொள்கிறோம். அவர்களில் எவரொருவரையும் பிரித்து வேற்றுமை பாராட்டமாட்டோம். நாங்கள் அவனுக்கே (முற்றிலும் சரணடையும்) முஸ்லிம்கள் ஆவோம்" என்று (நபியே!) நீர் கூறுவீராக. (அல்குர்ஆன் 3:84)

## இயேசுவின் வருகை பற்றி மரியாளுக்கு நன்மாராயம்

● வானவர்கள் கூறினார்கள். "மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் தன்னிடமிருந்து வரும் ஒரு வார்த்தையைக் கொண்டு உமக்கு (ஒரு மகவு வரவிருப்பது பற்றி) நன்மாராயங் கூறுகிறான். அதன் பெயர் மஸீஹ். மர்யமின் மகன் ஈஸா என்பதாகும். அவர் இவ்வுலகத்திலும், மறு உலகத்திலும் கண்ணியமிக்கோராகவும் (இறைவனுக்கு) நெருங்கி இருப்பவர்களில் ஒருவராகவும் இருப்பார். ""மேலும், அவர் (குழந்தையாகத்) தொட்டிலில் இருக்கும்போதும், (பால்யம் தாண்டி) முதிர்ச்சியடைந்த பருவத்திலும் அவர் மக்களுடன் பேசுவார். இன்னும் (நல்லொழுக்கமுடைய) சான்றோர்களில் ஒருவராகவும் அவர் இருப்பார்." (அச்சமயம் மர்யம்) கூறினார். "என் இறைவனே! என்னை ஒரு மனிதனும் தொடாதிருக்கும்போது எனக்கு எவ்வாறு ஒரு மகன் உண்டாக முடியும்?" (அதற்கு) அவன் கூறினான். "அப்படித்தான் அல்லாஹ்தான் நாடியதைப் படைக்கிறான். அவன் ஒரு காரியத்தைப் படைக்கிறான். அவன் ஒரு காரியத்தைத் தீர்மானித்தால், அவன் அதனிடம் "ஆகுக" எனக்கூறுகிறான், உடனே அது ஆகி விடுகிறது." (அல்குர்ஆன் 3:45-47)

*('வார்த்தை' என்றால் "ஆகுக" என்ற இறைகட்டளையே என்பதை மேற்படி வசனத்தில் இருந்து புரிந்து கொள்ளலாம்)*

## இயேசு நாதர் (அலை) அனுப்பப்பட்டதன் நோக்கம்

● இயேசு நாதர் (அலை) இஸ்ரவேலர்களைப் பார்த்துக் கூறினார்: 'எனக்கு முன் இருக்கும் தவ்ராத்தை மெய்பிக்கவும், உங்களுக்கு விலக்கி வைக்கப்பட்டவற்றில் சிலவற்றை உங்களுக்கு அனுமதிக்கவும் உங்கள் இறைவனிடமிருந்து (இத்தகைய) அத்தாட்சியை உங்களிடம் நான் கொண்டு வந்திருக்கிறேன் ஆகவே நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் என்னைப் பின் பற்றுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வே என்னுடைய இறைவனும், உங்களுடைய இறைவனும் ஆவான் ஆகவே அவனையே வணங்குங்கள் இதுவே நேரான வழியாகும்.' (அல்குர்ஆன் 3:50-51)

## இயேசு நாதர் (அலை) அவர்கள் செய்த அற்புதங்கள்

● இஸ்ராயீலின் சந்ததியினருக்குத் தூதராகவும் (அவரை ஆக்குவான் அவர்:) 'நான் உங்கள் இறைவனிடமிருந்து ஓர் அத்தாட்சியுடன் நிச்சயமாக வந்துள்ளேன். நான் உங்களுக்காக களிமண்ணால் ஒரு பறவையின் உருவத்தை உண்டாக்கி நான் அதில் ஊதுவேன் அது அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு (உயிருடைய) பறவையாகிவிடும். பிறவிக் குருடர்களையும், வெண் குஷ்டரோகி களையும் குணப்படுத்துவேன் அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு

இறந்தோரையும் உயிர்ப்பிப்பேன் நீங்கள் உண்பவற்றையும், நீங்கள் உங்கள் வீடுகளில் சேகரம் செய்து வைப்பவற்றையும் பற்றி நான் உங்களுக்கு எடுத்துக் கூறுவேன். நீங்கள் நம்பிக்கையாளர் ஆக இருந்தால் நிச்சயமாக இவற்றில் உங்களுக்குத் திடமான அத்தாட்சி இருக்கிறது' (என்று கூறினார்). (அல்குர்ஆன் 3:49)

## இயேசு (அலை) அவர்களின் சீடர்கள் இறைவனுக்குக் கீழ்படிந்தவர்களாகவே (முஸ்லிம்களாகவே) இருந்தனர்.

● அவர்களில் இறைமறுப்பு இருப்பதை (அதாவது அவர்களில் ஒரு சாரார் தம்மை நிராகரிப்பதை) ஈஸா உணர்ந்த போது: 'அல்லாஹ்வின் பாதையில் எனக்கு உதவி செய்பவர்கள் யார்?' என்று அவர் கேட்டார் (அதற்கு அவருடைய சிஷ்யர்களான) ஹவாரிய்யூன்: 'நாங்கள் அல்லாஹ்வுக்காக (உங்கள்) உதவியாளர்களாக இருக்கிறோம், நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம் திடமாக நாங்கள் (அவனுக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களாக இருக்கின்றோம், என்று நீங்கள் சாட்சி சொல்லுங்கள்' எனக் கூறினர்.

'எங்கள் இறைவனே! நீ அருளிய (வேதத்)தை நாங்கள் நம்புகிறோம், (உன்னுடைய) இத்தூதரை நாங்கள் பின்பற்றுகிறோம் எனவே எங்களை (சத்தியத்திற்கு) சாட்சி சொல்வோருடன் சேர்த்து எழுதுவாயாக!' (என்று சிஷ்யர்களான ஹவாரிய்யூன் பிரார்த்தித்தனர்.) (அல்-குர்ஆன் 3:52-53)

## இயேசுநாதரைக் கொல்லவந்தவர்களின் சதி முறியடிக்கப்பட்டது, விண்ணேற்றம் செய்யப்பட்டார்

*இறைவன் கூறுகிறான்: -*

● 3:54-55. (ஈஸாவை நிராகரித்தோர் அவரைக் கொல்லத்) திட்டமிட்டுச் சதி செய்தார்கள் அல்லாஹ்வும் சதி செய்தான் தவிர அல்லாஹ் சதி செய்பவர்களில் மிகச் சிறந்தவன் ஆவான்.

'ஈஸாவே! நிச்சயமாக நான் உம்மைக் கைப்பற்றுவேன் இன்னும் என்னளவில் உம்மை உயர்த்திக் கொள்வேன் நிராகரித்துக் கொண்டிருப்போருடைய (பொய்களில் நின்றும்) உம்மைத் தூய்மைப்படுத்துவேன் மேலும் உம்மைப் பின்பற்றுவோரை கியாம நாள் வரை நிராகரிப்போருக்கு மேலாகவும் வைப்பேன் பின்னர் உங்களுடைய திரும்புதல் என்னிடமே இருக்கிறது (அப்போது) நீங்கள் தர்க்கம் செய்து கொண்டிருந்தது பற்றி நான் உங்களிடையே தீர்ப்பளிப்பேன்' என்று அல்லாஹ் கூறியதை (நபியே! நினைவு கூர்வீராக)!

● 4:157-158. மேலும் அவர்கள் தம் நிராகரிப்பி(ல் எல்லை மீறிவிட்டத)னாலும் மர்யம் மீது பெரியதொரு அவதூறை அவர்கள் கூறியதாலும், அல்லாஹ்வுடைய தூதரும் மர்யமின் மகனுமான ஈஸா - மஸீஹை நாங்கள் தாம் கொன்றோம் என அவர்கள் கூறியதாலும் (அவர்களை நாம் சபித்தோம்). - உண்மையில் அவர்கள் அவரைக் கொலை செய்யவுமில்லை, அவரைச் சிலுவையில் அறையவுமில்லை. மாறாக, அவருடைய நிலைமை அவர்களுக்குச் சந்தேகத்துக்குரியதாக ஆக்கப்பட்டு விட்டது. மேலும், எவர்கள் ஈஸா விஷயத்தில் கருத்து வேறுபாடு கொண்டார்களோ அவர்கள் இதுபற்றி சந்தேகத்திலே இருக்கின்றார்கள். யூகத்தைப் பின்பற்றுவதைத் தவிர இதுபற்றி வேறு எந்த அறிவும் அவர்களிடத்தில் இல்லை. நிச்சயமாக அவர்கள் அவரை - மஸீஹை - கொலை செய்யவேயில்லை. மாறாக அல்லாஹ் அவரைத் தன்பக்கம் உயர்த்திக் கொண்டான். அல்லாஹ் வலிமை மிக்கவனும் நுண்ணறிவாளனுமாய் இருக்கின்றான்.

# இயேசுநாதரின் இரண்டாம் வருகை

இறைவனால் தன்னளவில் உயர்த்தப்பட்ட இயேசுநாதர் மீண்டும் பூமிக்கு எவ்வாறு, எங்கு வருவார்கள் என்பதைப் பின்வரும் நபிமொழிகள் எடுத்துரைக்கின்றன:

- டமாஸ்கஸ் நகரின் கிழக்குப் பகுதியில் உள்ள வெள்ளை மினாராவு(கோபுரத்து)க்கு அருகில் அவர் இறங்குவார். இரண்டு வானவர்களின் சிறகுகள் மீது தன் கைகளை வைத்தவராக இறங்குவார். அவர் தலை குனிந்தால் தலையில் நீர் சொட்டும், தலையை உயர்த்தினால் முத்துப்போல் தண்ணீர் சிதறும். அவரது மூச்சுக்காற்று படும் எந்த இறை மறுப்பாளரும் இறந்தே போவார். பின்னர் தஜ்ஜாலை (அந்திக கிறிஸ்துவை)த் தேடுவார்கள். "லுத்" எனும் ஊர்வாசலில் அவனைப் பிடித்துக் கொல்வார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்- திர்மிதீ).
- "எனது உயிரை தன் கையில் வைத்திருப்பவன் மீத சத்தியமாக, மர்யமின் மகன் (ஈஸா), உங்களிடம் நீதி செலுத்துபவராக, தீர்ப்பு வழங்குபவராக இறங்குவார், சிலுவையை முறிப்பார், பன்றியைக் கொல்வார், ஜிஸ்யா வரியை நீக்குவார், (தர்மம்) வாங்குவதற்கு எவருமே இல்லாத அளவுக்கு செல்வம் கொழிக்கும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி) நூல்கள் - புகாரீ, முஸ்லிம்.

தஜ்ஜால் வந்து, பூமியில் பெரும் குழப்பம் விளைவிக்கும் காலகட்டத்தில் ஈஸா நபி (அலை) இறங்கி வந்து, அவனைத் தேடிக் கொல்வார்கள்.

## யஹ்ஜூஜ், மஹ்ஜூஜ் வருகை

இயேசு பூமியில் மீண்டும் வந்து வாழ்ந்து கொண்டிருக்கும் காலகட்டத்தில்தான் யஹ்ஜூஜ், மஹ்ஜூஜ் என்ற கொடியவர்கள் வருவார்கள்.

"இறுதியில் யஹ்ஜூஜ், மஹ்ஜூஜ் கூட்டத்தினர் திறந்து விடப்படுவார்கள், உடனே அவர்கள் (வெள்ளம் போல்) ஒவ்வொரு மேட்டிலிருந்தும் விரைந்து வருவார்கள்"... (அல் குர்ஆன் 21:96).

உருவத்தில் சிறிய அவர்கள் அதிகமாக இனப்பெருக்கம் செய்பவர்களாக இருப்பார்கள். மனிதர்களால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அவர்கள் பெருங்குழப்பங்களை விளைவிப்பார்கள்.

## இயேசுவின் பிரார்த்தனையால் அழிவர்!

"யஹ்ஜூஜ் - மஹ்ஜூஜ் கூட்டத்தினரை அல்லாஹ் வெளிப்படுத்துவான். அவர்கள் முதல் கூட்டத்தினர் ஒரு நீரோடையைக்கண்டு அதன் நீரைப்பருகுவார்கள். அடுத்த கூட்டத்தினர் வரும் போது (தண்ணீர் இல்லாமல் இருப்பதைக் கண்டு) "அந்த இடத்தில் ஒரு காலத்தில் தண்ணீர் இருந்தது" என்று கூறுவார்கள். பின்னர் பைத்துல் முகத்தஸ் பகுதியில் உள்ள ஒரு மலையை அடைவார்கள்.

"பூமியில் உள்ளவர்களைக் கொன்று விட்டோம். வாருங்கள்! வானில் உள்ளவர்களைக் கொல்வோம்" என்று கூறுவார்கள், தங்கள் அம்புகளை வானை நோக்கி எய்துவார்கள். அவர்களின் அம்புகளில் இரத்தம் பூசி அல்லாஹ் திருப்பி அனுப்புவான். பிறகு அவர்கள் ஈஸா நபியையும், அவரின் தோழர்களையும் முற்றுகையிடுவார்கள்.

பின்னர், ஈஸா நபியும், அவர்களின் தோழர்களும் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வார்கள். அல்லாஹ் புழுக்களை அவர்களிடம் அனுப்புவான். அந்தப் புழுக்களின் தாக்குதல் காரணமாக அனைவரும் ஒரேயடியாக செத்து விடுவார்கள். பின்னர். ஈஸா நபி அவர்களும் அவர்களின் தோழர்களும் (மலையிலிருந்து) தரைக்கு வருவார்கள். யஹ்ஜூஜ் மஹ்ஜூஜ் கூட்டத்தரின் (பிணங்களின்) நாற்றமும், நெருக்கடியும் ஒரு சாண் அளவு இடத்தைக் கூட விடாது பரவி நிற்கும். பின்னர் ஈஸா நபி அவர்களும், அவர்களின் தோழர்களும் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வார்கள். உடனே அல்லாஹ் ஒட்டகங்களின் கழுத்துக்கள் போன்ற வடிவில் சில பறவைகளை அனுப்புவான். அப்பறவைகள் பிணங்களை சுமந்து சென்று அல்லாஹ் நாடிய இடங்களில் போட்டுவிடும்“ என்று நபி (ஸல்) கூறினார்கள். (நூல் - முஸ்லிம்).

## இயேசுவின் நல்லாட்சி


(யஹ்ஜூஜ் - மஹ்ஜூஜ் கூட்டத்தினர் அழிவுக்குப் பின்) அவர்கள் (பயன்படுத்திய) அம்புகள், வில், அம்பாரத் தூளிகள் போன்றவற்றை முஸ்லிம்கள் ஏழு ஆண்டுகளுக்கு விறகாகப் பயன்படுத்துவார்கள். பின்னர் அல்லாஹ் மழையை அனுப்புவான், அனைத்து வீடுகளையும் பூமியையும் அந்த மழை கண்ணாடி போல் கழுவி விடும். பின்னர் பூமியை நோக்கி, “உன் கனிகளை முளைக்கச் செய்! உன்னிடமிருந்த அருள்வளத்தையும் திரும்பக்கொடு“ என்று கூறப்படும். (நல்ல விளைச்சல் ஏற்படும்) அந்நாளில் ஒரு மாதுளம் பழத்தை ஒரு கூட்டமே உண்பார்கள். அதன் தொலி மூலம் (குடை போல் அமைத்து) நிழல் பெறுவார்கள். அந்த அளவுக்கு அது பெரிதாக இருக்கும். பாலிலும் பரக்கத் செய்யப்டும். ஒரு ஒட்டகத்தில் கறக்கப்படும் பால், ஒரு பெரிய கூட்டத்தாருக்குப் போதுமானதாக இருக்கும். ஒரு மாட்டில் ஒரு முறை கறக்கப்டும் பால் ஒரு சமூக மக்களுக்குப் போதுமானதாக இருக்கும். மக்களின் இந்த வளமான வாழ்க்கையின் போது, அல்லாஹ் ஒரு சுகமானக் காற்றை அனுப்புவான். அக்காற்று அக்குள்வரை செல்லும். மூ.்.மின்கள், முஸ்லிம்கள் அனைவரின் உயிர்களும் கைப்பற்றப்படும். கழுதைகள் வெருண்டோடுவது போல் வெருண்டோடுவர். கெட்ட மக்கள் மட்டுமே எஞ்சி நிற்பர். அவர்கள் இருக்கும் போதுதான் மறுமைநாள் நிகழும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் : நவ்வாஸ் இப்னு ஸம்ஆன் (ரலி) நூல் - திர்மிதீ.

(தஜ்ஜாலைக் கொன்றபின்) நாற்பது ஆண்டுகள் ஈஸா நபி (அலை) அவர்கள் இந்த பூமியில் நேர்மையான தலைவராக, சிறந்த நீதிவானாகத் திகழ்வார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் : ஆயிஷா (ரலி) நூல்- அஹ்மத்.

**வாசகர் எண்ணம்: டிசம்பர் இதழ் மூலம் எத்தனயோ நாளாக எனக்குள் இருந்த ஐயங்கள் விடைகிடைக்கப் பெற்றேன். பொருள்பொதிந்த விளக்கங்கள் மனதைப் பக்குவப் படுத்தின. இறைத்தூதர்கள் வரிசையில் இயேசுவும் நபிகளும் நிறைநிலை விளக்கங்கள் சிந்திக்க வைத்தன. உங்களின் தூய தொண்டு வணங்கத்தக்கது.**

**- தஞ்சை என். ஜே. கந்தமாறன், சென்னை**

# கிருஸ்தவர்களுக்கு நபிகளாரின் அன்பு மடல்



முஹம்மது நபி(ஸல்) தன்னுடைய ஆளுமையின் கீழ் உள்ள சிறுபான்மையினரை எப்படி நடத்தினார்கள் என்பதற்கும் இது ஒரு சான்று.

பல ஆதாரப்பூர்வமான வரலாற்று பதிவுகள், St.Catherine (Egypt) நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. துருக்கிய இஸ்லாமிய படைகள், எகிப்தை வெற்றி கொண்டபோது, அங்கே உள்ள மடத்தில் இருந்து எடுக்கப்பட்டு, இஸ்தான்புல் அரண் மனையில் பாதுகாப்புடன் வைக்கப் பட்டது. இதனுடைய மூல பிரதி, இன்றும் இஸ்தான் புல் அருங்காட்சியத்தில் உள்ளது.

**கடிதத்தின் சுருக்கம்:**

**அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மதிடமிருந்து, அருகில், மேலும் தொலைவில் உள்ள கிருத்துவர்களுக்கு இந்த உடன்படிக்கையின் மூலம் சொல்வது என்னவென்றால், நாங்கள் உங்களோடு இருக்கின்றோம்.**

**நிச்சயமாக, நான், இறை அடியார்கள், என் உதவியாளர்கள் மற்றும் என்னை பின்பற்றுபவர்கள், கிருத்துவர்களை பாதுகாப்போம், ஏனென்றால் அவர்கள் என் குடிமக்கள். மேலும் அல்லாஹ்வின் மீது ஆணையாக அவர்கள் விரும்பாததை விட்டும் நான் தடுத்துக்கொள்வேன் .**

**அவர்களின் மீது எந்த கட்டாயமும் இல்லை. அவர்களின் நீதிபதிகள், பொறுப்பிலிருந்து நீக்கப்படமாட்டார்கள் . துறவிகள் மடத்திலிருந்து நீக்கப்படமாட்டார்கள். கிறிஸ்துவர்களின் ஆலயங்களை இடிப்பதற்கோ, சேதப்படுத்துவதற்கோ யாருக்கும் அனுமதி இல்லை. ஆலயங்களில் இருந்து எதையும் முஸ்லிம்கள் எடுத்துச் செல்லக் கூடாது, யாராவது மீறி செய்தால், அல்லாஹ்வின் கட்டளைக்கும், அவன் தூதருக்கும் மாறு செய்தவராவார். உண்மையிலேயே, கிருத்துவர்கள் என்னுடைய நண்பர்கள், மேலும் அவர்கள் வெறுப்பதிலிருந்து விலகிக்கொள்ள என்னுடைய அனுமதிப் பட்டயத்தை பெற்றுள்ளனர்.**

**அவர்களை யாரும் நாட்டைத் துறந்து செல்லுமாறு கட்டாயப்படுத்தக் கூடாது. தங்களை பாதுகாத்துக்கொள்ள, முஸ்லிம்கள்தான் போரிட வேண்டுமே தவிர, கிறிஸ்துவர்களை தங்களோடு சேர்ந்து போரிடுமாறு கட்டாயப்படுத்தக்கூடாது. கிறிஸ்துவப் பெண்ணின் சம்மதம் இல்லாமல் ஒரு முஸ்லிம் அவளை திருமணம் செய்யக்கூடாது, அவள் தன்னுடைய ஆலயத்திற்கு சென்று வழிபடுவதை தடுக்கக்கூடாது.**

**அவர்களுடைய ஆலயங்கள் கண்ணியப் படுத்தப்படவேண்டும். அவைகள் பழுது பார்க்கப்படுவதை விட்டும் தடுக்கக்கூடாது. இறுதி நாள் வரை உள்ள முஸ்லிம்கள் இந்த உடன்படிக்கையை மீறக்கூடாது.**

முழு விபரத்தையும் இந்த லிங்கில் சென்று பார்க்கலாம்.

http://newsrescue.com/letter-to-all-christians-from-prophet-muhammad-sa/#axzz3eOJkMtJF

# இணையக் காத்திருக்கும் இருபெரும் சமூகங்கள்

Rs. 20-

- இறைத்தூதர்கள் வரிசையில் இயேசு நாதரும் முஹம்மது நபியும்
- வாழ்நாள் நெடுகிலும் அற்புதங்கள்! அவரே இயேசு!
- இயேசுநாதரை களங்கங்களில் இருந்து காத்த தேற்றரவாளர்
- இறுதி வேதத்தில் இயேசு நாதர் பற்றிய 100% உண்மைகள்
- முஹம்மது நபியவர்களின் முக்கியத்துவம்
- தேற்றரவாளரின் சிறப்புக்கள்
- திருக்குர்ஆனில் இயேசு நாதரின் அற்புதப் பிறப்பு
- கல்லெறி தண்டனையில் இருந்து அன்னையைக் காப்பாற்றியது எது?
- இயேசுவிடமிருந்து முஸ்லிம்கள் கற்கும் பாடங்கள்
- இயேசுவின் தோற்றமும் விண்ணேற்றமும்
- இயேசுவின் பாட்டியிடமிருந்து மனிதகுலம் பெறும் பாடங்கள்
- அன்னை மரியாளிடமிருந்து மனிதகுலம் பெறும் பாடங்கள்
- இயேசுவின் பிறப்பில் நாம் பெறும் பாடங்கள்
- இயேசுவைப் பற்றி முஸ்லிம்கள் அறிந்திருக்க வேண்டியவை
- இயேசுநாதரின் இரண்டாம் வருகை
- கிருஸ்தவர்களுக்கு நபிகளாரின் அன்பு மடல்

**திருக்குர்ஆன் நற்செய்தி மலர்**

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

● இந்த இதழ் உங்கள் இல்லம் தேடி வர உங்கள் முகவரியை 9886001357 என்ற எண்ணுக்கு SMS செய்யவும். ● நான்கு மாதங்கள் இலவசம்.

வெளியீடு : **House of Peace,**
PO Box no. 1726, No.501, 3rd cross,Syed Block, AS palya,
Bangalore 560017 Ph. 9886001357 email: amkasim@yahoo.com
www.quranmalar.com